சுதந்திரன்
SUTANTIRAN

புத்தம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 மாசி திங்கள் 19-ம் நாள் (3—3—1967) வெள்ளிக்கிழமை ஜுலை 20 இதழ் 31

# எதிர்க்கட்சிகளின் பூச்சாண்டி

## தி. மு. க. வெற்றியை பயன்படுத்த தந்திரம்

**தி. மு.க. வெற்றியை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த இலங்கையிலுள்ள எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. நடக்கவிருக்கும் இடைத்தேர்தல்களில் இப்பிரச்சினையைப் பெரிதாகச் சிலாகிக்க எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இப்பிரச்சினையைக் கொலன்னுவ இடைத்தேர்தலிலும் மக்கள் முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

தி. மு. க. வெற்றியால் இலங்கையில் ஒரு தனித் தமிழ் நாடு தோன்றக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், சிறிமாவோ—சாத்திரி உடன்படிக்கை அமுல் முற்ருகத் தடைப்படும் என்றும் எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்யத் திட்டமிட்டுள்ளன.

தி. மு. க. அகண்ட தமிழ் சாம்ராஜ்யம் ஒன்றைத் தோற்றுவிக்கும் கொள்கை உடை... என்றும், இதன் வெற்றி ...கேள்வியுற்றதும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்திருப்பதாகவும் அதே நேரத்தில் வடபகுதியில் பெரும் கூட்டங்கள் நடைபெற்றதாகவும், வடபகுதிக் கடற்கரைகளில் தி. மு. க. கொடிகள் பறக்கவிடப்பட்டதாகவும், இலங்கையில் தமிழ் பகுதிகளையும், தமிழ் நாட்டையும் இணைத்து ஒரு தமிழ் சாம்ராஜ்யத்தை தி. மு. க. வும் தமிழரசுக் கட்சியும் இனி நிறுவும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிங்கள மக்களிடம் பிரச்சாரம் செய்யவிருப்பதுடன் தமிழ் சாம்ராஜ்யம் ஏற்படுவது குறித்து நாடெங்கணும் சிங்களமக்களை எச்சரிக்கை செய்யப் போகின்றனராம்.

சிறிமாவோ-சாத்திரி உடன்படிக்கையைப் பொறுத்தவரையில் தி. மு. க. அதனை ஏலவே கண்டித்திருப்பதுடன் திரு. சி. என். அண்ணுதுரை 'வாசிங்டன்போஸ்ட்' பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியில் இவ்வுடன்படிக்கையினைத் தாம் ஏற்றுக் கொள்ள வில்லை என்று கூறியதை எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுவதுடன்; இந்திய மத்திய அரசு இன்று பலவீனமான நிலையில் இருப்பதால் தமிழ் நாட்டின் முடிசூடாமன்னனுகத்திகழும் திரு. அண்ணுதுரை கூறுவதை ஏற்றுக்கொள்ளும் என்றும் இதனுல் உடன்படிக்கை ரத்தாகும் ஆபத்து இருப்பதாகவும் சிங்களப் பொதுமக்களிடம் எடுத்துக்கூறத் திட்டமிட்டிருக்கிறுர்கள்.

## வடபகுதியில் பிரஞ்சு நிபுணர்

**வட பகுதியில் பெற்றேல் பெறும் சாத்தியக்கூறு உண்டா என்பதை ஆராய்ந்து கண்டுபிடிப்பதற்காக பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த நில நூலியல் விற்பன்னர்களைக் கொண்ட குழுவொன்று இம்மாதம் இலங்கை வரவிருக்கிறது. எரிபொருள் கூட்டரவு இற்தகென ரூபா பத்துலட்சம் ஒதுக்கியுள்ளது என்று தெரிகிறது.**

ரஷிய ஆராய்ச்சிக் கப்பல் ஒன்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வட பகுதியில் மன்னுரை அடுத்த பிரதேசங்களில் எரிபொருள் (பெற்றேல்) இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாகக் கூறியதைத் தொடர்ந்து திட்டமற்ற முறையில் சில முயற்சிகள் ஆங்காங்கே நடைபெற்றுவந்தன. இப்பொழுது எரிபொருள் கூட்டரவு இது பற்றி ஒரு முடிவான ஆராய்ச்சியைச் செய்யும் நோக்கத்துடன் ரூபா பத்து இலட்சம் ஒதுக்கியிருப்பதுடன் உலக புவிநூலியல் விற்பன்னர்களின் உதவியையும் நாடியுள்ளது.

எரிபொருள் கூட்டரவின் இத்திட்டத்தின் கீழ் முதல் கோஷ்டி பிரான்ஸிலிருந்து இம் மாதம் இலங்கை வருகிறது. இக் கோஷ்டி வடபகுதியில் ஒரு விரிவான ஆராய்ச்சியை நடாத்தும்.



## தமிழ் வாழ்க

தமிழ் பேச்சின் வலிமையினைக் கூட்டினுர்கள். தமிழ் எழுத்தின் கூர்மையையும் தீட்டினுர்கள். "அமிழ்தான மொழி" யென்று வாயால் கூறி அமையாது, பல செயல்கள் காட்டினுர்கள். உமிழார்கள் தமிழ் மீதில் பிறர் போல்! தீயில் உடல் வேக தமிழுக்காய், உழைத்தோர் ஆள தமிழ் வாழ்வு தமிழ் நாட்டில் விளைக! அந்தத் தமிழ் நாடு தமிழ் நாடேயாகி வாழ்க!

—பாணன்.

## தமிழரசாரின் திட்டம்

வடபகுதியைக் கைத்தொழில் பிரதேசமாக்கும் திட்டம் ஒன்று தமிழரசுக் கட்சித் தலைமைப் பீடத்தில் பரிசீலனை செய்யப் பட்டுவருவதாகவும், இத்திட்டம் விரைவில் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிகிறது. இத்திட்டத்தின் முதற்படியாக மின்சார விநியோகம் வடபகுதியில் அதிகரிக்கப் படும்.

தமிழ்நாட்டு கிராம விஸ்தரிப்பு முறையைப் பின்பற்றி வடபகுதியையும் கைத்தொழில் மயமாக்கும் திட்டம் ஒன்றை தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடம் ஆராய்கிறது. இத்திட்டத்தின் பிரகாரம் கிராமங்கள் தோறும் மின்சார உதவிகொண்டு சிறு கைத்தொழில்களை தனியாகவும், கூட்டுறவு அடிப்படையிலும் செய்வதற்கு வழி ஏற்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

இப்புதிய திட்டம் அமுல் நடாத்தப்படும் பொழுது இரும்புவேலை, மரவேலை செய்பவர்கள் அதிக பயனடைவார்கள் என்றும் அத்துடன் வடபகுதிக் கிராமங்கள் எல்லாம் மின்சார வசதி உடையனவாகத் திகழும் என்றும் தெரியவருகிறது.

வடபகுதிக் கிராமங்களைக் கைத்தொழில் மயமாக்குவதன் முதற்படியாக மின்சார விநியோகம் இந்த ஆண்டுக்குள் வடபகுதி பூராவும் விநியோகிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் சில இப்பொழுதே கவனிக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

## யாரோ இவர் யாரோ?

உலகம் சுற்றுவதையே அண்மைக் காலத்தில் தொழிலாகக் கொண்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விரைவில் தமிழ் நாடு செல்லலாம் என்றும் இவர் தமிழ் நாட்டின் தலைநகரில் மூன்று மாதங்களுக்குக் குறையாமல் தங்கலாம் என்றும் கூறப்படுகிறது. இப்பிரதிநிதி தமிழ்நாடு செல்வதன் முக்கிய நோக்கம் சென்னையில் நடைபெறவிருக்கும் இரு சினிமா நடிகர் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் எதிரி பக்கத்திற்கு உதவுவதற்கே என்றும் தெரிகிறது.

சம்பந்தப்பட்ட தமிழ்ப் பா. உறுப்பினரை இவ்வழக்கில் ஆஜராகுமாறு கொழும்பில் உள்ள எதிரியின் உறவினர்கள் கடந்த இரு வாரங்களாக நெருக்கி வருகிறுர்கள் என்றும் முதலில் அவ்வழக்கில் நேரடியாக ஆஜராவதாகக் கூறிய அவர் இந்திய தேர்தல் முடிவுகளை அடுத்து தான் அப்படி பகிரங்கமாகத்தோன்ற முடியாது என்றும் திரைமறைவிலிருந்து கொண்டு உதவிகளை வழங்க முடியும் என்றும் கூறியுள்ளார் என்று நம்பப்படுகிறது.

குறிப்பிட்ட இப்பாராளுமன்ற உறுப்பினர் ஏற்கனவே தனது பெயரை சென்னை நீதிமன்றத்திலும் பதிவுசெய்து வைத்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.






இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இலக்கிய பண்பு

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவ்வகையில் இன்றுசிறுவர் இலக்கியத் துறையின் வளர்ச்சியில் ஓர் மலர்ச்சி காணப்படினும் தமிழ் நாட்டுடன் ஒப்பிடுமிடத்து குறையே தென்படுகிறது. அங்கு நீண்ட காலமாக வெற்றிகரமாக சிறுவர்க்கான வாரதிங்களிதழ்கள் வெளிவருவதைக் கொண்டே இதனைக் கூறலாம். வெண்ணிலா, மாணவமலர், மாணவ முரசு, சிறுவர் சுடர் போன்ற பல இதழ்கள் இங்கு ஈழத்தில் வெளிவந்ததையும் மறைத்தல் ஆகாது.

அறிவியற் துறையில் நூல்கள் வெளிவராததும் பெருங் குறையாகும். பாடப்புத்தகங்கள்தான் நிறைந்துள்ளன. சிறுவர் இலக்கியத் துறையில் எழுத்தாளர்களும் ஆர்வம் காட்டுவதில்லை. சிறந்த தமிழ் இலக்கியங்களுக்கான பரிசுகளை வழங்கும் அரசாங்க நிறுவனங்களும் சிறுவர் இலக்கியத்திற்கென்றே தனியான துறையினை வகுக்காதிருப்பதும் பெருங்குறையாகும். தனித் துறையினை அமைத்தால் இத் துறையின் வளர்ச்சிக்கு அது தூண்டுகோலாய் அமையும்.

இலங்கை வானொலியின் சிறுவர், பாலர் நிகழ்ச்சிகளில் இடம் பெறும் கவிதை கட்டுரை, கதை, நாடகம் போன்றவற்றை ஒலிபரப்பிற்குரிய தன்மையை விடுத்து இலக்கியப் பண்புகளுடைய தாய் நூலுருவில் அமைத்தலும் சிறப்பான பணியாம். பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், சிறுவர்க்குரியதான பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் அவசியமாகும்.

## துறை

சிறுவர் இலக்கியங்கள் அதிக அளவில் எழாததற்குரிய குறை ஒருபுறமிருக்கையில் எழுதப்படும் சிலவேனும் குறைகளின்றி இயற்றப்படுவதற்கு சிறுவர் இலக்கியப் பண்புகளின் துறைகளையும் இங்கு குறிப்பிடல் அவசியமாகின்றது. சிறப்பாக கவிதைகளுக்கும் பொதுவாக ஏனையதுறைகளுக்கும், இப்பண்புகள் பெரிதும் பொருந்துவனவாம்.

**க. நவசோதி**
**பி. ஏ. (சிறப்பு)**

(அ) சிறுவரது அனுபவத்திற்கு உட்பட்ட விஷயங்களாய் இருத்தல் வேண்டும். அகமகிழ்வும் உற்சாகமும் தரவல்லதாய் அவை இருத்தல் வேண்டும்.

(ஆ) மொழி நடையைப் பொறுத்த அளவில் தெளிவும் எளிமையும் அவசியமாம். தொடர்புள்ளதாய்ச் செல்லும் தன்மை வாக்கியத்திற்கு தேவையானதாம்

(இ) செய்யுளில் (கவிதையில்) சத்தமிகு நடை கையாளப்படுவது சிறப்புடையது. பொருள் விளங்காது போயினும் ஓசை இனிமையிலும் அழகிலும் செய்யுளோசை ரூபத்தில் சிறுர்ஈடுபடுவர்.

(ஈ) மனதைக் கவரும் படியான கதைகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் சேர்க்கலாம். இயற்கை வளம் விலங்கினம் பற்றிய கவிதைகளைச் சிறுவர் பெரிதும் விரும்பிக் கற்பர்.

(உ) ராசாராணி, துப்பறியும், கொள்ளைக்கார (தொடர்) கதைகளுக்கு எழுத்தாளர் அளிக்கும் முக்கியத்துவத்தினை குடும்பத்திலும், நண்பர்குழுவிலும், பாடசாலைச் சூழலிலும் இடம் பெறும் சம்பவங்களைக் கொண்ட கதைகளுக்கும் எழுத்தாளர்கள் அளிக்க வேண்டும்.

சிறுவர் இலக்கியத்தின் நிறைவுத் தன்மையையும் வளர்ந்தோருக்கான இலக்கியத்தோடு ஒப்பிடுமிடத்துக் காணப்படும் குறையினையும், அதன் பண்புகளின் துறையினையும் இவ்வாறு ஒருங்கு நோக்குவோருக்கு 'சிறுவர் இலக்கியம்' படைப்பது எளிதானதன்றென்பது தெட்டத்தெளிவாகும்.

(முற்றும்)

# சொந்தம்?

**புவன்**

ஈழமெங்கள் நாடு இது! எமக்கே சொந்தம்
என்றொருவர் ஆர்ப்பரித்தார் கேட்டேன்! அந்த
வேழமொத்த கோழை ஒரு நண்பன்.—எந்தன்
விட்டினிலே குடியிருக்கும் அன்பன்...பாவம்
ஆழமாய் நோக்குதற்கே அறிவில்லாத
அப்பாவி!! பெயர்கூட அப்புஹாமி!!
தோழர் என்றால் தோள் புடைப்பார்! ஐயோ அந்த
தொண்டரைப்போல் ஈழத்தில் பலபேர் கண்டேன்!!

ஈழத்தோர் என்கின்றபோது இங்கு
இன்தமிழர், முஸ்லீங்கள் பறங்கியர்கள்
வாழத்தான் துடிக்கின்றார் சொந்தநாட்டில்!!
வரையறுத்து வெறிதூண்டும் அற்பராலே
கோழைகளா நாமென்ற எண்ணம் ஓங்கிக்
கொதிக்கிறது குருதியெல்லாம்!! ஐயோவேண்டாம்!!
மூளையற்றோர் முணுமுணுப்பின் முடிவு தோல்வி!
மூத்தோரின் நாடு இது எமது சொத்தே!!

பதவிக்காய் ஏதேதோ பிதற்றுவார்கள்
படித்தறியாக் குற்றமிது!! எனினும் இங்கு
மதவெறியைத் தூண்டுவதைக் கண்டிக்கின்ற
மனப் போக்கே மனிதகுலம் விரும்பும் இன்று!!
எதுவேண்டும் வேறு இந்த வையந்தன்னில்
என்றேதோ இடித்துரைத்துச் சிரித்தேன்—நண்பன்
சிதறுண்ட சிந்தையுள் ஒளியைக் கண்டான்
''ஸ்ரீலங்கா'' எல்லோர்க்கும் சொந்தம் என்றான்!!

# சங்கப் பலகை

## குறிஞ்சி மலர்

தொகுப்பாசிரியர்: எஸ். எம். கார்மேகம்.
வெளியீடு: மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்.

கவிஞர் பாலாஜியின் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய குறிஞ்சி நிலத்து மங்கை ஒருத்தியின் பொங்கல் காட்சியை அட்டையாகத் தாங்கி வெளிவந்திருக்கும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஆண்டு வெளியீடான 'குறிஞ்சி மலர்' உள்ளேயும் நல்ல மணம் நிறைந்த மலராகவே மிளிருகிறது.

மலரைக் குறிஞ்சி நிலத்தவர்கள் மட்டுமல்ல வெளியில் உள்ளவர்களும் அலங்கரித்திருக்கிறார்கள். சென்னை மாநில கல்வி அதிகாரி நெ. து. சுந்தரவடிவேலு, சுதந்திரக்கட்சித் தலைவர் ராஜாஜி, தமிழ் நாட்டு நாவலாசிரியர் நா. பார்த்தசாரதி ஆகியோர் முத்துப்போன்று சிறுகட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

'பலி' மும்முனைக் குறுநாவலை மலைநாட்டு முன்னணி எழுத்தாளர்களாக விளங்கும் என். எஸ். எம். இராமையா, தெளிவத்தை எஸ். ஜோசப், சாரல் நாடன் ஆகியோர் எழுதியுள்ளார்கள். குறுநாவலைவிட மலரின் காப்பியப் பகுதி மலருக்கு அதிகப்படியான மணத்தை அளிக்கிறது. காப்பியப்பகுதியினை மு. ஈ. ஈழக்குமார், சி. பொன்னுத்தம்பி, தமிழோவியன், வழுத்தூர் ஒளியேந்தி, வி. கந்தவனம் ஆகியோர் அலங்கரித்துள்ளார்கள்.

மலைநாட்டு வாழ்க்கைமுறை வழிபாட்டு முறைகள் பற்றியும் எம். ஜெயராம், எம் வாமதேவன் ஆகியோர் எழுதியுள்ளார்கள். 'மலை நாடு தந்த கவிஞர்கோமான்' என்ற தலைப்பில் பெரும்புலவர் அப்துல் காதிறு பற்றி எம். ஏ. ரஹ்மான் எழுதியுள்ள கட்டுரை மூலம் ஈழத்து இலக்கியத்திற்கு மலைநாடு அன்றே உரிய பணியை ஆற்றியிருக்கிறது என்பது புலனாகிறது.

அழகு கொழிக்கும் குறிஞ்சி நிலத்து மலருக்குப் பொருத்தமான முறையில் [illegible] வாழ்க்கையும்' என்ற தலைப்பில் சக்தி அ. பாலையா ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இயற்கையின் சிறப்பு அக்கட்டுரையில் ஆராயப்பட்டிருக்கிறது. இலக்கியத்தில் மலர்கள்' என்ற தலைப்பில் இரா. சிவலிங்கமும் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். குளிர் நிறைந்த குறிஞ்சி நிலத்தில் மலர்ந்த மலருக்கு 'குளிர்' என்ற தலைப்பில் திரு. எஸ். பொன்னுத்துரை எழுதியுள்ள சிறுகதை சிறப்பாக அமைந்துள்ளது. சி. வி. யின் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற கவிதையும் குறிப்பிடக் கூடியதாக சிறப்புற்று அமைந்துள்ளது.

தேசிய ஒற்றுமை பற்றி பிரதமர் தனது ஆசிச் செய்தியில் வலியுறுத்தியிருக்கிறார். மொத்தத்தில் குறிஞ்சி மலர் பெயருக்கு ஏற்ப பெருமை பெற்றுள்ளது. தொகுப்பாசிரியர் கார்மேகத்தின் பணி பாராட்டுக்குரியது.

# நியதியோ?

**—வே. குமாரசாமி—**

குப்பை மேடது கொண்டுள நல்லெரு
குறைவி லாநிறை பெற்றுள போதினும்
வெப்பம் மிஞ்சிய காரணத் தாலது
விணி லேகடல் மேல்மழை யானது
தப்பி அங்கொரு ரோசமலர்ச் செடி
தவங்கி டந்து துவண்டு தளருது.
செப்ப மாகநீர் ஊற்றுனர் இல்லையேல்
சீர்நி றைமலர் பூத்துச் சிரிக்குமோ?

குளிர்நி லம்இது செழுமைப் பசளையும்
கொண்ட தாயினும் வேண்டிய போதெலாம்
தளிர்எ றிந்தெழும் தன்மையைத் தாங்கிய
தண்புலும் நிறை நஞ்சுறை முட்செடி
வளர, எத்த னையோவித மாகவே
வழிவ கைகள் வகுப்பவர் பற்பலர்.
அளவி லாத வழிவகுத் தாக்கினும்
அந்த நஞ்சும் அமுதென மாறுமோ?

படைத்த வன்அப் பாவை கடைவிழிப்
பார்வைக் கஞ்சித் தவம்தலைப் பட்டனோ?
சடைக்க ருங்குழல் சோர்ந்து தளர்வுற
சபல மின்றி வருகிழ வன், பணம்
படைத்த தால், அவன் பக்கல் அடைகிறான்
பருவக் காளை பார்த்துத் துடிக்கிறான்
கடைத்த லைப்படு காசு பொருளினால்
கன்னியின் நிலை உன்னத மாகுமோ?

# கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்கு நெடுஞ்சாலை

தெஹ்ரான், சிங்கப்பூர், இரங்கூன், சைகோன் ஆகிய இடங்களுக்கு மோட்டார் கார் மூலம் ஒரு உல்லாச பயணம்போகவிரும்புகிறீர்களா? அப்படியானால் இன்னும் மூன்று வருடங்கள் பொறுத்திருங்கள். 1970-ம் ஆண்டின் பிற்பகுதியில் அப்படியொரு பிரயாணத்தை நீங்கள் மேற்கொள்ள முடியும்! ஆசியக் கண்டத்தின் இருதயத்தினூடாக அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நீண்ட சாலை இன்னும் மூன்றாண்டுகளில் பூரணப்படுத்தப் பட்டு விடுவதோடு பொது மக்களின் பாவனைக்கும் திறந்துவிடப் பட்டுவிடும்.

இச்சாலை போட்டு முடிவடைவதற்கு 5000 ஆண்டு காலம் தேவைப்பட்டது. வனாந்திரங்கள், காடுகள், வழியாகவும் உயர்ந்த இமயத்தின் மேல் ஏறியும் செல்லும் குறிப்பிடக் கூடிய இந்தச் சாலையை அமைக்கும் திட்டத்துக்கு அத்திவாரம் எப்பொழுது போடப்பட்டது தெரியுமா? யேசு கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு!

மேற்கே பாரசீகத்திலிருந்து கிழக்கே தொலைப்பட்டுக் கொண்டிருக்கும் வியட்நாமுக்கு செல்வதற்கு அமைக்கப் பட்டுள்ள பல வீதிகளும், சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிடப்பட்ட பாதைகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தி[illegible]கள், ஆரிய கலாச்சார[illegible] முற்பட்ட நாகரீகமு[illegible] பாரசீக நாட்டவர்கள், வியாபார நோக்குடன், வனாந்தரங்களூடாக அலைந்து திரிந்த போது போடப்பட்டவை. பாரசீகர்களின் நாகரிகம், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள, மெக்ரான், லூனி நதிக்கரையோரங்களில் வசித்த மக்களிடம் பரவியது.

கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு, மகா அலெக்சாண்டர் தம்முடைய படைகளுடன், இந்தியா, பாகிஸ்தானுக்குள் நுழைந்த போதே, மத்திய கிழக்கு, சீனா ஆகிய நாடுகளூடாக செல்லும் வர்த்தகப் பாதைகள் இருந்திருக்கின்றன.

## ஒட்டகப் பாதைகள்

இந்தியாவிலிருந்த பௌத்த சமய பிரசாரகர்கள் பாரசீக வர்த்தகர்கள், ரோமானிய வணிகர்கள், முதலிய சகலரும் தூர கிழக்கு நாடுகளுக்கு செல்வதற்கு ஒட்டகப்பாதைகளை அமைப்பதற்கு உதவி புரிந்தார்கள்.

மார்க்கோபோலோ தமது நாடாகிய வெனிஸ் நகரிலிருந்து, மத்திய தரைக்கு குறுக்காக 'அன்ரியொச்' நகருக்கும் ஆசியாவுக்கு நடுவாக சீனத்துக்கும் யாத்திரை புரிவதற்கு வழிகாட்டிய பாதைகள்தான் இன்று ஆசியாவின் போக்குவரத்துப் பாதை அமைப்பின் முதுகெலும்பாக விளங்குகிறது.

ஆசியாவில் உள்ள பிரதான வீதிகளை ஒன்றுபடுத்தி ஒரு சர்வதேச அடிப்படையில் சாலைகளை அமைப்பது என்ற யோசனை, 1958-ம் ஆண்டு நடைபெற்ற ஐ. நா. சபையின் ஈ. கபே நிறுவனத்தின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## இரண்டு சாலைகள்

இரண்டு பிரதான பாதைகள் போடுவதற்கு ஆலோசனை

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

ஏ. ஜி. இம்மனுவேல்
யாழ்ப்பாணம்

கே: தற்பொது தமிழகத்தில் நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் எதைக்காட்டு கின்றது?

ப: வடநாட்டைவிட தென்னுட்டில் அரசியல் வளர்ச்சி அதிகம் என்பதைக் காட்டுகிறது.

ஃ

இ, இராமலிங்கம்
நெடுங்கேணி

கே: நீங்கள் எவ்வளவு காலமாகப் பதிலளிக்கிறீர்கள்?

ப: திருமணம் செய்ததிலிருந்து — திருமதி குயுக்தியார் கேள்விகள் கேட்கத் தொடங்கியதிலிருந்து நான் பதிலளிக்க ஆரம்பித்தேன்.

ஃ

ஜி. எச். மரியான்
சூரியகட்டைக்காடு

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். நான் அவளைப் பார்க்கும் போது படார் என்று கழுத்தை வெட்டுகிறாள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: மிகக் கவனமாக இருங்கள்! படார் என்று உங்கள் கழுத்தையும் வெட்டிவிடுவாள் அல்லது அறுத்துவிடுவாள்.

ஃ

செல்ற்றன்
கொழும்பு-13

கே: தமிழரசுக்கட்சி மூலம் வெற்றி பெற்ற மூதூர் முகம்மதலி, தமிழரசுக்கட்சியைப் பற்றி ஏதேதோ கன்னு பின்னுவென்று பிதற்றிக்கொண்டு திரிகிறாரே. அவர் விடயத்தில் கட்சி ஏன் இன்னும் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ப: கட்சி அவர்மீது நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஃ

பி[illegible]கானந்தன்
உ[illegible]பிட்டி

கே: ஓய் குயுக்தியே! உனக்கு தர்க்க சாத்திரம் தெரியுமா?

ப: ஆம், தர்க்கம் செய்யாமல் என்னல் பேசவும் முடியாது. எழுதவும் முடியாது.

ஆர். பாலகிருஷ்ணன்.
மாத்தளை

கே: சீதனத்திற்காகவே திருமணம் செய்யும் தற்கால இளைஞர்களைப்பற்றி குயுக்தியாரின் கருத்தென்ன?

ப: படித்துப் பட்டம்பெற்று வேலையின்றி இருக்கும் வாலிபர்களுக்குச் சீதனம் வாழ்க்கை வசதிக்கு பயன்படுமல்லவா? அதனுற் தான் சீதனத்துக்காகவேமணம் செய்ய முன்வருகின்றனர். ஆனல் இந்தப் பாழாய்ப்போன பெற்ரேர் வேலையிருப்பவனுக்கல்லவா சீதனத்தை அள்ளிக் கொடுக்கின்றனர்.

ஃ

எம். எல். அலியாக்
மிருவோடை

கே: தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சிக்கு வந்ததால் ஏற்படும் பயன்?

ப: தமிழ் நாட்டில் ஒரு ரூபாவுக்கு மூன்று கொத்து அரிசி கிடைக்கவிருப்பதே ஏற்படும் பயன்.

கே: குயுக்தியாரே! மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் இலங்கை முஸ்லிம்கள் பாதிக்கப் படுவார்களா?

ப: நிச்சயம் இல்லை.

ஃ

எஸ். எஸ். நாதன்
ஏருவூர்.

கே: தமிழ்நாட்டு பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை அப்பட்டமாக காப்பி அடித்து வெளியிடும் நம் நாட்டு தினசரி பத்திரிகைகளின் செயல் எப்படிப்பட்டது?

ப: இது விபசாரத்தைப் போன்றது. அவற்றை விழுந்து விழுந்து வாசிக்கும் வாசகர்கள் இங்கு இருப்பதால் இப்பத்திரிகைகள் இந்தவிபசாரத்தில் ஈடுபடுகின்றன.

ஃ

ஏ. எச். ஏ. பரீத்
கிண்ணியா

கே: காதல் எல்லா காளையருக்கும் கன்னியருக்கும் கை கொடுத்து உதவிபுரியுமா?

ப: ஆம்! சிலருக்கு எமனுலகம் செல்லவும் மற்றும் சிலருக்கு காசாயம் பூணவும் கை கொடுத்து உதவிபுரியும்.

ஃ

சி. தேவகுமாரி,
தையிட்டி

கே: நீர் ஏன் காதல் தத்துவம் பேசுகிறீர்? தத்துவம் வாழ்க்கைக்கு ஏற்றதா?

ப: தத்துவம் இன்றேல் இவ்வுலகில் எதுவுமில்லை. மனிதன் — ஏன் உலகமே — இயங்குவதே சில தத்துவங்களின் அடிப்படையில்தான். காதலருக்கும் சில தத்துவங்கள் உண்டு.

ஃ

கு. இராஜேந்திரன்
கைதடி

கே: தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி அமைந்திருப்பதால் இலங்கைக்கு சாதகமாய் இருக்குமா?

ப: சாதகமாகவேஇருக்கும். இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள கேரளத்திலும்தமிழகத்திலும் முறையே தீவிர இடதுசாரி ஆட்சியும் அவர்களுடன் கைகோத்துக் கொண்டுள்ள தி. மு. க. ஆட்சியும் ஏற்பட்டிருப்பதால் அதன் தாக்கத்துக்கு இலங்கையும் உட்படலாம்.

ஃ

சி. முருகையா,
கண்டி

கே: தமிழகத் தேர்தலில் தி. மு.க. வெற்றியை தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்கிறதே! ஏன்?

ப: அண்ணு ஆட்சி வந்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் மலையகத் தமிழர்கள் அனைவரும் இந்தியாவுக்கு ஓடி விடுவார்கள் என்ற நப்பாசையாற்றான் இ. தொ. கா. வரவேற்கிறது. அவலை நினைத்து உரலை இடிக்கும் மடமை இது.

ஃ

ஆர். எம். நாதன்,
கொழும்பு—10

கே: இலங்கை இந்திய ஒப்பந்த மசோதாவைத் தமிழரசார் ஆதரித்ததால் அவர்கள் 'துரோகி'களாகிவிட்டனர் என்று தனிப் பெருந் தலைவர் கூறித் திரிகிறாராமே!

ப: அவரும் மசோதாவை ஆதரித்தாரே. அப்படியானல் தானும் ஒரு துரோகி என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். தான் துரோகியானலும் பரவாயில்லை—மற்றவர்களையும் துரோகிகளென்று கூறிவிட வேண்டுமென்ற அவரது ஆசையை என்னவென்று கூறுவது?

ஃ

எல். குருவையா
கொலன்னுவை

கே: தமிழகத்தில் தி. மு. க. வெற்றியால் இலங்கைக்கு ஆபத்து ஏற்படுமென்று எதிர்க் கட்சியினர் கூறுகின்றனரே! ஏன்?

ப: காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள். வகுப்பு வாதிகளுக்கு தி. மு. க. போன்ற ஒரு சோஷலிஸக் கட்சி கூட வகுப்புவாதக் கட்சியாக [illegible] தி. மு. க. கைவிட்டதாக அண்ணு தெரிவித்திருந்தும்,

இலங்கைத் தமிழ்ப் பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்த்து 'திராவிடஸ்தான்' இனி நிறுவிவிடும் என்று அபயக் குரல் எழுப்பி சிங்கள மக்களை இங்குள்ள எதிர்க்கட்சியினர். ஏமாற்றுகின்றனர்.

ஃ

டி. டி. சதாசிவம்,
மட்டக்களப்பு

கே: சீனுவின் எதிரிகளை உங்களால் வரிசைப்படுத்த முடியுமா?

ப: முடியுமே! இதோ;-சீனுவின் முதலாவது எதிரி சோவியத் ரஷியா, இரண்டாவது எதிரி உலகம் முழுவதுமுள்ள சோவியத் சார்புக் கம்யூனிஸ்டுகள், மூன்ருவது எதிரி இந்திய தேசிய காங்கிரஸ், நான்காவது எதிரி சீனுவிலுள்ள சீன மக்களில் ஒரு பகுதியினர், ஐந்தாவது எதிரி அமெரிக்க அரசாங்கம்.

ஃ

வே. பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு

கே: முதன் மந்திரி பதவியேற்று, இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமிழ் நாட்டுடன் இணைத்து ஆட்சிசெ[illegible] வேண்டுமென்று நான் விரு[illegible]புகிறேன். இந்த முடிவைப்பற்றி தாங்கள் என்ன கூறிகிறீர்கள்?

ப: இது முற்றிலும் தவருன முடிவு. இந்தியாவும் இலங்கையும் தனித் தனி நாடுகள். தமிழகம் இந்தியாவில் ஒரு மாநிலம். இது இலங்கையின் இரு மாநிலங்களுடன் இணைவது எவ்வகையிலும் சாத்தியமில்லை.

ஃ

அர்த்தநாரீசுவரன்,
பதுளை

கே: ஒரு பத்திரிகையில் செய்தி இருட்டடிப்பும், கருத்துத் திரிப்பும் தற்புகழ்ச்சியும் இடம் பெறுவதேன்?

ப: பத்திரிகைத் தொழிலை விபசாரத் தொழிலாக மாற்றிக்கொள்வதால்.

கே: 'டொப்லெஸ்' உடைக்குப் போட்டியாக ஆண்கள் 'பொட்டம் லெஸ்' உடை அணிந்தால்...?

ப: பெண்களும் பொட்டம் லெஸ்...

ஃ

பிரணவநாதன்,
பதுளை

கே: மேனுட்டவரின் உடையை பெண்களிலும் பார்க்க ஆண்கள் விரும்புவதன் நோக்கமென்ன?

ப: தமிழ் பண்பாடுகளை இதுவரை பெண்களே ஓரளவு பேணிக் காத்து வருகின்றனரெனினும் மேலையப் பண்பாட்டை அதிகம் விரும்புகின்றனர். அந்த விருப்பத்தை நிறைவேற்ற ஆண்கள் முயற்சி செய்கின்றனர். ஆண்கள் மேனுட்டு உடை அணிவதை பெண்கள் விரும்புகின்றனர். அந்த விருப்பத்தை நிறைவேற்றுகின்றனர் ஆண்கள்.



### சறுக்கி விழுந்தார்!

மூதூர் எம். பி. முகம்மதலி சறுக்கி விழுந்தார்.

செய்தி.

— சரியான அரசியற்பாதையிலிருந்து அவர் ஏற்கனவே சறுக்கி விழுந்துவிட்டாரே!

### நாஸ்திகம் பேசலாமா?

தமிழ் நாட்டை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

— பக்தவச்சலம்.

— தமிழ் நாட்டை 'இனி' கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென்றல் இவ்வளவு [illegible]ளும் கடவுள் காப்பாற்ற வில்லையா? ஆஸ்திகரான பக்தவச்சலம் இப்படிப் பேசலாமா? என்று மனம்வெதும்புகிருர் ஒரு காங்கிரஸ் காரர்.

### கருத்து வேற்றுமை!

தமிழ் மக்களின் போதனு மொழி பற்றி பொ. கட்சி கமிட்டிக் கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதித்தும் ஒரு முடிவு செய்யப்படவில்லை.

— செய்தி

— கடுமையான கருத்து வேற்றுமையோ? ஆங்கிலம் தான் போதனு மொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு கோஷ்டி வாதிக்கிறதாக்கும்!

### பிறவிக் குணம்!

29வது சரத்து அரசியற் சட்டத்தில் ஏற்பட்டதற்கு ஜீ. ஜீ. யே காரணம்.

— பொ. கட்சிப் பிரமுகர்

— அயலான் செய்ததைத் தான் செய்தது என்று பெருமை கொண்டாடுவது பொ. கட்சியினரின் 'பிறவிக்குணம்' என்பது தெரிந்தது தானே!

திரு. பொ.

### ஒப்புக்கொள்ளுகிருர்!

அன்றும் இன்றும் என் கொள்கை ஒன்றே.

— திரு. பொ.

— அன்று செய்து வந்த தமிழ்த் துரோகத்தைத்தான் இன்றும் செய்து வருகிறேன். இன்னும் அதிலிருந்து மாறவில்லை யென்பதை திரு. பொ. ஒப்புக் கொள்கிருரோ!

### கரடியும் சிறுத்தையும்!

கேரளத்தில் ஒரு தொகுதியில் உள்ள வாக்குச்சாவடிக்கு சிறுத்தை ஒன்று வந்தது.

— செய்தி

— (கம்யூனிஸ்ட்) [illegible] வாக்களிக்க வந்திருக்குமோ?

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் எப்படிப் பிரசாரம் செய்தார்கள்?

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற நிலை ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஒருநாள் தான் வருகிறது. அந்தப் பொன்னுள்நான் பொதுத்தேர்தல்நாள். அந்த பொதுத் தேர்தல் நாளில் 'இந்நாட்டு மன்னர்களின்' வாக்குகளைப் பிடுங்குவதற்கு அரசியற் கட்சிகள் நடத்தும் பிரச்சார முறைகள் பலவித மானவை.

சமீபத்தில் நடந்த இந்தியப் பொதுத் தேர்தலில் மக்களின் வாக்குகளைத் தட்டிக்கொள்வதற்கு அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றும் எடுத்த முயற்சிகள் மறக்க முடியாதவை.

## சுவரொட்டி

அதிகப் பலம் பொருந்திய கட்சியான காங்கிரஸ் கட்சி இராச்சியத்துக்கு இராச்சியம் வெவ்வேறு வகையான பிரச்சாரத்தை மேற்கொண்டது. காங்கிரஸ் கட்சியினரால் சென்னை மாநிலத்தில் 25 லட்சம்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அத்துடன் 25 லட்சம் துண்டுப்பிரசுரங்களும்60,000 தேர்தல் அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

இதைத்தவிர வேட்பாளர்கள் தங்கள் செலவிலும் சுவரொட்டிகளும் அறிக்கைகளும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டனர்.

தி.மு.க. மட்டுமே காங்கிரஸ் வெளியிட்ட அளவு துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தன. தி.மு.க. இருபது வெவ்வேறு விதமான சுவரொட்டிகளை வெளியிட்டிருந்தது. ஒவ்வொரு வேட்பாளருக்கும் இச்சுவரொட்டிகளில் 5000 வீதம் கொடுக்கப்பட்டது. இதுதவிர, ஒவ்வொரு தி. மு. க. வேட்பாளரும் தனிப்பட்டமுறையில் 50,000 துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டனர்.

மைசூரிலுள்ள பிரஜா சோசலிஸ்ட் கட்சி தனது வேட்பாளர்களுக்கு தலா 250 சுவரொட்டிகளை மட்டும் வழங்கியது. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக்கு அதன் தலைமைப் பீடம் பிரச்சாரத்துக்கு எதுவுமே வழங்கவில்லை. வேட்பாளர்களிடமே பிரச்சார வேலை விடப்பட்டது.

## திரைப்படம்

திரைப்படங்கள் மூலமும் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றன. மைசூர் காங்கிரஸ் கட்சி 1000 அடி நீளமுள்ள பிரச்சாரத் திரைப்படத்தைத் தயாரித்து 700 திரைப்படமாளிகைகளில் திரையிட்டது.

சென்னைக் காங்கிரஸ் கட்சியும் ஒரு திரைப்படத்தைத் தயாரித்திருந்தது. லோக சபைக்குப் போட்டியிட்ட ஒவ்வொருவருக்கும் அப்படத்தின் ஒரு பிரதி வழங்கப்பட்டது.

தலைவர்களின் பேச்சுக்கள் பதிவு செய்யப்பட்ட கிராமப் போன் 'ரெக்கோட்டு'களும் பிரச்சாரத்துக்கு உபயோகிக்கப்பட்டன. சென்னையில் போட்டியிட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஆறு கிராமபோன் தட்டுக்கள் அடங்கிய ஒரு 'செட்' கொடுக்கப்பட்டிருந்தது.

சுதந்திரக் கட்சியும் 'ரேப் ரெக்கோட்' மூலம் பிரச்சாரத்தில் இறங்கியிருந்தது. இதில் சிரிப்பு என்னவென்றால் மைசூர் ராஜ்ஜியத்துக்கு பிரசாரத்துக்கு அனுப்பப்பட்ட தட்டுக்கள், இந்தி, ஒரிஸ்ஸா, குஜராத்தி ஆகிய மொழிகளில் இருந்ததே!

மைசூர் காங்கிரஸ் பிரசாரத்திற்கு 12 லட்சம் செலவிட்டதாகப் பெருமையடித்துக்கொண்டிருக்கிறது! சென்னைக் காங்கிரஸ் பிரச்சாரத்துக்கு ரூபா 10 லட்சம் செலவு செய்திருக்கக்கூடுமென கூறப்படுகிறது.

தி.மு.க.ஏறத்தாளமூன்றரை லட்சம் ரூபாய்களை பிரசாரத்துக்கு செலவிட்டுள்ளதென்று கூறப்படுகிறது. இதைவிட அதிகமாகச் செலவிட்டிருக்குமென்றே தெரிகிறது.

சுவரொட்டிகளும், கொடிச்சீலைகளும், கொடிகளும், வீதியெங்கும் நீக்கமற நிறைந்திருந்தன. இது சகலரையும் கவர்ந்த ஒரு பிரச்சார முறையாகும். காங்கிரஸ் கட்சி வெளியிட்ட சுவரொட்டிகளை விட, தி. மு. க. வும், சுதந்திராவும் வெளியிட்ட சுவரொட்டிகள் உள்ளத்தைச் சுண்டி இழுப்பனவாக அமைந்திருந்தன.

தி. மு. க. வெளியிட்ட சுவரொட்டிகளில் மிகவும் கண்ணியமான வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டிருந்தன.

# பாரதநாடு காங்கிரசுக்கு எதிராக திரும்பியதேன்?

**காங்கிரஸ் பல மாநிலங்களில் தோற்றதற்கும் பல பெரிய யூனியன் மந்திரிகள் வெற்றி பெறுமல் போனதற்கும் காரணம், அதன் கொள்கைகளை, குறிப்பாக பொருளாதாரக் கொள்கைகளை, மக்கள் ஏற்காததுதான் என்று விமரிசகர்கள் கூறுகின்றனர். அதிருப்தியினுல்தான் தேசம் காங்கிரசுக்கு எதிராக திரும்பியிருக்கிறது.**

உணவுப் பற்றுக் குறையினுல் ஏற்பட்ட அதிருப்தி, மாநில, மத்திய உணவு மந்திரிகளின் தோல்வியில் கொண்டுபோய் விட்டதும் எல்லா உணவு மந்திரிகளுக் தோற்றனர். இதற்கு விலக்கான ஒரே ஒரு மந்திரி யூனியன் துணை உணவு மந்திரி திரு. பனம்பள்ளி கோவிந்த மேனன். அவர் ஒருவர் கேரளத்திலிருந்து லோகசபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள காங்கிரஸ்காரர்.

கொள்முதல் குளறுபடிகளும். ஊழல்களும் குடியானவர்களின் அதிருப்தியும், ஒருங்கிணைந்த நடைமுறையில்லாததால் பரவலான பற்றுக் குறையும் ஏற்பட்டு நாட்டுப்புறங்களில் மட்டுமின்றி நகரங்களிலும் மக்கள் கஷ்டப்பட்டார்கள்.

உணவுப் பண்டங்களின் விலை உயர்வு, மாதச் சம்பளக்காரர், கூலி வேலை செய்வோர் உட்பட எல்லோரையும் பாதித்தன. கிராக்கிப் படியை கூட்டியது பயனளிக்கவில்லை. அவற்றையடுத்து விலைவாசிகள் மேலும் உயர்ந்தது கண்கூடு. நிலைமை சகிக்க முடியாமல், மத்திய, ராஜ்ய அரசாங்க ஊழியர்கள் ஏறக்குறைய ஒரு பெரிய கலகத்தையே நடத்தி வைத்துவிட்டனர். இத்துடன் பசுவதைத்தடை விஷயமாக நிகழ்ந்தவையுமாகச் சேர்ந்து, தலைநகரில் காங்கிரஸ் தன் செல்வாக்கை அடியோடு இழக்கும்படி செய்துவிட்டன.

## மதிப்புக்குறைப்பு

ரூபாயின் மதிப்புக் குறைப்பையடுத்து ஆவன செய்யத் தவறியதால், மீண்டும் உயர்ந்தது. அதிருப்தியை வளர்த்தன. இதற்குப் பலியானவர்தான் யூனியன் நிதி மந்திரி திரு. ஸசீன் சாவுத்திரி.

## ஆதிக்க கோஷ்டி

காங்கிரஸ் மீது ஒரு சிலர் சேர்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்துகின்ற பெருந்தலைப் போக்கும் தேர்தலைப் பாதித்தது. இந்த அதிகார கோஷ்டியை சேர்ந்தவர்கள் என்று கருதப்படுவோரில் காமராஜ், பாட்டீல்' அதுல்யாகோஷ், கமலாபதி திரிபாதி ஆகியோர் முக்கியமானவர்கள். அவர்கள் தோற்றனர். மற்றொரு ஆதிக்கப் பேர்வழி. சி. பி. குப்தா 70 அதிக வோட்டுகள் பெற்று உ. பி. யில் ஜயித்துள்ளார். தலைவர்களது இந்தப்போக்கின் காரணமாக கட்சியில் அதிருப்தி பரவி, முழு ஒத்துழைப்பு எல்லா மட்டங்களிலும் கிடைப்பதை அசாத்தியமாக்கியது.

## கூட்டணி

காங்கிரஸை எதிர்த்து பல கட்சிகள் போட்டியிடுகையில், அதற்கு எதிரிடையான வோட்டுகள் சிதறிப்போய், சிறுபான்மை -- வோட்டின்பேரில் காங்கிரஸ் ஜயிப்பது இதுவரை சுலபமாகி வந்தது. இதற்கு ஒரே பரிகாரம், அதை எதிர்க்கும் பிரதான கட்சிகள் தம்மிடையே போட்டியை தவிர்த்து, கூட்டணியாக எல்லாக் கட்சிகளும் ஒருமுகமாக பிரசாரம் செய்வதுதான். இந்த தந்திரத்தை சென்னையில் உருவாக்கி நடத்தத் துணைபுரிந்தவர் ராஜாஜி. கேரளம், பஞ்சாப், வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா, குஜராத் ஆகியவற்றிலும் பிறகு [illegible] டது. காங்கிரஸ் தோல்விகளுக்கு இது ஒரு முக்கிய காரணம்.

கூட்டணி உபாயம் நிலைத்துவிடுமென்றே தோன்றுகிறது. எதிர்க்கட்சிகளிடையே உள்ள சண்டையால் காங்கிரசுக்கு பெரும்பான்மை கிடைக்கும் என்ற நிலைமை மாறிவிட்டது. காங்கிரஸின் எதிர்ப்பாளர் நெருக்கமாக இணைவது இனி வலுக்கவே செய்யும்.

## வோட்டு நிலைமை

சென்னையில் காங்கிரஸ் படுதோல்வியுற்ற போதிலும், அங்கே காங்கிரஸ் அபேட்சகர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகளை கணக்கிட்டால் ஒரு உண்மை புலனுகும். பெரிய வெற்றி கண்டுள்ள பிற மாநிலங்களில் கிடைத்த வீதாசாரத்திலேயே காங்கிரசுக்கு சென்னையில் கிடைத்த வோட்டுகளின் வீதாசாரமும் இருக்கும். ஆனல் ஒருமுகமான எதிர்ப்பின் முன் அது பயனற்றுப்போய்விட்டது.

வங்காளத்தில் கூட்டணி சரிவர உருவாகவில்லை. கம்யூனிஸ்ட் வோட்டுகள் பிளவுபட்டன. நிறைய உதிரிக் கட்சிகள் உண்டு, அப்படியிருந்தும் காங்கிரசுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. கூட்டணியில் ஓரளவு உடன்பாடு பெற்றிருந்த பங்களா காங்கிரஸ் என்ற போட்டி காங்கிரஸ் கணிசமான வெற்றி அடைந்துள்ளது. கூட்டணி அங்கே கமந்திரி சபையை அமைக்கக் கூடும்.

அகாலி தளமும் ஜனசங்கமும் போட்டி விஷயத்தில் ஒன்றுபடாததால் தான் பஞ்சாபில் காங்கிரஸ் வெற்றி பெற முடிந்தது.

### தோல்வி 77 மந்திரிகள்

இந்தியப் பொதுத் தேர்தலில் [illegible] 77 [illegible]கள் தோல்வி அடைந்துள்ளார்கள். இவர்களில் மத்திய அமைச்சர்கள் 14 பேர். ஏனையவர்கள் மாநில அமைச்சர்கள்.

# தேர்தலில் பணம் பேசியது

நடந்து முடிந்த இந்தியப் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு கிடைத்த தேர்தல் நிதி பற்றி சுவையான பல விபரங்கள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன.

இந்திய வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளரின் கருத்துப்படி காங்கிரஸ், சுதந்திரா, ஆகிய கட்சிகளுக்கு முன்பு கம்பெனிகள் வழங்கிய நன்கொடை 70:30 வீதமாக இருந்தது. ஆனுல் இம்முறைத் தேர்தலில் இந்நிலை மாறி ஏறத்தாழ 50-50 ஆகிவிட்டது. அதாவது கம்பெனிகள் காங்கிரசுக்குக் கொடுத்த தேர்தல் நிதிக்குச் சமமான ஒருதொகையை சுதந்திராக் கட்சிக்கும் கொடுத்தன. பம்பாயில் வெளியிடப்பட்ட கம்பெனிகளின் நன்கொடை விபரங்கள் இச்செய்தியை ஊர்ஜிதப்படுத்துகிறது.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையளித்தது ஒருபுறமிருக்க, இந்தியாவிலுள்ள பல வர்த்தக நிலையங்களும், கைத்தொழில் ஸ்தாபனங்களும் தனிப்பட்ட முறையில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் நன்கொடை வழங்கியிருக்கின்றன.

முன்னணி வகிக்கும் ஒரு பெரும் தொழிலதிபரின் கருத்துப்படி செல்வந்தர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளையும் ஆதரித்ததற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. காங்கிரசை நல்ல காரியங்களைச் செய்வதற்காகவும் சுதந்திராவைத் தங்களுக்காகப் பேசுவதற்காகவும், இடதுசாரிகளைத் தொழிற்றுறை அமைதிக்காகவும் பணக்காரர்கள் ஆதரித்தார்கள்.

லோகசபைக்குப் போட்டியிட்ட 2371 பேர் உட்பட 17,152 பேர் பொதுத்தேர்தல் களத்தில் போட்டியிட்டார்கள். அரசியல் வட்டாரங்களினதும் வணிக வட்டாரங்களினதும் புள்ளி விபரப்படி, வாக்கு வேட்டையில் ஈடுபட்ட இந்த வேட்பாளர்கள் ஏறத்தாழ ரூபா 66 கோடி செலவிட்டிருக்கின்றனர்.

இதேகணக்குப்படி பார்த்தால் லோக சபைக்கு 511 ஸ்தானங்களுக்கும், மாநில சட்டசபைகளுக்கு 3427 இடங்களுக்கும் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி, ஆகக் குறைந்தது பதினைந்தேகால் கோடி ரூபாவை செலவிட்டுள்ளது. 1962ம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் 8 கோடி ரூபா செலவிட்டதாக அறிவித்திருந்தது.

லோக சபைக்கு 180 இடங்களுக்கும், ராஜ்ய சட்ட சபைகளுக்கு 1000 இடங்களுக்கும் போட்டியிட்ட சுதந்திராக் கட்சி.

வேட்பாளர்கள் தங்கள் இஷ்டத்துக்கு செலவுசெய்ததை தவிர்த்து) சுமார் 4 கோடி 80 இலட்சம் ரூபா செலவு செய்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

1962 தேர்தலின்போது கட்சி நிதியிலிருந்து 50லட்சம் ரூபாவை செலவிட்டதாக சுதந்திரக் கட்சி கூறியிருந்தது.

ஜனசங்கம் ஏறத்தாழ மூன்றரைக்கோடி ரூபாவை செலவு செய்திருக்கிறது. எல்லாக் கட்சிகளும் சுயேட்சையாளர்களும் மொத்தம் சுமார் 66 கோடி ரூபாவை இந்தத் தேர்தலில் செலவிட்டுள்ளன.

சுதந்திரக் கட்சிக்குப் போதிய பணம் மட்டும் இருந்தால் அகில இந்தியாவிலும் காங்கிரஸைத் தோற்கடித்துவிடுவோம் என்று அதன் தலைவர் அண்மையில் கூறினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் தந்திரம்: சிங்கள தினசரியின் குதர்க்கம்

'இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கென கூறிக் கொண்டு தமிழரசு வாதிகளின் ஆதரவுடன் நிறைவேற்றிக் கொண்ட மசோதா சிங்கள வாக்காளர்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பிடுங்குவதற்கு அரசாங்கம் செய்த கீழ்த்தரமான முயற்சியாகும். அத்துடன் இந்த மசோதா மீது தமிழரசுக் கட்சிக்குள் ஒரு பிளவு இருப்பதாகக் காட்டுவதும் ஒரு தந்திரமாகும்' இவ்வாறு சிங்களே (சுதந்திரக் கட்சியின் வாராந்த ஏடு) 21-2-27ந் திகதி எழுதியுள்ளது.

'சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்குக் கடுகளவேனும் அக்கறை யு. என். பி. — தமிழரசு அரசாங்கத்துக்கு இருக்குமானால் மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த திருத்தங்களை ஆதரித்திருக்கும்.

இந்த மசோதாவால் தமிழரசுக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாக ஒரு நாடகம் நடத்தி மக்களின் அனுதாபத்தை டட்லி - பிலிப்-ராஜரத்தின கோஷ்டியின் பால் திருப்புவதற்கு ஏரிக்கரை, டைம்ஸ் பத்திரிகை நிறுவனங்களின் முதலாளித்துவப் பத்திரிகைகளின் உதவியுடன் ஆரம்பித்துள்ள இந்த இயக்கத்தின் நோக்கம் இடைத் தேர்தல்களில் மக்களை தவறான பாதையிற் செலுத்துவதே' என்று சிங்களே மேலும் எழுதியுள்ளது.

## கவனம் அரிசி கிடைக்காது

தொழில், வீடமைப்பு அமைச்சர் திரு. எம். எச் முகமது உட்பட ஏழு கூட்டுக்கு ஆதரவாளர்களான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஏரிக்கரைப் பத்திரிகைகளின் உதவியுடன் மக்கள் சீனத்துக்கு எதிராக நடத்தப்படும் பொய்ப் பிரசாரத்தால் நாட்டு மக்கள் பட்டினியாகக் கிடக்க வேண்டிய நிலை ஏற்படலாமென்று தூதராலய வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

இப் பிரசாரம் தொடர்ந்து நடைபெறுமானால் இலங்கைக்குச் சீனாவிலிருந்து கிடைக்கும் அரிசியும் கிடைக்காமற் போகலாம் என்று அரசியல்வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

—எத்த (23-2-67)

## இலங்கையில் வெற்றி முழக்கம்

'இந்தியப் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தென் இந்தியாவில் சென்னை மாநிலத்தில் அரசாங்கத்தைக் கைப்பற்றியதாக வானொலியில் தெரிவிக்கப்பட்டதும் முழு வட இலங்கையும் வெற்றி முழக்கம் செய்தது' என்று எத்த 25-2-67 ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

'தி. மு. க. என்பது தென் இந்தியாவிலும் வட இலங்கையிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒரே 'திராவிடஸ்தானை' அமைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு தீவிர வகுப்புவாத ஸ்தாபனமாகும்.

இலங்கை அரசாங்கத்துக்கு தமிழரசுக் கட்சி எப்படி ஒரு பயமுறுத்தலாக அமைந்திருக்கிறதோ, அதேமாதிரி தி. மு. க. இந்திய அரசாங்கத்துக்கு ஒரு பயமுறுத்தலாக அமைந்திருக்கிறது

சென்னையில் தி. மு. க.வின் வெற்றி ஒவ்வொரு ஆசனங்களிலும் அறிவிக்கப்படும் போது இங்கு தமிழரசு வாதிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் வெடிகளைக் கொளுத்தி ஆரவாரம் செய்தனர்.

தி. மு. க. வெற்றியில் மகிழ்ச்சி தெரிவிப்பதற்காக மலைநாட்டுத் தோட்டங்களில் கறுப்பு — சிகப்பு கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன!

காங்கிரஸைத் தோற்கடித்து தி. மு. க. பெற்ற இந்த மாபெரும் வெற்றியைக் குறித்து வாழ்த்து தெரிவித்து தமிழரசுக்கட்சி தி. மு.க. தலைவர் திரு. அண்ணாத்துரைக்கு ஒரு தந்தி செய்தியை அனுப்பியிருக்கிறது.

அந்தத் தந்தியில் குறிப்பிட்டிருந்ததாவது:

'நீங்கள் பெற்ற வெற்றி கண்டு மகிழ்ச்சி யடைகின்றோம் வெற்றிக்காக நீங்கள் செய்த முயற்சிகளைப் பாராட்டுகின்றோம். உங்களின் வெற்றி எங்களுக்கு உற்சாகமளிக்குமென்பது திண்ணம்'

தி. மு. க. வெற்றிச் செய்திகள் வெளியிடப்பட்டதும் யாழ்ப்பாணம் முழுவதும் தி. மு. க. கொடிகள் ஏற்றப்பட்டன.'

## சிங்கள இதழ்களில் . . .

## இலங்கையிலும் சீன-சோவியத் சண்டை

'இலங்கையின் நட்பு நாடுகளை இலங்கையில் தாக்குவதை நிறுத்தும்படி இலங்கை அரசாங்கம் சீனத் தூதராலயத்துக்கு கட்டளையிட்டுள்ளது.

பதில் சீனத் தூதரான திரு சியேசென்னை வெளிவிவகார அமைச்சு அழைத்து அவருக்கு மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தது.

இதற்குக் காரணம், சோவியத் நாட்டுக்கு வேதனையை ஏற்படுத்தக்கூடியதாகத் தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கையை சீனத் தூதராலயம் வெளியிட்டது தான் என்று கூறப்படுகிறது.

சீனத் தூதராலயத்தின் இந்த நடவடிக்கையை ஆட்சேபித்த இலங்கையிலுள்ள சோவியத் தூதராலயம், தங்களின் பிரதமமந்திரி திரு. கொசிஜினையும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரேஷ்னேவையும் 'பன்றிகள்' என்று சீனத்தூதராலயம் வருணித்திருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறது'

எத்த (23-2-67)

## புரட்சிகளைத் தூண்டிய அரசியல், சமூக சக்திகள்

இரண்டாவது உலகவ போரைமூட்டிவிட்ட பல்வேறுப் சமூக அரசியல் சக்திகள், யுத்த பிற்கால சகாப்தத்தின் அரசியல் அரங்கை ஆதிக்கம் செலுத்தவிருக்கும் இதர சமூக பொருளியல், அரசியல் புரட்சிகளைத் துவக்கிவிட்டன. யுத்த விளைவுகள் ஒருபக்கம்இருக்க ஐரோப்பிய காலனித்துவ சாம்ராஜ்யங்கள் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்ட மக்களின் தேசிய இயக்கங்களினால் சீர்குலைந்தன. ஐரோப்பாவில்தனதுவேர்களையுடைய தேசியக் கருத்து புதிய உலகில் விதைக்கப்பட்டது. ஆப்பிரிக்க நாடுகளின்சுதந்திரம் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த நாடுகளுக்குள் இதற்குமுன் என்றும் கண்டிராத பொருளியல், சமூக தொழில் நுட்ப முன்னேற்றங்களுடன் சந்தர்ப்பப்பொருத்தமாக ஒன்றுசேர்ந்தது. புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கும், தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த நாடுகளுக்கும்இடையே இடைவெளி உண்மையிலேயேபெரிதாயிருக்கிறது. இந்தபேதத்தைச் சரிப்படுத்தும் சாத்தியக் கூறுகள் வெகு தொலைவில் உள்ளன.

புதிய நாடுகளில் அரசியல் நிலைத்தன்மைக்குக் காரணமாக உள்ள முக்கிய அம்சங்களில் ஒன்று பொருளியல் வளர்ச்சியின்மையின் விளைவாகும். ஒருபக்கத்தில் வளர்ச்சியின்மையும், சமூக நலனையும், மகிழ்ச்சியையும் ஒப்பிடும் முறையின் மூலம்மனிதர்களின் மனநிலையாகவும் உணர்ச்சிகளாகவும் கருதலாம். மறுபக்கத்தில் இது தனி நபர் வருமானத்தினால் அளவிடும் பொருளியல் உண்மைநிலையாகும்.

குறைந்த தனி நபர் வருமானத்திற்கும்,பேரளவில் உள்ள அரசியல் நிலைத்தன்மையின்மைக்கும் மனநிறைவு இன்மைக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. என்பது ஆராய்ச்சிகளில் இருந்து தெரிகிறது. இரண்டும் வளர்ச்சியின் தன்மையில் பாதுகாப்பின்மை, கவலை உணர்ச்சி ஆகியவற்றை அதிகரிக்கின்றன. இரண்டாவதாக, தொழில் நுட்ப அறிவையும், திறமையையும் பெறுதற்கான முயற்சி போதிய பொருளியல் தொழிலியல் விஸ்தரிப்பு இல்லாததால் வேலையில்லாத் திண்டாட்டம் தானே இயங்கும் இயந்திரத்தின்மூலம் பொருட்களை உற்பத்தி செய்வதால் ஏற்படும் நெருக்கடி, குடும்ப, சமூக, மனமுறிவு, திறமையுள்ள தொழிலாளர்களின் பெயர்ச்சி போன்ற புதிய மாறுதல்களைக் கொண்டு வருகிறது. இந்த ஏமாற்றங்களில் இருந்து ஏற்படும் நெருக்கடிகள் அரசியல் அமைப்புக்களுக்கு எதிராகத் திரும்புகின்றன. மூன்றாவதாகப்புதிதாக வளர்ச்சியடையும் நாடுகளில் செல்வம் நேர்மையான முறையில் பகிர்ந்து அளிக்கப்படுவதில்லை. ஏனெனில் தொழில் நடத்துபவர்களும், அரசியல் பிரமுகர்களும் வர்த்தகர்களும் தேசிய தனி நபர் வருமானத்தின் அளவுக்குமேல் சொத்துக்களைப் பெறலாம். சுதந்திரத்துக்கு முன்பு இருந்த அரசியல் நோக்கங்களுக்கு குறுகிய நோக்கம் உள்ளகொள்கைகளும், பொருளியல், சமூக, அரசியல் திட்டம் தயாரிப்பதில் அக்கறையின்மையும் தலைவர்கள் அடைந்த அரசியல் பொருளியல் நன்மைகளைப் பலப்படுத்தாமற்போனதுமே காரணம். சுதந்திரம் கிடைத்ததோடு மிகமுக்கியமானகொள்கைகளும் அமைப்புக்களும் பொதுவாகப் புறக்கணிக்கப்பட்டன. அவை அரசியல் சமுதாயத்திற்குஅடிமை ஆகிவிட்டன. இதை அரசியல் ரீதியில் புரிந்துகொள்ள முடியுமெனினும் கட்டுப்பாடான வளர்ச்சிக்கு இது அனுகூலமாக இல்லை.

—டாக்டர் மாலுக்கி


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14,டாம் வீதி, கொழும்பு-12.


மக்கள் குரல்

## பொய்யா? புழுகா?

அரசியல் வரலாற்றை அழிவழிப்புச் செய்வதில் வல்லவரெனக் கூறப்படும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இப்பொழுது தமிழ் முது மொழிகளையும் அழிவழிப்புச்செய்வதில்ஈடுபட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

கடந்த வாரம் கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. ஜீ. ஜீ உரை நிகழ்த்தும் பொழுது தமிழரசுத் தலைவர்களைத் தாக்கிப்பேசினார். ஒரு கட்டத்தில் தமிழரசுத் தலைவர்கள் பேசுவது எல்லாம் பொய் என்று கூறி அதனை ஒரு முதுமொழி கொண்டு விளக்க முற்பட்டார்.

அவர் கூற விரும்பிய முதுமொழியின் இறுதி அடிமட்டுமே நினைவில் நின்றது. அந்த இறுதி அடியை இரண்டொரு முறை திரும்பத் திரும்பக் கூறியும் முன்னடி அவர் நினைவுக்கு வரவில்லை. அப்பொழுது மேடையின் முன் அமர்ந்திருந்த சில தமிழ் ஆசிரியர்களில் ஒருவர் முதுமொழி முழுவதையும் அச்சரம் பிசகாமல்கூறினார்.

உடனே திரு. ஜீ. ஜீ. அது பிழை. இப்படிக்கூறுவதுதான் சரியென்று தனக்கு விரும்பியவாறு அம்முதுமொழியை வளைத்துக் கொண்டார். திரு. ஜீ. ஜீ. யின் திருத்தம் சபையில் சிரிப்பை ஏற்படுத்தியது. என்றாலும் அவர் தான் கூறியதே சரியென்று மீண்டும் அடித்துக்கூறிவிட்டார்.

பிரச்சினைக்குரிய முதுமொழி இதுதான்.

''கெட்டிக்காறன் புழுகு எட்டு நாளைக்கு''

ஆனால் ஜீ. ஜீ.அவர்களோ ''கெட்டிக்காறன் பொய் எட்டு நாளைக்கு'' என்பது தான் சரியென்கிறார்.

திரு. ஜீ. ஜீ. இம்மாற்றத்தைக் காரணத்துடனேயே செய்திருக்கிறார். அது என்ன என்பதை சுதந்திரன் வாசகர்களால் கண்டுகொள்ள முடியுமல்லவா?

கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தி. மு. கவின் மகத்தான வெற்றி, சுதந்திரா கட்சியின் ஏற்றம், திடீரென கிளம்பி பாரதத்தின் தலைநகரைக் கைப்பற்றிய ஜனசங்கம், சாதனைகளை நிலை நிறுத்திய கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் ஆகியவை பற்றி அரசியற் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட ஒரு விமர்சனம் இது.**

# தி. மு. க. வின் வளர்ச்சியும் வருங் காலமும்

பாரத கண்டத்தின் தென் கோடியான தமிழகத்திலே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கை, அதன் வளர்ச்சி, அதன் திட்டம் ஆகியவற்றைப் பாரத மக்கள் மட்டுமின்றி வெளிநாட்டு மக்களும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியுள்ளனர்.

சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட சுயமரியாதை இயக்கத்திலேயே தி. மு. க. வின் வித்து இருக்கிறது. இராமசாமிப் பெரியாரின் தலைமையை உதறித் தள்ளி, அறிஞர் அண்ணு தலைமையில் திராவிடக் கழகத்திலிருந்து வெளியேறியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவினர்.

### கொள்கையில் தீவிர மாற்றம்

இக் கழகத்தின் வளர்ச்சியே ஒரு விந்தையாகும். தி. மு. க. தமிழ் மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு, மொழி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தது. தனித் திராவிட நாடு என்ற ஒரு கொள்கையையும் பிரசாரம் செய்துவந்தது. திராவிடக் கழகத்தை அரசியலில் பிரவேசிக்காமல் பெரியார் தடுத்து வைத்துக்கொண்டிருந்தார் — இருக்கிருரெனினும், தி. மு. க. வோ அரசியலில் தீவிரமாக இறங்கி முன்னேறியது.

அரசியலில் முன்னேற முன்னேற தி. மு. க. வின் கொள்கையிலும் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. பல்வேறு அரசியல் உபாயங்களையும் கழகம் அடிக்கடி கையாண்டுவந்தது.

வெறும் கலாசாரக் கழகம் என்ற நிலைமாறி, பூரணமான அரசியல் கட்சியாக அது வளரத் தொடங்கியது. அதன் விளைவாக மதத்தின் மூடக் கொள்கைகளுக்கும் மூடப் பழக்க வழக்கங்களுக்கும் எதிராக நடத்திய போராட்டத்தையும், பிராமணீயத்துக்கெதிராகக் காட்டிய எதிர்ப்பையும், இறுதியிற் திராவிட நாட்டுக் கொள்கையையும் கைவிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. திராவிடக் கழகத்தின் கொள்கையை அன்றே உதறித்தள்ளிவிட்டோமென்றும் தனித் திராவிடநாடு அமைக்கும் கொள்கை முற்ருகக் கைவிடப்பட்டதென்றும் அண்ணு கூறுவது இதைத்தான்.

### அனைத்திந்தியக் கட்சி

ஆனுல் தமிழ்க் கலை. கலாசாரம், தமிழ்மொழி ஆகியவை அதன் அடிப்படையாக இன்னும் இருக்கிறது என்று கூறலாம். இந்த அடிப்படையை ஓரளவு விட்டுக்கொடுத்தால் தி. மு. க. அனைத்திந்தியக் கட்சியாக மாறி, மத்திய அரசாங்கத்தையும் கைப்பற்றும் ஆற்றல் அதற்கும் அதன் தலைமைக்கும் உண்டு. வருங் காலத்தில் தி. மு. க. அனைத்திந்தியக் கட்சியாக மாருதென்று யாரும் சுலபமாகக் கூறிவிடமுடியாது.

அனைத்திந்தியக் கட்சியென்ருல் பல்வேறு தேசிய இனங்களைத் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும். பல்வேறு தேசிய இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் தாங்கும்போது பல்வேறு கலைகள், கலாச்சாரங்களைக் காத்து வளர்க்கும் தன்மையும் கழகத்துக்கு இருத்தல் வேண்டும்.

தி. மு. க. வளரும் வேகத்தைப் பார்த்தால் அது ஒரு பிராந்தியக் கட்சியாக தமிழ் நாட்டுக்குள் மட்டும் அடைபட்டு இருக்க முடியாதென்றும், அனைத்திந்தியக் கட்சியாக வளருவதற்கு முயற்சிகள் செய்யக்கூடுமென்றும் தோன்றுகிறது.

### சோஷலிசப் பாதை

தி. மு. க. வின் அரசியல் வளர்ச்சியை நோக்கினுல் அது சோஷலிஸப் பாதையிலேயே முன்னேறி வருகிறதென்பது தெளிவாகத் தெரிகிறது. அதன் மனப்போக்கு சோஷலிஸத்தை ஆதரிப்பதாகவே இருக்கிறது. இன்று அது இடதுபக்கத்தை நோக்கி வேகமாக ஓடுவதைக் காண்கிருேம்.

இடதுபக்கம் ஓடும்போது சிற்சில சமயங்களில் வலது பக்கமும் திரும்பிப் பார்த்துக் கொள்கிறது. அதற்குக் காரணம் கழகத்தின் அமைப்புத்தான். அது ஓர் இயக்கம். எல்குக் கட்டுப்பாடுள்ள ஒரு கட்சியன்று. எனவே அதில் வலதுசாரிகள், இடதுசாரிகள் இரண்டுமற்ற நடுவாந்தர சாரிகள் ஆகியோர் அக்கட்சியில் குழுமியுள்ளனர். ஆகையாற்ருன் இடதுபக்கம் ஓடும் போது வலதுபக்கம் அடிக்கடி திரும்பிப் பார்க்கவேண்டிய ஒரு நிலை அதற்கு உண்டு.

ஆனுல் இந்தநிலை நீடிக்காது. இடதுபக்க ஓட்டத்தின்வேகம் அதிகரிக்கும்போது-கழகத்தின் சோஷலிஸ மனப்போக்கு ஓங்கும்போது—வலதுசாரி மனப்போக்கின் வலிமை குன்றும் போது நாளடைவில் வலது பக்கம் திரும்பிப் பார்ப்பதையும் கழகம் கைவிட்டு விட வேண்டிய நிலை ஏற்படும்.

### தேர்தல் அறிக்கை

இலட்சக் கணக்கான [illegible]கள் கூடிய சென்னை மா[illegible] மாநாட்டில் தி. மு. க.வின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டபோது, அந்த அறிக்கையைக் கண்டு தமிழ் நாடு மட்டுமல்ல — அகில இந்தியா மட்டுமல்ல — தமிழ் உலகமே அதிர்ச்சியுற்றது — வியப்புற்றது. பல தேசிய மயங்களையும், பல தீவிர சோஷலிஸத் திட்டங்களையும் கொண்ட தேர்தல் அறிக்கை தி. மு. க. ஒரு சோஷலிஸ்ட் இயக்கம் என்பதைப் பறைசாற்றியது.

தி. மு. க. வின் கொள்கை என்ன, அதன் தலைமையின் போக்கு என்ன என்பதை இந்த அறிக்கை ஐயத்துக்கிடமின்றி எடுத்துக்காட்டிவிட்டது.

சோஷலிஸமென்ருல் இருவகை உண்டல்லவா? ஒன்று ஜனநாயக சோஷலிஸம், மற்றது விஞ்ஞான சோஷலிஸம். கழகம் எந்த சோஷலிஸத்தின் பக்கம் நிற்கிறது என்பதையும் தி. மு. க. தலைவர் அறிஞர் அண்ணு மாநாட்டில் விளக்கிவிட்டார்.

காங்கிரஸின் ஜனநாயகம் வெறும் போலி வேடம் என்பதை விளக்கிய அண்ணு, விஞ்ஞான சோஷலிஸமே தங்களின் கொள்கை என்பதை தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளார். அதில் இனி யாருக்கும் ஐயம் வேண்டாம்.

விஞ்ஞான சோஷலிஸம் என்ன என்பது அறிஞர் அண்ணுவுக்கு நன்ருக — தெளிவாகத் தெரியும்.

### மூன்று முக்கிய காரணங்கள்

தி. மு. க. வலது பக்கம் திரும்பாமல், இடது பக்கம் திரும்பியதேன்? இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று காங்கிரஸின் போக்கும் கொள்கையும்— மற்ருென்று தி. மு. க. வின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் — பிறிதொன்று தலைமை.

(14-ம் பக்கம் பார்க்க)

# இந்தி வெறி சங்கத்தின் வெற்றியும் வளர்ச்சியும்

பாரதத்தில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் வட பாரதத்தில் ஜனசங்கம் என்ற புதிய பலம் பொருந்திய அணியொன்று உருவாகியுள்ளது: இது ஒரு தீவிர வலதுசாரிக்கட்சியாகும். தேசியப் பெருமை, இந்துப் பாரம்பரியம், இவற்றைக் கொண்டே இக் கட்சி தனது பலத்தை அதிகரித்துள்ளது.

இந்துக்கள் புனிதமாகக்கருதும் பசுவை வதை செய்வதைத் தடைசெய்யும் கிளர்ச்சியில் ஜனசங்கம் முன்னணியில் நின்றது. அகில இந்தியாவிலும் பசு, எருது முதலியன வெட்டுதல் தடை செய்யப்பட வேண்டும் என்று இக் கட்சி கோரியது. இச் சங்கமே டில்லியில் வரலாறு கண்டிராத ஒரு மாபெரும் பசுவதை எதிர்ப்பு ஊர்வலத்தையும் நடத்தியது.

ஆனுல், ஜனசங்கம் ஒரு பிற்போக்கான கட்சியென்பதையோ, தாங்கள் இந்து வகுப்புவாதிகள் என்பதையோ அக்கட்சியின் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

இந்தியாவின் படைபலம் அதிகரிக்கப்படவேண்டும்; இந்தியா தனது சொந்த அணுகுண்டை தயாரிக்கவேண்டும், என்பன போன்ற பலமான பாதுகாப்புக் கொள்கைகளை ஜனசங்கம் கொண்டிருக்கிறது.

இந்தியா கூட்டுச்சேரா நாடாக விளங்குவதைவிட தன் சுய தேவையைப் பூர்த்தி செய்து ஒரு வல்லரசாக விளங்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே ஜனசங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்துள்ளது. அக்கட்சி மேற்கு [illegible] ஜனநாயகம் கொண்டது. சீன, பாகிஸ்தான் இவற்றுக்கெதிராக, உறுதியான கொள்கையுடைய ஜனசங்கம், திபேத்தின் சுதந்திரத்தை அனுமதிப்பதிலும் நிலையாக இருக்கிறது.

மிக முக்கியமான தேவைகளுக்கு, சமஸ்கிருதமொழி உபயோகப் படுத்தப்படுவதை ஆதரிக்கும்ஜனசங்கம், மத்திய அரசாங்கமொழியாக ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி ஏற்படவேண்டும் என்றும் கூறுகிறது. இதனை இந்துமொழி வெறி பிடித்த ஸ்தாபனமென்றே கூறலாம்.

காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ற இந்துமத வெறியர்களை உருவாக்கிய ராஷ்டிரிய சுயம் சேவக்சங்கத்தின் (ஆர். எஸ். எஸ்.) அரசியற் பகுதியாக உருவெடுத்த ஜனசங்கம் இப்பொழுது மிகப் பெரிய அமைப்புள்ள கட்சியாக மாறிவிட்டது.

இதன் தலைவர் பல்சோவ் மாதொக் டெல்லியிலுள்ள

(11-ம் பக்கம் பார்க்க)

## 'இந்தியாதான் சீனுவைத் தாக்கியது"

# பீகிங் சார்பு கம்யூனிஸ்டு கொள்கைக்கு ஆதரவா?

இந்தியாவில் இப்பொழுது கம்யூனிஸ்டுகட்சிகள் இரண்டு (கேரளத்தில் மட்டும்மூன்று) - ஒன்று சீனச்சார்பு - மற்றது சோவியத் சார்பு.

சீனச் சார்புக் கட்சியை மார்க்சீயக் கட்சி என்றும் இடது சாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி என்றும் கூறுகின்றனர். சோவியத் சார்புக் கட்சியை வலது சாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யென்றும் கூறுகின்றனர்.

சீனச்சார்புக் கட்சி ஒரு வேடிக்கையான கொள்கையை நாடெங்கும் பரப்பி வருகிறது.

சீனு இந்தியாவைத் தாக்கவில்லை —இந்தியாதான் சீனுவைத் தாக்கியது. சீனு இந்தியாவின் பிரதேசங்களைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கவில்லை. இந்தியாதான் சீனுவின்பிரதேசங்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறது. சீனு ஆக்கிரமிப்பாளன் அல்ல — இந்தியா தான் ஆக்கிரமிப்பாளன் என்ற கொள்கையை இந்திய மக்களிடையே சீனச்சார்பு கட்சி பிரசாரம் செய்து வருகிறது.

இக் கட்சி கேரளமாநிலத்தில் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியிருப்பதால் கேரள மக்களிற் பெரும்பாலோர் மேற்கண்ட கொள்கையை (அதாவது இந்தியாதான் சீனு மீது படையெடுத்தது - இந்தியாதான் ஆக்கிரமிப்பாளன் என்ற கொள்கையை) ஏற்றுக் கொண்டு விட்டனர் என்று கூறின் தவருகாது.

மேற்கு வங்காளத்திலும் [illegible]க்கட்சிகளுக்கும் தலைமை தாங்கும் அளவுக்கு அதிக ஸ்தானங்களை சீனச் சார்புக்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தில் மண்ணின் அமைப்பு

## விளைச்சலைப் பெருக்க வழி

### கிணற்றிறைப்பு முறை ஒரு பெரிய பிரச்சினை

யாழ் மாவட்டத்தின் மண், மழை வீழ்ச்சி, வெப்பநிலை, ஏற்றம் என்பவற்றால் அதன் செய்பயிரினங்கள் வரையறுக்கப்படுகின்றன. உழவர் பெருமக்கள் தாம் கையாளும் மண்ணின் வரலாற்றை முதலில் ஒருவாறு அறிந்து கொள்ளுதல் முக்கியமாகும். மண்ணைப் பற்றி அறிதற்கு இதிகாசப் புவிச்சரிதவியல், பௌதிகப் புவிச்சரிதவியல், இரசாயனத் தன்மையில் அறிவு இன்றியமையாதது.

யாழ் மாவட்டத்திலே இன்று பயன்படும் மண் இரு சகாப்தங்களைக் கடந்து வந்துள்ளது. முதலாம் உகம் மயோசீன் காலத்தைச் சேர்ந்தது. அக்காலத்தில் வன்னிப் பிரதேசத்திலே பெரிய மலைகள் இருந்தனவென்பதும் அவ்வுலக முடிவிலே கடலெழுச்சி காரணமாக இங்கே முத்தீவுகள் - வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி தோன்றின என்பதும் இத்தீவுகள் ஆரம்பத்திலே கடல் மிருகங்களின் சடலங்களாலும் மணலாலும் நிறைந்திருந்தனவென்பதும் புவிச்சரிதவியலாளரின் கருத்து.

[illegible]த்து நிகழ்ந்த பிளைஸ்[illegible]ன் காலத்திலே பெருங் கனிச வெப்ப நிலையும் மழை வீழ்ச்சியும் வேறுபாடன நிலைகளில் சம்பவித்தன. வன்னி மலைகளிலிருந்து மண்ணரிப்புப் பெருமளவில் ஏற்பட்டது. அரிப்பட்ட மண், வடக்கு வடகிழக்குத் திசையாக அள்ளுப்பட்டு கடலில் வெகு தூரத்தில் படிவுறுதலாயிற்று. சொல்லப்பட்ட முத்தீவுகளும் வன்னி மண்ணினால் நிரம்பின.

பிளைஸ்ரோசீன் காலத்துக்குப் பின்னர் தோன்றிய ஒரு பகுதியை தங்கமான செம்பாடு என்றும் மற்றைய பகுதியை மணற்றிடல் என்றும் அழைக்கின்றோம். எமது நிலத்தின் வடிவம் இந்த சமுத்திரத்திலே உள்ள நீரோட்டங்களால் தோற்றுவிக்கப்பட்டது.

#### யாழ் மண்ணின் அமைப்பு

யாழ் மாவட்ட மண் முதலில் கருங்கல்லிலிருந்தும் பளிங்கடுக்குப் பாறையிலிருந்தும் தோன்றி சுண்ணாம்புக் கல்லுடன் சேர்ந்துள்ளது. அழுக்கம் காரணமாக சுண்ணாம்புக்கல் இலகுவில் பளிங்குருவாகின்றது. அதில் படைக்குப் படை நீருற்றுக்களும் அதன் மேற்பரப்பில் பல துவாரங்களும் இருக்கும். மாறுபடும் வானிலையால் இக் கல் சுலபமாகச் சிதைவுறுகின்றது. இந்த மண்ணிலே விழும் மழை நீர் பெருமளவில் தேங்கி நிற்பதில்லை. எமது மாவட்ட மண் கல்சியம் காபனேற்றுடன் கட்சுப்பட்டிருந்தால் அதன் கன்னித்தன்மை களங்கமற்றதாகின்றது. ஆனால் இந்த மண்ணின் அமைப்பு போற்றற்குரிய தொன்றன்று.

பெருமழை வீழ்ச்சியின் காரணத்தாலே இம் மாவட்ட மேட்டு நிலங்களில் மாரிகாலத்திற் பயிர்ச்செய்கை அசாத்தியமாகின்றது. இந்நிலைமையை உழவர்ப் பெருமக்கள் ஐப்பசி தொடக்கம் மார்கழி வரை தங்கள் நிலங்களிலே வீட்டுப் பழம் பனையோலை, குழை, பூண்டு முதலியவற்றைத் தாழ்த்தலாற் சமாளித்துக் கொள்கின்றனர். மண்ணில் கல்சியம் காபனேற்று இருப்பதால் தாழ்த்தப்படும் பசுந்தாளப் பசளைகள் விரைவில் பிரிகையடைகின்றன. இதனாலேயே மாரி முற்கூற்றில் பழைய பனையோலையும் பிற்கூற்றில் இலை குழைகளும் புதைக்கப்படுகின்றன.

#### நீர்ச்சேமிப்பு

ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன் இங்கே வாழ்ந்த உழவர்ப்பெருமக்கள் வில்லுக் கேணிகளையும் கோயிற் கேணிகளையும் துரவுகளையும் தோண்டி மழைநீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்தினர். ஜனப் பெருக்கம் காரணமாகவும் அசட்டை காரணமாகவும் அவை வேறுவழிகளிற் பயன்படுத்தப்பட்டும் தூரவிடப்பட்டும் உள்ளன. நமக்கு ஒரேயொரு ஆறுண்டு. இதன் கரைகளிலுள்ள கிணறுகளின் நீர்ப் பீடங்கள் ஆற்றுப் பெருக்கிற்கேற்ப மிகுந்தும் தாழ்ந்தும் வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டம் 964 சதுர மைல்களை அல்லது ஏறத்தாழ 6,06,000 ஏக்கர்களைக் கொண்டுள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டுகளிலும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வலிமேற்கு ஆகிய வட்டாரங்களில் 600 ஏக்கர் வயல் குடியிருப்புக்காகப் பயன்படுத்தப்படவும் பூநகரி கிளிநொச்சி துணுக்காய் வட்டாரங்களில் 10,000 ஏக்கர் காடு வயலாக்கப்படவுங் கூடுமென மதிக்கப்படுகிறது. கால போகத்தில் முழு வயற்பரப்பிலும் வேளாண்மை நடைபெறுகின்றது. சிறு போகத்தில் கிளிநொச்சி, துணுக்காய் வட்டாரங்களில் இன்று 8,300 ஏக்கர்களில் மட்டுமே நெல் உண்டு பண்ணப்படுகின்றது. இன்னும் ஐந்து ஆண்டுகளில் நீர்ப்பாசனவிருத்தி காரணமாக மேற்படி செய்கைப் பரப்பு 13,500 ஏக்கர்களாகலாமென மதிக்கப்படுகின்றது.

கே. என். ஜெயசீலன்

சராசரி நெல்விளைச்சல் ஓர் ஏக்கருக்கு 303 புசல்களாகும், ஏறத்தாழ 50 சதவிகித வயற்பரப்பிலும் மானாவாரிச் செய்கை நடைபெறுவதால் சராசரி விளைவை 40 புசல்களாக்குதற்கு நீர்ப்பாய்ச்சலுள்ள வயல்களில் ஏக்கருக்கு சராசரி விளைவு 80 புசல்கள் கிடைத்தல் வேண்டும். விளைச்சலைப் பெருக்கப் பலகோணங்களில் முயலப்படுகின்றது. சிறந்த முறையில் வயலைப் பண்படுத்தல், தூயவழி நெல்லினத்தை உண்டுபண்ணுதல், பொருத்தமானவளர்ச்சிப் பருவங்களில் நெற்பயிருக்குச் செயற்கைப் பசளைகள் பிரயோகித்தல், திறம்படக் களைகட்டல், பூச்சி புழுநோய் ஆகியவற்றைப் பரவவிடாது தடுத்தல் ஆகிய கோணங்களில் விஞ்ஞான அறிவு கூடுதலாகப் பயன்படுகின்றது.

| கமத்தொழிற் போதனாசிரியரின் வட்டாரம் | பெருங்குளத் திட்டங்கள் ஏக்கர் | சிறுகுளத் திட்டங்கள் ஏக்கர் | மானாவாரி செய்கை ஏக்கர் | மொத்தம் ஏக்கர் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | —— | —— | 1,167 | 1,167 |
| ஊர்காவற்றுறை | —— | —— | 6,037 | 6,037 |
| வலிமேற்கு | —— | —— | 5,330 | 5,330 |
| வலிவடக்கு | —— | —— | 866 | 866 |
| வலிகிழக்கு | —— | —— | 2,160 | 2,160 |
| பருத்தித்துறை | —— | —— | 3,301 | 3,301 |
| தென்மராட்சி | —— | —— | 10,038 | 10,038 |
| பூநகரி | —— | 171 | 7,387 | 7,558 |
| பச்சிலைப்பள்ளி | —— | —— | 2,409 | 2,409 |
| கிளிநொசசி மேற்கு | 10,208 | 300 | 594 | 11,102 |
| கிளிநொச்சி கிழக்கு | 10,704 | 88 | 13,500 | 24,202 |
| துணுக்காய் | 2,184 | 1,587 | 314 | 4,085 |
| மொத்தம் | 23,096 | 2,146 | 53,103 | 78,315 |

#### உணவுப் பொருள் சாகுபடி

புகையிலை விலை குறைந்து வரும் காரணத்தினால் இதுவரையும் புகையிலை உண்டுபண்ணப்பட்டுவநத நிலப்பரப்பில் ஏறத்தாழ 1,000 ஏக்கர் இனிமேல் துணை உணவுப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படலாமென மதிக்கப்படுகின்றது. கால போகத்தில் பிரதான பயிராகப் புகையிலை உண்டு பண்ணப்படும் நிலங்களிலே சிறுபோகத்தில் உணவுப்பயிரினங்களை சாகுபடி செய்யலாம். விஸ்வமடுக் குளத் திட்டம் போன்ற திட்டங்களிலே நீர்ப்பாய்ச்சல் வசதியுடன் உணவுப்பயிர்கள் மேட்டு நிலங்களில் உண்டுபண்ணப்படலாம். நீர்ப்பாசன வசதியுள்ள வட்டாரங்களிலே சிறுபோகத்தில் நெல்வேளாண்மை நடைபெறு வயல்களில் நிலக்கடலை, எள்ளு, பாசிப்பயறு முதலியன உற்பத்தி செய்யலாம்.

யாழ் குடாநாட்டிலே மக்கிகளையும் பாறைகளையும் அகற்றிப் பயிர் செய்கைக்குப் பயன்படுத்தத்தக்க நிலப்பரப்பு இன்னும் உண்டு. கிணறுகளில் தண்ணீர் கீழ் ம[illegible]ணிலிருந்தும் தரைக்கீழருவியிலிருந்தும் பெறப்படுகின்றது. பெய்யும் மழை வீண்போவதால், பருவந்தவறுது மும்மாரி பெய்யாததால், கிணற்று நீரூற்றுப் போதாததால், போட்டியில் கிணறுகளைத் தேவைக்கு மேலாகத் தோண்டுவதாலும் துளைப்பதாலும், பம்பிகளால் கிணறுகளை விரைவில் இறைத்து வீணாக்குவதாலும் கிணற்றிறைப்புமுறை ஒரு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

(கூட்டுறவு)

# மலையக இளைஞர்கட்கு காணி குடியேற்றங்கள்

## காணி படை திரட்டுவதில் பாகுபாடு வேண்டாம்

**மலை நாட்டிலும் விவசாயப்படையிற் சேருவதற்கு இருபது தொடக்கம் முப்பது வயது வரையுள்ள தகுதியான இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களையும் விவசாயப்படையில் சேர்த்துக் கொள்ளும்படியும் அவர்களைப் படையிற் சேர்க்கும்போது பிரசாவுரிமையை நிரூபிக்கும்படி கேட்கப்படக் கூடாதென்றும் மலை நாட்டுப் பிரமுகர்கள் சிலர் பிரதம மந்திரியிடம் கேட்டுக் கொள்வார்களென்று அறியப்படுகிறது.**

**நாட்டின் உணவுப் பிரச்சினையைத் தீர்த்து, மக்களைப் பட்டினிப் பிசாசிடமிருந்து பாதுகாக்கும் விடயத்தில் பிரசாவுரிமை குறுக்கிடக்கூடாதென்றும், குறுகிய எண்ணங்களால் தேசிய அரசாங்கத்தின் அதிக உணவு உற்பத்தித் திட்டத்துக்கு குந்தகம் ஏற்படக் கூடாதென்றும், மலைநாட்டுத் தமிழ் இளைஞர்களுக்கென மலையகத்தில் ஆங்காங்கு காணிக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும் அவர்கள் பிரதமரிடம் வற்புறுத்துவார்களென்று தெரிகிறது.**

இது பற்றி பொகவந்தலாவையைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் சுதந்திரனுக்கு கூறியதாவது:

'உணவுப் பற்றுக் குறையினாலும், அரிசிநெருக்கடியினாலும், மக்கள் மத்தியில் விலைவாசி கூடியுள்ளது. அத்தோடு வெளிநாடுகளிலும் உணவு நெருக்கடியாய் இருக்கின்றது. ஆகையால் நமது தேசிய அரசாங்கம் பல அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துள்ளது. அவைகளில் ஒன்று விவசாயப் படை அமைத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவது.

மலை நாட்டிலே நிலவளம், நீர்வளம், மக்களின் சக்தி, என்பன நிறைய உண்டு. கண்டி, நாவலப்பிட்டி பதுளை போன்ற இடங்களில் படி வயல்கள் அமைத்து விவசாயம் செய்யலாம். சில இடங்களில் காலியாகிகிடக்கும் நிலங்களை சீர்திருத்தி உபஉணவுப் பொருட்களையும் பயிரிடலாம்.

'இது போன்ற விடயங்களில் மலைநாட்டு வாலிபர்கள் புறக்கணிக்கப்படுவதால், அவர்களுடைய சக்தியெல்லாம் வீணுக விரயமாகின்றது.

"பஞ்சத்திலும் கூட மலையக மக்களுக்கு உழைப்பதற்கு இடமளிக்கக் கூடாதா? இவர்கள் இருக்கும் வரை உழைத்து சாப்பிடக் கூடாதா? இவர்களுக்கும் விவசாயப் படையில் இடமளித்தாலென்ன?

'பிரஜாவுரிமை இருக்கும் [illegible] வேண்டுமா? உணவு உண்ண

(14-ம் பக்கம் பார்க்க)

களிப்புற்ற வாழ்க்கை சலிப்புற்றதா?

அதற்குக் காரணம்...?

கல்யாண விஷயமா?
காதல் விவகாரமா?
கிரக தோஷமா?
கீர்த்தி கேடா?
குடும்பத் தகராறு?
கூடுதல் கடனு?
கெடுதல் வருகையா?
கேடுகள் சேர்க்கையா?
கை நஷ்ட வியாபாரமா?
கொடிய எதிரியா?
கோணல் வாழ்வா?
கௌரவ தாழ்வா?

எதுவானுலென்ன!

நிவாரணம் பெற
என் உதவியை நாடுங்கள்!
இலவச ஆலோசனைக்கு
எனக்கொரு கடிதமெழுதுங்கள்!

அரசாங்க பதிவு பெற்ற
பி. எம். திசாநாயக்க
— நான்கு கோவில்களின் தர்மகர்த்தா —
கண்டி ரோட், கம்பளை. போன்: 454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1967 மார்ச் மாதம் 3-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12,
தொலை பேசி எண் - 3411 · த. பெ. 1183


## வாழ்த்துகின்றோம்!

தமிழ் மக்களின் இதயங்களில் ஆட்சிபுரிந்துவந்த திராவிட முன்னேற்றக்கழகம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பையே இன்று ஏற்றுள்ளது. தி. மு. கழகத்தை வாழ்த்துகின்றோம். கழகத்தின் தலைமையை வாழ்த்துகின்றோம். உலகத் தமிழர்களின் பேரன்பையும் பேராதரவையும் பெற்றுள்ள கழகத்தின் மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணு அவர்களை வாழ்த்துகின்றோம். கழகத்தை ஆட்சி பீடத்தில் அமர்த்திய தமிழகத்தின் மகத்தான மக்களை வாழ்த்துகின்றோம்.

தி. மு. க. வின் வெற்றி தமிழகத்தின் வெற்றி மட்டுமன்றி, தமிழுலகத்தின் வெற்றியுமாகும். இந்த வெற்றியால் தமிழ்மொழி ஏற்றம் கண்டுள்ளது. தமிழன்னை தலை நிமிர்ந்து வெற்றிப் பெருமிதத்துடன் பீடுநடை போடுகிருள். தமிழ் மொழி தழைக்க, தமிழ் கலைகள் ஓங்க, தமிழ் கலாசாரம் வளர, தமிழ் பண்பாடுகள் நீடித்து நிலைத்து நிற்க தி. மு. க. வின் வெற்றி உறுதுணையாக நிற்கிறது.

தி. மு. க. வின் வெற்றியில் ஈழத்துத் தமிழ்பேசும் இனம் அடைந்துள்ள பெருமகிழ்ச்சி சொல்லுந்தரமன்று.

காங்கிரஸ் ஆட்சியிலே விலைவாசிகள் விஷம்போல் ஏறின. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டது. பசி, பஞ்சம் தலைவிரித்தாடியது. இந்த நிலை மாறவேண்டுமென்று மக்கள் துடித்தனர். கள்ளச் சந்தைக் கழுகுகள் மக்களைச் சுரண்டிக் கொழுத்தன. 'லைசன்ஸ், பெர்மிட்' வேட்டை தாராளமாக நடைபெற்றது. திடீரென ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதால் மக்களின் நிலை சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்ததைப் போலாயிற்று. மக்கள் நலிந்தனர். நிர்வாகத்தில் ஊழல்களும் இலஞ்சலாவண்யங்களும் மலிந்து கிடந்தன. இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிய மாணவர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிருகத்தனமான அடக்குமுறைகள் தமிழகத்தையே கலக்கின. மக்களின் அதிருப்தி உச்சநிலையடைந்தது. காங்கிரஸ் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தாலன்றி தங்களுக்கு விமோசனம் கிடைக்கமுடியாதென்று மக்கள் முடிவு செய்தனர்.

ஆனல் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு மாற்றுக்கட்சி வேண்டுமே! முதுபெரும் இராஜதந்திரி ராஜாஜி ஆதரவுடன் தி. மு. க. பொறுப்பை ஏற்க துணிவுடன் முன்வந்தது. மக்கள் வரவேற்றனர்.

தி. மு. க. தலைமையின் ஆற்றலையும், அறிவையும் அறிந்த மக்கள் தி. மு. க. முன்பிருந்த நிலைக்குக் காங்கிரஸைத் தள்ளிவிட்டு, தி. மு. க. விடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டனர்.

நேற்று எதிர்க்கட்சியாக இருந்த தி. மு. க. இன்று ஆளும் கட்சியாகிவிட்டது. நேற்று ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் இன்று எதிர்க்கட்சியாகிவிட்டது. இன்று எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் நாளை (அடுத்த பொதுத்தேர்தலில்) ஆளும் கட்சியாகிவிட்டாலும் வியப்பன்று. இலங்கையிலும் அதுதானே நடைபெற்றிருக்கிறது. அதுதான் பாராளுமன்ற சனநாயகத்தின் சாதனை.

ஆகவே இன்றைய எதிர்க்கட்சியின் கடமை ஆளும் கட்சியின் குற்றங் குறைகளை எடுத்துக்காட்டி, மக்களின் நலன்களைப் பேணும் பிரச்சினைகளில் ஆளும் கட்சியுடன் ஒத்துழைத்து, மக்களின் ஆதரவைப் பெற்று அடுத்த தேர்தலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முயற்சி செய்வதே. எதிர்க்கட்சி என்ற காரணத்தால், ஆளும் கட்சி நாட்டிற்குச் செய்யும் நற்பணிகளையெல்லாம் எதிர்த்துக் கொண்டிருந்தால் என்றென்றும் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டியதே!

இத்தேர்தலில் காங்கிரஸ் தோற்றதால் அதற்கு மாற்று மருந்தும் அவர்களின் கையிற்தான் இருக்கிறது. அதுதான் அடுத்த பொதுத்தேர்தலில் ஆட்சிக்கு வருவதற்காகச் செய்யும் முயற்சி. சனநாயகப் பண்பாடும், பாராளுமன்ற சனநாயகமும் அதுவே.

**ஆதலின், அண்ணு அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருப்பதைப்போல அவரது அரசாங்கம் நாட்டின் நலனை முன்னிட்டு எடுக்கவிருக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சியான காங்கிரஸ் முழு ஒத்துழைப்பையும் அளித்தல் வேண்டும். ஒத்துழைப்பு அளிப்பதால் காங்கிரசுக்கு மக்களின் ஆதரவு பெருகுமேயன்றி, நட்டம் ஏற்படாது.**

தமிழ்மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள தி. மு. க. அரசாங்கம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. தேர்தல் அறிக்கையிலும், மேடையிலும் பல முக்கிய வாக்குறுதிகளைத் தி. மு. க. மக்களுக்கு அளித்துள்ளது. ஐந்தாண்டுகளில் அவற்றை நிறைவேற்றவேண்டியது தி. மு. க. அரசாங்கத்தின் கடமையாகும்.

விலைவாசிகளைக் குறைத்தல், உணவுப் பற்றுக் குறையை நீக்குதல் உணவு உற்பத்தியைப் பெருக்குதல் முக்கிய பிரச்சினைகளாகும். இவை அனைத்திந்திய பிரச்சினைகளெனினும், தமிழகத்தில் நிலவும் பசி, பஞ்சத்தை தி. மு. க. ஆட்சி ஒழித்தேயாக வேண்டும்.

தி. மு. க. வெற்றியின் எதிரொலியாக அரிசிவிலை ஏற்கனவே குறைந்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. தேர்தல் முடிவு ஏற்படுத்திய அதிர்ச்சியின் விளைவு இது. அதிர்ச்சி தீர்ந்ததும் மீண்டும் படிப்படியாக அரிசிவிலை ஏறக்கூடும். (இலங்கையில் டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரி பதவி ஏற்றதும் ஜவுளி விலைகள் திடீரெனக் குறைந்தன. தலைநகரில் நடைபாதைகள் துணிகளால் நிரம்பி வழிந்தன. ஆனல் ஒரே மாதத்தில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. விலைகள் மீண்டும் ஏறின. துணிகளும் மறைந்து விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.)

ஆகவே அரிசி உட்பட உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அத்துடன் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான புதிய திட்டங்கள் தீட்டி அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அதற்கு முதற்படியாக ஊழல்களை நீக்கி, நிர்வாகத்தைத் தூய்மையாக்க வேண்டியது அவசியமாகும்.

**குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுமென்றும், பஸ் சேவை தேசியமயமாக்கப்படுமென்றும் அண்ணு அறிவித்துள்ளார். இதனுல் தமிழகத்தில் ஏகபோக முதலாளிகளுக்குப் பலத்த அடி விழுமென்பதில் ஐயமில்லை. டி. வி. எஸ். பஸ் கம்பெனியார் தமிழகத்திலேயே இரண்டாவது பெரிய பணக்காரர்களாவர். டி. வி. எஸ். குடும்பம் சுமார் 22 கோடி ரூபாயை இந்த பஸ் சேவையில் முடக்கியுள்ளது. இத்தகைய ஏகபோக முதலாளித்துவத்தை நீக்குவதின் மூலம் அண்ணு சமதர்ம சமுதாயத்தை நோக்கி முன்னேறுகிறுர் என்றே தெரிகிறது.**

ராஜாஜியின் ஆசியையும் ஆதரவையும் பெற்றுள்ள இத்தகைய முற்போக்கான செயல்களுக்குக் காங்கிரஸ் தனது முழு ஒத்துழைப்பையும் தயக்கமின்றி அளிக்கவேண்டும். அளிக்கும்படி மக்கள் காங்கிரஸ் தலைமையை வற்புறுத்தவேண்டும்.

அண்ணுவின் ஆட்சியிலே தமிழகத்தில் பசி பஞ்சம் நீங்கி, உற்பத்தி பெருகி, ஒரு சிலரின் ஏகபோக ஆதிக்கச் சுரண்டல் அகன்று சுபீட்சம் நிறைந்த சமதர்ம சமுதாயம் அமைக்கப்படும் என்பதில் நாடே நம்பிக்கை கொண்டுள்ளது. அத்துடன் அண்ணு ஆட்சியிலே தமிழ் மொழி, தமிழ் கலாசாரம் தமிழ் பண்பாடு மென்மேலும் ஓங்கி வளர்ந்து செழித்து விளங்குமென்றும் இதயபூர்வமாக நம்புகின்றோம்.

# எதிர்க்கட்சித் தலைவியின் பொறுப்பற்ற உளறல்

# இலங்கையில் மீண்டும் ஒரு கலவரத்தை ஏற்படுத்தும்

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக இருக்கிறது எதிர்க் கட்சித் தலைவியின் பேச்சு. சென்னை மாநிலத்தில் தி. மு. கழகம் பெரும்பான்மை பெற்றிருப்பது இலங்கைக்கு ஆபத்து என்கிறுர் முன்னுள் பிரதமரான இவர்.

மாநில ஆட்சி அதிகாரம் தி. மு. கழகத்தின் கைக்கு வந்திருப்பதால் இலங்கைக்கு தமிழரசுக் கட்சியாலும், மலைநாட்டுத் தமிழர்களாலும் பெரும் ஆபத்து நிகழும் என்பது சிறிமாவோவின் கண்டுபிடிப்பு. சிறிமாவோவின் இப்பிரச்சாரம் இலங்கையில் மீண்டும் ஒரு 1958ம்ஆண்டை ஏன் நினைவுபடுத்த மாட்டாது என்று கேட்கிறேம்.

### அனுபவம் புதுமையா?

திருமதி சிறிமாவோ அரசியலுக்குப் புதியவராக இருந்தாலும் அனுபவம் நிறைந்தவர். அவரது எட்டு வருட அரசியல் வாழ்வில் ஐந்து வருட காலம் பிரதமராக பதவி வகித்திருக்கிறுர். இன்னும் பிரதமர் பதவிக்கு நிகரான எதிர்க் கட்சித்தலைவர் பதவியில் அமர்ந்திருக்கிறுர். அவர் வகித்த பதவிகள் அவருசகு அரசாங்க நிர்வாகங்களின் உண்மைகளை நன்கு புலப்படுத்தியிருக்கும். அப்படியிருந்தும் அவர் ஒரு மாநில ஆட்சியால் பிறிதொரு நாட்டுக்கு ஆபத்து உருவாகும் என்பது வேடிக்கையாக இருக்கிறது.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. கூட்டுச்சேரா உடனிருந்து வாழும் தத்துவத்தைப் பிரச்சாரம் செய்வதில் முன்நிற்கும் நாடு. ஆசியாவுக்கு மட்டுமல்ல உலகுக்கே வழிகாட்டும் தகைமை பெற்ற பாரம்பரியம் கொண்டது பாரதம்.

இத்தகைய பெருமைமிக்க பாரத நாட்டின் பதினேழு மாநிலங்களில் ஒன்றினுல் இலங்கை என்னும் தனிநாட்டுக்கு எங்ஙனம் ஆபத்துத் தோன்ற முடியும். இந்திய மாநில அரசுகளிடம் தனியான படை கிடையாது. மாநில அரசாங்கங்கள் தனித்து தன்னிச்சையாக வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளமுடியாது. இந்த உண்மைகளை சிறிமாவோ நன்கு அறிவார்.

### மீண்டும் வகுப்புவாதம்

இந்த உண்மைகள் அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டும் கூட சிறிமாவோ அவர்கள் தி. மு. க. ஆட்சியால் இலங்கைக்கு ஆபத்து ஏற்படும் என்

சுதந்திரன்
அரசியல் நிருபர்

பதும், இதற்கு தமிழரசுக்கட்சியும், மலைநாட்டு மக்களும் துணை நிற்பார்கள் என்பதும் எத்தனை அபத்தமான கூற்ருகும்.

மீண்டும் இலங்கையில் ஓர் இரத்த ஆறு ஓடுவதையே சிறிமாவோ விரும்புகிறுர் என்பது இதனுல் தெளிவாகத் தெரிகிறது. சாதாரண சிங்களப் பொது மக்கள் மத்தியில் இப்பேச்சு எந்தளவுபாரதூரமான விளைவை ஏற்படுத்த முடியும் என்பதை கற்பனை பண்ணிப் பார்க்கும் பொழுதே பயங்கரமாக இருக்கிறது.

தமிழரசுக் கட்சியும், மலைநாட்டு மக்களும் இந்நாட்டுக்கு விசுவாசம் இல்லாதவர்கள் என்ற கருத்தையல்லவா சிறிமாவோ சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார். அது மட்டுமன்றி மலைநாட்டு மக்களும், தமிழரசுக் கட்சியினரும் பிற நாட்டு ஏஜண்டுகள்—ஒற்றர்கள் என்ற கருத்தையும் இப்பேச்சு ஏற்படுத்தியிருக்கிறது.

### உடன் நிறுத்தவும்

தமிழரசுக் கட்சி என்று சிறிமாவோ குறிப்பிடுவது வட—கீழ் மாகாண மக்களை. எனவே இலங்கைக்கு தமிழ் மக்களால் ஆபத்து என்பது சிறிமாவோவின் பேச்சு. இலங்கைக்கு தமிழ் மக்களால் ஆபத்து என்றுல் அது சிறிமாவோவின் கூற்றுப்படி சிங்கள மக்களுக்கு ஆபத்து என்பது பொருள். சிங்கள மக்கள் தமக்கு ஆபத்து வருமுன்னர் அதற்குத் துணையாக நிற்பவர்களை ஒழித்துக் கட்டி விடுவோம் என்று முனைந்தால் அதில் ஒன்றும் தவறில்லை. ன்எனவே சிறிமாவோவின் பேச்சு மீண்டும் ஏன் ஒரு 1958 ம் ஆண்டு துக்ககரமான சூழ்நிலையை இந்நாட்டில் ஏற்படுத்த மாட்டாது என்று கேட்கிறேம்.

இத்தகைய ஆபத்தான பேச்சுக்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். ஆசை கொண்டவர்கள் பொறுப்பற்ற முறையில் பேசலாம். ஆனல் நாட்டு நலனில் அக்கறை உடையவர்கள் இந்த ஆபத்தான முயற்சிகளை உடன் தடைசெய்யவேண்டும்.

# மீண்டும் ஒரு சின்னத்தனம்

சீனத் தூதுவரகம் மீண்டும் பிரச்சினைக்கு இலக்காகி உள்ளது. கம்யூனிஸ்ட் சீனவில் கலாசாரப் புரட்சி என்ற பெயரால்நடைபெறும். அநாகரிகமான — மிருகத்தனமானசெயல்களுக்கு அங்குள்ள முஸ்லிம்கள் பலியாவதைத் தடுக்கும் வண்ணம் ஈழத்து முஸ்லிம்கள் சார்பில் அக்குறணைத் தொகுதி உறுப்பினர் ஜனப் ஏ. சி. எம். ஹமீது ஒரு மகஜரைச் சமர்ப்பிக்கச் சென்றதை அடுத்தே மீண்டும் சீனத் தூதரகம் பிரச்சினைக்குள்ளாகி இருக்கிறது.

மக்கள் பிரதிநிதி ஒருவர் மிகவும் கௌரவமான முறையில் ஓர் அன்பான வேண்டுகோளைச் சமர்ப்பிப்பதற்காகவே சீனத் தூதுவரகம் சென்றுர். ஜனப் ஹமீது அவர்கள் இப்பணியினை மேற்கொள்வதற்கு சிறிதும் தகுதியற்றவரும் அல்லர். அவர் சென்ற முறை அநாகரிகமானதுமல்ல. அப்படியிருந்தும் அவருக்குப் பேட்டி கொடுத்த சீனத் தூதுவரக அதிகாரி அவரை அவமதித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

### முதல் முறையல்ல

'பழியுடைப் பகைவரேனும் தம் பெருமனைக்கு வந்தால் அழிவுடைப் பகைமைசெய்தல் ஆண்மையில் நல்லதன்று' என்பது பொது மரபு. கலாசாரப் புரட்சி நடத்தும் சீனவின் தூதுவர் இம் மரபுக்கு மாறுபட்ட நிலையில் அவர் மனையில் நடந்துகொண்டிருக்கிறுர்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் உத்தரவு புறக்கணிப்பு

## தொலைபேசி அட்டவணை மொழி பெயர்ப்பில் தாமதம்

தொலைபேசி அட்டவணை தமிழ் மொழி பெயர்ப்பைத் தடைப்படுத்தும் முயற்சி ஒன்று அஞ்சற்றிணைக்களத்தில் ஏற்பட்டிருப்பதாகவும், இம் முயற்சி திணைக்கள இடைமட்ட உத்தியோகஸ்தர்களிடையே நடைபெறுவதாகவும் தெரிய வந்துள்ளது.

ஆங்கில மொழியில் மட்டுமே வெளியான தொலைபேசி அட்டவணை சில ஆண்டுகளாக சிங்கள மொழியிலும் வெளியாவது பலரும் அறிந்ததே. தமிழ் மொழி பெயர்ப்பும் அட்டவணையுடன் கூடவே வெளியாக வேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாக அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தபால் அமைச்சை வலியுறுத்தி வந்துள்ளது. கடந்த ஆண்டு இப்பிரச்சினை பற்றி கிளிநொச்சிப்பிரதிநிதி கா.பொ. இரத்தினம் அவர்களும் தபால் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அமைச்சருடன் திரு. இரத்தினம் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து தொலைபேசி அட்டவணையைத் தமிழிலும் வெளியிடும் வண்ணம் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இற்றையவரை அமைச்சரின் உத்தரவு அமுல் நடாத்தப்படவில்லை. அதனை அமுல் நடாத்துவதற்கும் எத்தகைய முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

அமைச்சரின் உத்தரவை அதிகாரிகள் ஏற்றிருந்தபோதிலும் இடைமட்டத்தில் உள்ள உத்தியோகஸ்தர்கள் இதனை அமுல் நடாத்தாது இருப்பதாகவும் இவர்களில் ஒருவர் தமிழர் என்றும், இவர் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர் என்றும் அஞ்சற்றிணைக் கள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

## தென் சென்னைக்கு யார்?

அறிஞர் அண்ணா தற்பொழுது பிரதிநிதித்துவப்படுத்தும் தென் சென்னை பாராளுமன்றத் தொகுதிக்கு அடுத்த தி. மு. கழக வேட்பாளர் யார் என்பது பற்றிய கேள்வி இப்பொழுது சென்னையில் பரவலாகக் கேட்கப்படுகிறது. பெரும்பாலும் திருவண்ணாமலை சட்டசபைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு பா. உ. சண்முகம் நிறுத்தப்படலாம் என்று 'அறிவக'த்தில் கூறப்படுகிறது.

## மீண்டும் ஒரு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சீனத் தூதுவரகம் இத்தகைய குற்றச்சாட்டிற்கு இலக்காவது இதுமுதல்முறையல்ல. 1963ம் ஆண்டு இந்தியா மீது சீனா ஆக்கிரமிப்பு நடாத்திய பொழுதும் இலங்கையிலுள்ள சீனத் தூதுவரகம் இங்ஙனம் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் நடந்துகொண்டிருக்கிறது. சீனாவின் நடவடிக்கையைக் கண்டித்து அன்று இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தினர் சீனத் தூதுவராலயத்தின் முன் சென்ற பொழுது இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டார்கள். மாணவர்களை மண் நிறைந்த போத்தல்களால் தாக்கிய குண்டர் கோஷ்டிக்குள் சிலசீனத்தவர்களும்நின்றதாக அன்று கூறப்பட்டது.

### அன்றும் இன்றும்

அன்று பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆட்சேபனையை ஒரு பெரும் ஊர்வலமாகச் சென்று தெரிவித்தார்கள். தாக்கப்பட்டார்கள். இன்று ஜனாப் ஹமீது பண்பாகவும் அமைதியாகவும் ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பிக்கச் சென்றார், அவமதிக்கப்பட்டார்.

ஜனாப் ஹமீது அவமதிக்கப்பட்டதை யொட்டி முஸ்லிம் பெரியார்கள் கொதித்தார்கள். இந்த அநாகரிக சம்பவத்தைக் கண்டித்து தொழில் அமைச்சர் தான் ஒரு முஸ்லிம் என்ற முறையில் ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டிருந்தார். இப்பொழுது அந்த அறிக்கைக்கு பதிலறிக்கை வெளியாகியிருக்கிறது. செய்த பிழையையும் செய்துவிட்டு நல்லவர்கள் வேடம் போட முயற்சிகள் நடைபெறுகிறது.

### இராஜதந்திரம் வேண்டும்

வெளிநாட்டுத் தூதுவரகங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவது ஒன்றும் அதிசயமானது அல்ல. அதேபோன்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் அவர்கள் நாடு சம்பந்தப்பட்ட விடயங்களில் வேண்டுகோள் விடுவதும் ஒன்றும் புதிதல்ல. இக்காட்சிகளை நாம் இலங்கையிலேயே பல முறை பல தூதுவரகங்களுக்கு முன் பார்த்திருக்கிறோம். அப்பொழுதெல்லாம் சம்பந்தப்பட்ட தூதுவரக அதிகாரிகள் எங்ஙனம் இராஜதந்திரத்துடன் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை நாம் இங்கு விளக்கத் தேவையில்லை. இம்முறையினை எதிர்காலத்திலா [illegible] பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

## தி. மு. க.வின் பொருளாதார கொள்கை என்ன?

### அண்ணா விளக்குகிறார்

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கப்போகும் தி. மு. கழகத்தின் பொருளாதாரக் கொள்கையென்ன என்பதை சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தி. மு. க. தலைவர் அறிஞர் அண்ணா விளக்கினர். தனியார் துறை பல்கிப் பெருக வேண்டுமென்று ராஜாஜி விரும்புகிறாரே, இந்தக் கொள்கையும் தி. மு. க. வின் சோசலிசக் கொள்கையும் எப்படிப் பொருந்தும் என்று ஒரு நிருபர் அறிஞர் அண்ணாவிடம் கேட்டபோது அண்ணா கூறியதாவது:—

''ராஜாஜியை காலக்கிரமத்தில் என்வழிக்குக்கொண்டு வந்துவிட முடியும் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சினையில் ராஜாஜி சொல்வது சரியா தவறா என்பது பிரச்சினையில்லை. தான் சோசலிசத்தை எதிர்க்கவில்லை, அரசாங்க ஆதிக்கத்தையே எதிர்ப்பதாக ராஜாஜி திட்டமாகச் சொல்லியிருக்கிறார்.

''சோசலிசம் அரசாங்க ஆதிக்கத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் என்று சுதந்திரக் கட்சி கருதுகிறது. சுதந்திர வர்த்தகம் பொருளாதார சக்தியை ஒரு சிலர் கையில் குவித்துவிடும். அது, பொதுஜன நலனுக்கே கேடு விளைவித்துவிடும் என்று தி. மு. க. கருதுகிறது. எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லாத தொழில் வர்த்தகம் என்ற காலம் மலையேறிவிட்டது. அதை இனிக் கிளப்பமுடியாது.

''பொருளாதார சக்தி ஒருசிலரிடம் குவிந்துவிடாத முறையில், சுதந்திர வர்ந்தகத்தை ஒழுங்கு படுத்துவதே தி. மு. க. வின் நோக்கமாக விருக்கும்.''

### அடுத்த இதழில்

★ அ. அமிர்தலிங்கம் பா. உ.
எழுதும்
'இ[illegible]கை இந்திய சட்டங்கள்'

★ சி. கதிரவே[illegible]பிள்ளை பா. உ.
எழுதும்
'ஆலயப் பிரவேசமும் சட்டமும்'

நெல்லை க. பேரன் எழுதும் 'இலங்கையில் இலுமினேட் உற்பத்தி'

'வளவன்' எழுதும் 'மொழி பெயர்ப்புப் பிரச்சினைகள்'

## 77 அமைச்சர்கள் மண கவ்வினர்

நடந்து முடிந்த இந்தியப்பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு நாடு பூராவிலும் பலத்த அடி [illegible]ந்திருக்கிறது. மொத்தம் 77 காங்கிரஸ் அமைச்சர்கள் தோல்வி அடைந்திருக்கிறார்கள்.

மத்திய அரசாங்க காபினட் அந்தஸ்து உடைய அமைச்சர்களான எஸ். கே. பட்டீல் (புகையிரத இலாகா) சசீந்திர சவுத்திரி (நிதி) சி. சுப்பிரமணியம் (உணவு) சஞ்சீவையா (தொழில்) மனுபாய்ஷா (வர்த்தகம்) ஆகியோர் தொல்வியடைந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்க கபினட் அந்தஸ்து இல்லாத அமைச்சர்களான ஏ. எம். தாமஸ் (ராணுவம்) கன்னா (ராஜாங்க) டி. என். சிங் (இரும்பு) ஆகியோரும் தோல்வி அடைந்துள்ளார்கள்.

இவர்களை விட மத்திய அரசாங்க உதவி மந்திரிகள் ஆறு பேர் தோல்வி அடைந்துள்ளனர். அவர்களில் நால்வர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

மாநில வாரியாக பார்க்கையில் தமிழ் நாட்டில் மொத்தம் எட்டு அமைச்சர்களில் ஏழு பேர் தோல்வி அடைந்துள்ளார்கள். பஞ்சாப்பில் முதல் அமைச்சர் சூர் முக்சிங் உட்பட ஐவர் தோல்வியடைந்துள்ளார்கள்.

பீகாரில் முதல் அமைச்சர் பி. சி. சென் உட்பட ஐவர் தோல்வி அடைந்துள்ளார்கள். ஆந்திராவில் மூன்று அமைச்சர்கள் தோல்வி அடைந்துள்ளார்கள். மைசூரில் மூன்று அமைச்சர்களும், மத்திய பிரதேசத்தில் ஏழு அமைச்சர்களும், அசாமில் ஐந்து அமைச்சர்களும், குஜராத்தில் மூன்று அமைச்சர்களும், ஒரிசாவில் நாலு அமைச்சர்களும், புதிய அரியானா மாநிலத்தில் ஏழு அமைச்சர்களும், ராஜஸ்தானில் மூன்று அமைச்சர்களும், இமாலயப்பிரதேசத்தில் இரண்டு அமைச்சர்களும், எதிர்க்கட்சிகளினால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள்.

## வேண்டும் இடமாற்றம்

கொழும்பில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு நடைபெற்றதாகக் கூறப்படும் பாராட்டுக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் மூன்று தமிழாசிரியர் என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது. இவர்கள் மூவரும் ஒரு ஆசிரிய சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள். தங்கள் பதவிப் பலத்தைக் கொண்டு கொழும்பில் உள்ள வேறு சில ஆசிரியர்களுக்கும் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுத் தருவதாக ஆசை வார்த்தை கூறி இவர்கள் கூட்டச் செலவுக்கு பணம் பெற்றுக் கொண்டார்கள் என்று தெரிகிறது.

குறிப்பிட்ட மூவரில் ஒருவர் பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள ஒரு தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியர். மற்றவர் கோட்டடிப் பகுதியில் உள்ள ஒரு சிறு தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியர். இவர்கள் இருவரதும் கல்லூரிப் பிள்ளைகள் கூட்டத்திற்கு ஒழுங்காக வந்து பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை அழகாக கைதட்டியது கூட்டத்தில் எல்லாரது கவனத்தையும் இழுத்துக்கொண்டது.

கூட்டத்திற்கு வருகை புரிந்திருந்த ஆசிரியர்களில் சிலர் குறிப்பாக பெண் ஆசிரியர்கள் 'வடபகுதி இடமாற்றம்' என்ற மண் குதிரையை நம்பி வந்தவர்கள் என்று கூட்டத்திலேயே குசுகுசுக்கப்பட்டது.

## மீண்டும்! தமிழியக்கம்

தமிழ்மொழிச்சட்ட அமுலைத் தீவிரப் படுத்தும் நோக்கத்துடன் மொழிவழித் தொழிற் சங்கங்களில் ஒன்றான அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஆங்காங்கே பிரச்சார இயக்கங்களைத் தீவிரமாக முடுக்கி விடும் முயற்சியில் துன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

மார்ச் 9, 10, 17, 23ம் திகதிகளில் சங்கத்தின் பிரச்சார ஆலோசனைக் கூட்டங்கள் வடமாகாணத்தில் பல பகுதிகளில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது என்று தெரிகிறது. இவ்வாலோசனைக் கூட்டங்களை அடுத்து விரிவான பிரச்சாரப் பொதுக் கூட்டங்கள் நடாத்தப்படும்.

பிரச்சாரப் பொதுக் கூட்டங்களுக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மொழிவழித் தொழிற்சங்கத் தலைவர்களும் அழைக்கப்படுவார்கள்.

இப் பிரச்சாரக் கூட்டங்களை சங்கம் நடாத்துவதன் முக்கிய நோக்கம் தமிழ் பொதுமக்களை தமது கருமங்களைத் தமிழில் ஆற்றும் வண்ணம் தூண்டுவதற்கே என்பது புலனாகிறது. எல்லாம் தமிழ் இயக்கம் போன்றே அ. எ. சங்கம் இது பற்றி சுவரொட்டிகளையும் வெளியிட்டிருக்கிறது. சுவரொட்டிகளில் மூன்று உண்மைகள் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்பேசும் மக்கள் தமது கருமங்களைத் தமிழில் செய்வதனால் தமிழ்பேசும் அரசாங்க ஊழியருக்கு தொழில் பிச்சை கொடுக்கிறார்கள் என்றும், தமிழ்பேசும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழி சமைக்கிறார்கள் என்றும், வருங்கால தமிழ்பேசும் சந்ததிக்கு வேலை வாய்ப்பு உறுதிப்பாடு உண்டு என்றும் விளக்கப்பட்டுள்ளது. இத்தமிழியக்கத்தை யொட்டி எ. வி. சங்கம் சில துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போவேன்

தண்டச் சோத்து ராமனும் என் தாய் மாமனுக்கு நான் பாரமாய் இருந்ததுமல்லாமல், என் தங்கையும் பாரமாய் இருந்தாள். அவளாவது வீட்டு வேலைகளைச் செய்தல் என்ற பலி கொடுத்து மாமி யென்கின்ற பத்திரகாளியைக் குளிர்ச்சி பண்ணிக் கொண்டிருந்தாள். யானோ வேலை வெட்டி எதுவுமின்றி ''வா'' என்று கூப்பிட்டால் போய் உட்கார்ந்து, 'விழுகுங்' என்று கூறினல் சாப்பிட்டு, ஏனைய கருமமாகிய தூக்கத்துக்காக வாசிகசாலை என்று திருநாமம் பூண்டுள்ள கிராம முன்னேற்றச் சங்கக் கொட்டிலிலே தவம் செய்யும் நீண்ட மேசையிற் புழுதி படியாவண்ணம் நீட்டி நிமிர்ந்து படுத்துக் காலத்தைக் கொல்வதே மூன்றுண்டுகளாக என் கடமையாகவும் வேலையாகவும் பொழுதுபோக்காகவும் அமைந்துவிட்டது. இப்படி நான் மாத்திரமல்ல என்னைப்போல் அரைகுறையாய், எஸ். எஸ். சி. யின் ஆறுபாடச் 'சித்தி'கள் என்ற கரைகாணுத 'அறிஞர் திலகங்'களுக்கு எங்களூர் கி. மு. வாசிகசாலை நித்திய அபயகரம் அளித்து வந்தது. எவன் முந்துகிறனே அவனுக்கு பெரிய மேசை கட்டிலாக மாறும். 'சங்கீதக் கதிரை'ப் போட்டி மானசீகமாக நடைபெறும். பெரும்பாலும் வெற்றிபெறும் என் ஆட்சியே மேஜைமீது நிலைக்கும்.

இந்த நிலையில் ஒருநாள் தந்திக்காரன் எனக்குக் கட்டியங்கூறித் தந்தியொன்றைத் தந்தான். என் விரல்கள் தந்தியடிக்கத் தந்தி உறையைப் பிரித்தேன் ''உடனே புறப்பட்டு வரவும். வேலை கிடைத்திருக்கிறது'' என்ற வாசகத்தைக் கண்டதும் எனக்கு இந்திரலோகப் பவிசு கிடைத்ததோ என மனம் மருண்டது.

பொன்னையாண்ணர் இப்படி ஒரு தந்தியை அடிப்பாரென்றே, எனக்காக வேலை தேட முயலுவாரென்றே நான் கனவுகூடக் கண்டதில்லை. ஏனெனில், என் விவேகமும் எனது சேட்டிப்பிக்கற் 'வால்'யுவும் அவருக்கு நன்குத் தெரியும். ஐந்து வருடம் எஸ். எஸ். சிப் பரீட்சைக்கு எழுதிக் கிழித்த புராணமெல்லாம் அவர் அறிந்த வரலாறு. எனினும், சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து அனுதரவான நிலையில் இருந்த எங்களிடம் கொண்ட அனுதாபம் காரணமாக இந்த அதிவிசேட அக்கறை எடுத்திருக்கலாம் என நினைத்துக்கொண்டேன். அவர் ஒவ்வொரு முறையும், பாடசாலை விடுமுறைக்காக ஊரில் வந்து 'வாடியடித்'திருந்த நாட்களில் ஏதோ முசுப்பாத்தியில் எனக்கு ஒரு வேலை தேடித் தரும்படி கேட்டும் இருக்கிறேன். பொன்னையாண்ணர் வலு சூரன்தான்! அவருடைய சூரத்தனத்தை நினைக்கும் பொழுது என்னுடைய திண்டாட்டமும் மனதை உதைத்துக்கொண்டது. கொழும்புக்கு அன்றே புறப்பட்டாக வேண்டும்.

சிலர் பிரயாணம், உத்தியோகம், பொழுது போக்கு என்பவற்றுக்காக தனித்தனியே உடைகளை மடிப்புக்குலையாது வைத்திருப்பார்கள். எனக்கும் இரண்டுநாள் அவகாசம் இருந்திருந்தால் லோண்டறிக் காரனின் இருபத்தி நாலு மணித்தியால 'அர்ஜன்ட் சர்வீ'சை என் வாழ்நாளில் ஒரேயொரு தடவையாவது உபயோகித்திருக்கும் பேறு அடைந்திருப்பேன். ஆனல், இன்றே சுடுகுது மடியைப்பிடி என்று புறப்பட முடிவாகியிருக்கும்போது என்ன செய்ய முடியும்? அதிலும், என்னிடம் சொந்தமென்றிருந்தது இரண்டு வேட்டியும் இரண்டு சட்டையும். ஏதோ எனக்குத்தெரிந்த தொழில் நுணுக்கமெல்லாவற்றையும் பிரயோகித்து நானே காரியத்தை முடித்தேன். திரும்ப கி. மு. சங்க வாசிகசாலையில் உடைகளை மடித்து மேசையின்மேல் போட்டு அதன்மேல் சயனித்து அதன்மூலம் அவற்றிற்கு 'இஸ்திரிக்கை' மடிப்புக் கொடுத்ததாக என்னையே நம்பவைத்துக் கொண்டேன். நல்ல உழைப்பாளிகள் அல்லது வருமானமுள்ளவர்கள் அதிகம் டாம்பீக உடைகளில் அக்கறை செலுத்த மாட்டார்கள். ஒரு சல்லிகூட வருமானமற்றவன் அரை மந்திரியாரைப்போல உடைக்கடையாகக் காட்சியளிப்பான். யானோ இரண்டும்கெட்ட திரிசங்குவாக வாழ்ந்தேன்.

அடுத்தநாள் காலையில் கோட்டைப் புகைவண்டி நிலையத்தில் இறங்கியபோது எல்லோரும் மூட்டை முடிச்சுப் பெட்டிகள் சகிதம் நெளிந்து வளைந்து சிரமப்பட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அடியவன் அந்த அவஸ்தைகளுக்காளாகாமல் சூட்கேஸ் என்று நான் நினைத்துக் கொண்டிருந்த எனது கடதாசிப்பார்சலுடன் பிளாத் பாரத்தில் இறங்கிப் பொன்னையாண்ணருக்காகக் காத்து நின்றேன். ஒருவேளை அவர் வராது விட்டால் என்ற ஏக்கமும் உதைத்துக் கொண்டது. ஒவ்வொரு பிரயாணியையும் உறவினரோ நண்பர்களோ அழைத்துக்கொண்டு போகும் போது, என்னையழைத்துப் போகப் பொன்னையாண்ணர் வந்திருந்தால் எனக்கும் அவர்களைப்போன்ற மிடுக்கு ஏற்பட்டிருக்கும். இப்போதுஎன்ன செய்வதென்று அவரின் முகவரியுடைய துண்டை எடுத்துப் பார்த்துக் கொண்டேன். நிமிர்ந்ததும் பொன்னையாண்ணர் முன்னே திருக்காட்சி தந்தார்.

அவர் 'தம்பி' என்றார். நான் 'அண்ணே' என்றேன்! என் பயமெல்லாம் தீர்ந்தது. என்னை அழைத்துப்போகவும் ஒருவர் கிடைத்தார் என்ற பெருமையில் அவரையே மறந்து நின்றேன்.

'எப்படிப் பிரயாணம்? கஷ்டமில்லாமல் இருந்ததா?' என்று கேட்டார்.

'எல்லாம் வசதியாய் இருந்தது' என்று ஒப்புக்குச்சொன்னேன்.

ஆனல், ஒவ்வோர் ஆசனத்தையும் சொந்தமாக வாங்கியதுபோல் இரவு முழுவதும் நீட்டி நிமிர்ந்து சிலர் உறங்கிக் கொண்டிருக்க, நான் நெடுநேரம் நின்று வந்த மொக்கேனமான சங்கதியை எப்படிக் கூறமுடியும்?

பொன்னையாண்ணர் வீடென்று சொல்லியழைத்துச் சென்றது, மூச்சு விட்டால் எதிர்ச்சுவர் அசையக்கூடிய மிகச்சிறிய அறைதான். எனினும் அதில் மூன்று பேர் ஒருவர் தலையில் மற்றவர் காலை உல்லாசமாகப் போட்டுக் கொண்டு படுக்கக்கூடியதாகக் கட்டில்களை அடுக்கியிருந்தனர். ஊரில் நாங்கள் பெருமையாக நினைக்கக்கூடியவர்கள் இப்படியான மூலைகளில்தான் ஒதுங்குகிறார்கள் என்ற உண்மை இப்போதுதான் தெரிந்தது.

பொன்னையாண்ணர் வேலை கிடைத்த கதையையும், வேலை என்ன என்பதையும் விளக்கினர்.

**சுதந்திரன் பொங்கல் மலர் சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பெறும் கதை.**

**(5)**

'சம்பளத்தை முதலில் எதிர்பார்க்க வேண்டாம். கிடைக்கிறதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்று புத்திமதியுடன் தன்னை மேதையாகவும் உயர்த்திக் கொண்டார். ஒவ்வொரு வார்த்தையும் வேதவாக்காகவே இருந்தது. எல்லா விஷயத்திலும் நல்ல பிள்ளையென்று என்னை அவர் எண்ணிக்கொண்டிருந்தார்.

'கொழும்பில் உள்ளவர்களுக்கு எங்கடை பொட்டுக் கேடுதெரியக்கூடாது. ஆகவே, உந்த வேட்டியைக் கட்டிக் கொண்டு வெளியில் திரிவது சரியில்லை. உன்னிடம் எத்தனை காற்சட்டை கிடக்கிறது?' என்று கேட்டபோது நான்தலை குனிந்தேன்,

அவர் மதிப்பும் ஒருவேளை பாதிக்கப்படுமோ என்று அஞ்சினேன். அவர் கேட்ட பாக்கியம் இதுவரைஎனக்குக்கிடைக்கவில்லையே. அன்றே என்னிடம் கைச் செலவுக்கிருந்த பணத்துடன் பொன்னையாண்ணர் தன் பணத்தையும் சேர்த்து றெடிமேட் காற்சட்டை சப்பாத்து ஆகியவற்றை வாங்கித் தந்தார். எனக்கு ஒருவகைக் கூச்சமிருந்தாலும் புதிய நாகரீகத்துக்குள்புகுந்துவிட்டதில் மகிழ்ச்சியடைந்தேன். இத்தனைக்கும் பொன்னையாண்ணர் ஓர் தமிழ் வாத்தியாருக்குரிய தோற்றத்தில் இருந்துகொண்டேஎனக்கு வேஷம் கட்டினர்.

தமிழ் ஒரு சிறந்த மொழியென்று தெரிந்ததாலோ, கோடிக்கணக்கான மக்கள் அதனைப் பேசுகிருர்கள் என்ற காரணத்தாலோ, பல்வேறு நாடுகளிலும் அது பேசப்படுகிறதென்ற காரணத்தாலோ எனது புடவைக்கடை முதலாளி— பாகிஸ்தான்காரர்— —தனது பிள்ளைகளுக்கு இரண்டாவது மொழியாகத் தமிழைப் படிக்க ஏற்பாடு செய்தார். பொன்னையாண்ணர்வீட்டுக்குச் சென்று பாடம்சொல்லிக் கொடுத்த அறிமுகத்தில், எனக்கு வேலை வாங்கித் தந்தார்.

இப்போது இரண்டாம் குறுக்குத்தெரு எனக்குப் பழைய பாடமாகிவிட்டது. எனினும், வேலைதான் புரியமுடியாத ஒன்றுய் இருந்தது. ஒருநாள் விற்பனையாளனுயும், இன்னெருநாள் டைப்பிஸ்ராயும், இன்னெருநாள் மனேஜரென்று எண்ணக்கூடியதாயும வேலை மாறிக் கொண்டேயிருந்தது. ஆனல், சம்பளம் எந்தவித மாற்றத்தையும் அடையாமல் ஐந்து தாள்கள் ருபத்தில் பதினைந்து தடவை முதலாளிஎண்ணிவிட்டுத்தான் தருவார். நான் சம்பளம் பெற்றதற்கு ஆதாரமாய் 'முத்திரையின்மேல் கையெழுத்திடும்போது நாற்றைம்பது ரூபாய் பெற்றுக் கொண்டதாக மாத்திரம் கையெழுத்திட்டுக்கொண்டு வரவேண்டியிருந்தது.' என்னைப்போல் அந்த மொத்த வியாபார ஸ்தாபனத்தில் வேலை செய்த முப்பது தொழிலாளருக்கும இந்தக் கதிதான். யாராவது சம்பளம் கூட்டித் தருமாறு கேட்டால் எல்லார் காதிலும் விளக்கூடியதாக 'நிம்பள் இன்னு செய்து களிக்கிறிங்க சம்பளம் கூட்டித்தர' என்று கன்னல் சொட்டும் தமிழில் கேட்டுவைப்பார். யாராவது சம்பளம் கூடக் கேட்கக்கூடாதென்பதற்காக ஊழியர்களில் பழைபிடிக்கும் விஷயத்தில் கண்ணில் எண்ணெய்ஊற்றிக் கொண்டிருப்பார். அதனல் எவரும் உத்தியோகம் ஏற்ற ஆண்டுவிழாக் கொண்டாடுமுன் வேறு கடை பார்த்துச் சென்றுவிடுவார்கள்.

பொன்னையாண்ணரின் புண்ணியத்தில் நான் இரண்டு வருடத்தை அங்கு செலவழித்து ஒரு புதிய றெக்கார்ட்டை ஏற்படுத்தினேன். மூன்றுவது வருடமே அடியேன் தலைமைக் கிளார்க்காக நியமிக்கப்பட்டேன். சம்பளமும் இரட்டிப்பானது. வேலையும் பன்மடங்காகப் பல்கிப் பெருகியது.

வருமான வரிக்கு 'டிமிக்கி' கொடுக்கிறதற்காக ஒரு கொப்பியும், அந்தரங்கமான வருமானத்துக்காக இன்னுெர் கொப்பியும், ஏற்றுமதி இறக்குமதி இலாக்காவை ஏமாற்ற இறக்குமதி செய்யும் பொருட்களின் விலைகளில் மோசடிசெய்ய வெவ்வேறு கொப்பிகளுமாக எதில்எதிலெல்லாமோ எனக்கு அதிர்ச்சி தரும் பயிற்சிகளையெல்லாம் முதலாளி என் கையைப் பிடித்தெழுதாக்குறையாக எழுதுவிற்பதற்குப் பயிற்சி தந்தார்.

ஒருமுறை எனது மாமா நான் வேலை செய்யும் இடத்துக்குவந்து பார்த்தார். எனது பிரத்தியேக அறை அந்தஸ்து எல்லாவற்றையும் பார்த்துவிட்டு எனக்குச் சம்பளம் முன்னூறே நாநூறே என்று எண்ணிக்கொண்டு, 'என்னடா உனக்குச் சம்பளம்? வீட்டுக்கும் ஒருசதம் அனுப்பிறேல்லை. எல்லாவற்றையும் எடுத்து என்ன செய்கிருய்?' என்று சமுசயத்துடன் கேட்டார்.

அவருக்கென்ன தெரியும்? சம்பளம் பெற்ற பத்தாம் நாளே பஸ்வண்டியுடன் 'டு' விட்டு விட்டு பாதையோரமாய் நடந்து வேலைக்குச் செல்லும் பரிதாபச் சம்பவத்தை! சாப்பாட்டுக் கடைகாரனுக்கும் வீட்டு வாடகைக்கும் முக்காலே மூனு போனதற்கப்புறம் அடுத்த சம்பளம் வருவதற்குள், நாலு பேரிடம் 'கைமாத்து'க் கேட்டுக் கேட்டு பொய் பேசவும் 'நடிக்கவும் தெரிந்து வைத்திருக்கிறேம்.

மாமா புறப்படும்போது பிரயாணச் செலவுக்கு ஒருசதமும் கொடுக்கமுடியாது பட்ட வெக்கக் கேட்டை யாரிடம் சொல்வது? அது தனி ஒரு கதை.

ஊரில் எல்லோரும் எனக்குக் கிடைத்த உத்தியோகத்தின் அந்தஸ்தைப்பற்றிப் பெரிதாக எண்ணிக்கொண்டிருந்தனர். எனக்கு என் தங்கையை எப்படியும் கரைசேர்க்கவேண்டும் என்ற கவலை அரித்துக் கொண்டேயிருந்தது. ஆயிரக்கணக்கான பல ரகத் துணிகளுக்கிடையே நீச்சலடித்தும் அவளுக்கு ஒரு பத்து ரூபாவுக்குத் துணியெடுத்துப்போகாத நிலையில் ஊருக்குப் போவதையும் நிறுத்திவிட்டேன்.

மீண்டும் ஒருதடவை மாமா ஊரிலிருந்து அவசர அவசரமாக வருகை தந்தார். இம்முறை அவர் தனியாகப்போக விரும்பவில்லை. கையோடு என்னையும் அழைத்துச் சென்றார். ஏன் அழைத்துச் செல்லப்படுகிறேன் என்று தெரியாது திண்டாடினேன். வீட்டில் திருமணமொன்றுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. எனது தங்கைக்குத்தான் ஏதோ நல்ல காலம் பிறந்துள்ளதென்றெண்ணி மகிழ்ந்த என[illegible] கேட்ட விபரம் அதிர்ச்சி[illegible] தந்தது.

உண்மையில் மாப்பிள்ளை நான்தான். எங்கோ உள்ள முன் பின் தெரியாத ஒருபெண் தன் தலைவிதிக்காக என் கால்களைக் கட்டிக்கொள்ளப்போகிறுள். திரும்பி யாருக்கும் தெரியாமல் ஓடிவிடலாமா என்று கூட எண்ணினேன். ஆனல், நான் இந்தக் கலியாணத்தைச் செய்யாது விட்டால் என் தங்கையைக் கரைசேர்க்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விடுமாம். பெண்ணின் அண்ணன் அரசாங்க உத்தியோகத்தன். ஆகவே, இதைச் செய்துதான் ஆகவேண்டும் என்று பிடியாய்ப் பிடித்தனர்.

தான் போக வழியற்றபோது சங்கைக்காக விளக்குமாற்றைத் தூக்கிய மூஞ்சூறுக எனது எதிர்காலம்காட்சியளித்தது. 'பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை' யென்பதுபோல் எனது உத்தியோகத்தையும் சம்பளத்தையும் என்னைத் தவிர வேறு யாரால் புரிந்துகொள்ளமுடியும். இருந்தும் எல்லோரும் கரும்பாய் ஏற்றுக்கொள்ளும் திருமணத்தை வேம்பாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

அன்று என் கவலைகள் தீரக் கடைசித் தடவையாக பென்சன் பெறும் தசையை அடைந்துகொண்டிருந்த கி. மு. சங்க வாசிகசாலையின் நீண்ட மேசையின்மேல் கட்டையைச் சரித்து ஒரு தூக்கம் போட்டேன். ஏறக்குறைய அந்தக் கட்டிடமும் என்னைப்போலவே யாருக்கும் உபயோகமற்று ஒதுங்கிக் கிடந்தது.

திருமணத்தின்பின் மீண்டும் வேலை உண்டு நான் உண்டு என்று கொழும்புக்குச் சென்றுவிட்டேன். சகபாடிகளின் கேலியோ கிண்டலோ எனக்குச் சுவையாகப் படவில்லை. மனதுக்குப் பாரமான ஒருகாரி

(14-ம் பக்கம் பார்க்க)

இராஜகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் தோற்றது ஏன்?

இருபது ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சிக்கு தமிழ் நாட்டில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. தமிழ் நாட்டு வாக்காளர்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை தி. மு. கழகத்திடம் கையளித்துள்ளார்கள்.

### காரணங்கள்

தமிழ் நாட்டில் நிலவிய உணவுப் பற்றுக் குறையும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புமே இந்த மாற்றத்திற்கு அதி முக்கிய காரணங்களாகும். மக்களை மறந்த காங்கிரஸ் ஆட்சியின் போக்கும், தில்லி முடிவுகளுக்கு தலையசைக்கும் காங்கிரஸ் தலைவர்களின் கோயில் மாட்டு மனப்பான்மையும், மொழிப் பிரச்சினையும் இம் மாற்றத்திற்கான துணைக் காரணங்களாகும்.

ஆழவேர்ஊன்றிய முதிர்ந்த ஆலமரமான காங்கிரசை இத்தனை [...]பமாக பதவியிலிருந்[...]. மு. கழகம் தூக்கி யெறி[...]தமைக்கு கழகம்எதிர்க் கட்சிகளுடன்செய்துகொண்ட உடன்பாடும் காரணமாகும்.

இளைஞர் சமுதாயத்தின் குறிப்பாக மாணவர்களின் எழுச்சியும் கழகத்தின் வெற்றிக்கு பெருந் துணையாக இருந்தது. இந்த உண்மையை விருதுநகர் நிரூபித்துள்ளது.

மக்களின் நாடித்துடிப்பை நன்கு உணர்ந்த தி. மு. கழகத் தலைவர் அறிஞர் அண்ணு அதற்கேற்ற முறையில் தமது தேர்தல் அறிக்கையைத் தயார் செய்ததும், தேர்தல் வாக்குறுதிகளை அளித்தும் மக்கள் காங்கிரஸ் மீது கொண்டிருந்த வெறுப்பைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார்.

### எல்லாம் கியூ வரிசை

காங்கிரஸ்' ஜனநாயக சோசலிசம்' என்பதை உதட்டளவுடனேயே நிறுத்திக்கொண்டது. நாட்டு மக்கள் காலை எழுந்து மாலை தூங்கச் செல்லும் வரை தமக்கு வேண்டிய அன்றுட உணவுப் பொருட்களையும் ஏனையவற்றையும் பெறுவதற்கு நீண்ட கியூ வரிசைகளில் நிற்க வேண்டியவர்களானுர்கள். கியூ வரிசையில் மணிக்கணக்காக நின்று பலர் தமக்கு வேண்டியவற்றைப் பெற முடியாதவர்களானுர்கள். பணம் வைத்திருந்த மக்கள் கூட தமக்கு வேண்டியவற்றைப் பெற முடியாது கஷ்டப்பட்டார்கள். இதனுல் காங்கிரஸ் ஆட்சி மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

பணமில்லாத மக்கள் காங்கிரஸ் ஆட்சியில் அதுவும் கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் தினம் தினம் சிறிது சிறிதாகச் செத்துக்கொண்டே வந்தார்கள். சோறுடைத்து சோழவள நாடு என்று பெருமை பேசிய நாட்டில் ஒரு படி அரிசி மூன்று ரூபா விலை போனது. நெற் களஞ்சியம் என்று வர்ணிக்கப்படும் தஞ்சாவூரிலும், காவேரி ஆற்றுப் படுக்கைகளிலும், கூட ஒருபடி அரிசி மூன்று ரூபா விலை போனது என்றுல் காங்கிரஸ் ஆட்சி மீது மக்கள் எத்தனை தூரம் வெறுப்படைந்திருப்பார்கள் என்பது புலனுகும்.

### ஒரு படி ஒரு ரூபா

வாழ்க்கைச் செலவு என்றுமில்லாத முறையில் கடந்த சில ஆண்டுகளில் உயர்ந்தது. தொழிலாளரும், நடுத்தர மக்களும் வாழ்க்கைச் செலவு உயர்வினுல் தினமும் நசிந்தார்கள். கடந்த ஆண்டில் ஏற்பட்ட நாணய மதிப்பு வீழ்ச்சி மேலும் நிலைமையை மோசமாக்கியது.

காங்கிரசின் ஜனநாயக சோசலிசத்தில் பணக்காரன் மேலும் பணக்காரனுகவும், ஏழை மேலும் ஏழையாகவும் மாறிக்கொண்டிருந்த நிலைமையே ஏற்பட்டது. இது பற்றி காங்கிரஸ் தலைவர்களிடம் கேட்டபொழுது எல்லாம் அவர்கள் மக்களை மறந்து 'அன்றைய வாழ்க்கை முறையா இன்று? அன்றைய குறைந்த ஊதியமா இன்றும் வழங்கப்படுகிறது?'' என்று திருப்பி வினு எழுப்பினுர்கள். இந்த நாத்தடிப்பான பேச்சை தேர்தல் காலத்தின் போதும் பழைய நிதி அமைச்சர் திரு டி. டி. கே. ஆங்காங்கே கூறிவந்திருக்கிறுர்.

இச்சூழ்நிலையை தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிக் கூட்டணி சிறப்பாக தி. மு. கழகம் நன்கு பயன்படுத்திக் கொண்டது. 'ஒரு ரூபாவுக்கு ஒருபடி அரிசி' என்ற கோஷத்தை தி. மு. கழகம் மக்கள்முன் வைத்தது.

### மொழிப் பிரச்சினை

உணவுப் பிரச்சினையும், வாழ்க்கைப் பிரச்சினையும் போன்றே மொழிப்பிரச்சினையும் ஒரு தேர்தற் பிரச்சினையாகியது. உணவுப் பிரச்சினையும் வாழ்க்கைப் பிரச்சினையும் எங்ஙனம் நடுத்தர மக்களையும், தொழிலாளர்களையும் கவர்ந்ததோ அதே போன்று மொழிப்பிரச்சினை இளைஞர்களைக் குறிப்பாக மாணவர்களைக் கவர்ந்த பிரச்சினையாகியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாடு ஒரு மாபெரும் மொழிப் போராட்டத்தைக் கண்டது. அப்போராட்டம் அரசியல் கட்சிகளின் சார்பின்றி மாணவர்களால் நடாத்தப்பட்டதாயினும் தி. மு. கழகமும், சுதந்திராவும் அப்போராட்டத்திற்கு ஆத்மீக ஆதரவு நல்கின என்பதை மறுக்க முடியாது. இவ்விரு கட்சிகளும் அன்று நல்கிய ஆத்மீக ஆதரவுக்கு நன்றிக் கடனுக மாணவர் சமுதாயம் தங்கள் ஆதரவை தி. மு. கழகத்திற்கு தாரை வார்த்துக் கொடுத்ததுடன் காங்கிரஸ் பெருந் தலைவர்களின் தொகுதிகளில் கூடாரமடித்து அவர்களை மண் கவ்வவும் செய்தது.

### கோயில் மாடுகள்

காங்கிரஸ் அரசாங்கம் தாங்கள் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகள்என்பதை மறந்து தில்லி அரசாங்கத்தின் தமிழ் நாட்டு ஏஜண்டுகள் என்ற நிலையிலேயேஇயங்கிவந்தனர். தில்லித் தலைமையின் முடிவுக்குத் தலையசைப்பதையே கடமையாகக் கொண்டது தமிழ் நாட்டுக் காங்கிரஸ். இந்த உண்மை மொழிப் போராட்டத்தின்போது துலாம்பரமாகியது. இதனு[ல்] இளைஞர் சமுதாயம் மட்[டு]மல்ல பொதுவாக தமிழ்நாட்டு மக்களை ஜாதி, வர்க்க வேறுபாடின்றி காங்கிரசின் போக்கை வெறுத்தனர்.

### சர்வாதிகாரம்

தில்லி முடிவுக்குத் தலையாட்டுகின்ற தமிழ் நாட்டு காங்கிரசின் கொள்கையும், நீண்டகாலமாக ஆட்சி அதிகாரத்தில் வேர் ஊன்றிய காரணத்தினுல் ஏற்பட்ட அலட்சியப்போக்கும் தமிழ் நாட்டு மக்களின் மனக் குறைகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் சீரிய ஜனநாயகப் பண்பை காங்கிரசிற்கு இல்லாமற் செய்துவிட்டது. நாட்டு மக்களின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ளாது செயல்பட்டதுடன், பல சந்தர்ப்பங்களில் மக்களின் [வி]ருப்பத்திற்கும் எழுச்சிக்கும் மாறுபட்ட முறையில் முடிவெடுக்கும் ஒரு சர்வாதிகார மனப்பான்மையையும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வளர்த்துக்கொண்டது. காங்கிரசின் இச் சர்வாதிகாரப் போக்கும் அதன் தோல்விக்கு ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

### புறச்சூழல்

இச்சூழ்நிலைகளை உரியமுறையில் பயன்படுத்திக்கொண்டது தி. மு. கழகம். காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகளை ஒருமுகப்படுத்தியது. இத்தனைக்கும் மேலாக இளைஞர் சமுதாயத்தின் பேராதரவைத் தனதாக்கிக்கொண்டது கழகம்.

கடந்த காலங்களைப் போலன்றி கழகத்தின் வெற்றிக்கு வேறு புறச்சூழ்நிலைகளும் சாதகமாக அமைந்திருந்தன. குறிப்பாக தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் இம்முறை நடுநிலைமை வகித்தன. மக்கள் ஆதரவைப் பெருமளவில் பெற்ற சில தினசரி ஏடுகள் எதிர்க்கட்சிக் கூட்டணிக்குப் பகிரங்கமாகவே ஆதரவு தெரிவித்தன.

இத்தனை சாதகமான நிலையு[ம்]-தி. மு. கழகத்தை அதன் தலைவர்களே எதிர்பார்க்காத அளவு வெற்றியுடன்—பதவியில் அமர்த்தியுள்ளது. கழகத்தின் முன் பணிகள் மலைபோல் குவிந்துள்ளன. குறிப்பாக அரிசியின்விலையை உடன் குறைத்தாகவேண்டும். ஏனைய உணவுப் பொருட்களும் கட்டுப்பாட்டுவிலைக்குள்கொண்டு வரப்படவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் நிம்மதியாக மூச்சுவிடமுடியும். கழகமும் கொடுத்த வா[க்]குறுதிகளை நிறைவேற்றிய பெருமையைப் பெறமுடியும்.

கேரளத்திலும் இடதுசாரிக் கூட்டணி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. கேரளத்துத் தண்ணீர் தமிழ் நாட்டுக்குத் தாராளமாகக் கிடைக்கும். கேரளத்து உணவுப் பற்றுக் குறைக்கு தமிழ்நாடு உதவவேண்டும். இதற்கான சூழ்நிலையும் இருக்கிறது. எனவே இரு மாநிலங்களிலும் எதிர்காலத்தில் அமைதி நிலவும் என்பது நிச்சயம்.

பூங்குன்றன்

---

## இந்தி வெறி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கல்லூரியின் பேராசிரியர். இவர் எப்பொழுதும் நல்ல உடை அணியமாட்டார். இவருக்கு குறிப்பிடக்கூடிய உருவ அமைப்பும்கிடையாது. ஆனுல் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளக்கூடிய முறையில் பேசும் ஆற்றல் படைத்தவர்.

இறந்துபட்ட இந்து மகாசபையின் மறு பிறப்பு என்று இதனைக் கூறலாம். ஆனுல் தற்போதைய அரசியல் நிலைமைக்கேற்ப இந்து மகாசபையின் கொள்கைக்குப் புதிய மெருகேற்றி அதனைத் தன்கொள்கையாக இச் சங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது. இந்திய நிலப் பிரபுக்கள், தொழிலதிபர்கள், பெரிய வர்த்தகர்கள் ஆகியோரின் உரிமைகளைக் காப்பதில் ஜனசங்கம் முன்னணியில் நிற்கிறது.

இச் சங்கம் டில்லி மாநிலத்தைத் தேர்தலில் கைப்பற்றிக் கொண்டது.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் ஸ்தாபன அமைப்பு, ஆகியவற்றில் இரு கட்சிகளுக்குமிடையே நிறைந்த ஒற்றுமையும் ஒத்துழைப்பும் உண்டு. இரு கட்சிகளும் ஒன்றுகஇணையும் வாய்ப்பும் இருப்பதாக தேர்தலுக்கு நான்கு தினங்களுக்கு முன்பு சுதந்திரக் கட்சித் தலைவர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## பீகிங் சார்பு கம்யூனிஸ்டு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி பெற்றுள்ளது. ஆகவே வங்க மக்களின் ஒரு கணிசமான தொகையினரும் மேற்கண்ட கொள்கையை ஏற்றுக் கொண்டதாகக் கருதலாம். இதர சில மாநிலங்களிலும் (தமிழ் நாடு உட்பட சீனச் சார்பு கடந்த சட்டசபையில் பெற்றிருந்த ஸ்தானங்களை விட அதிக ஸ்தானங்கள் பெற்றிருக்கிறது. ஆகவே அதன் மேற்கண்ட கொள்கைக்கு (இந்தியாதான் ஆக்கிரமிப்பாளன் என்ற கொள்கைக்கு) நாட்டிலே ஆதரவு கூடிவருகிறது என்று கூறுவதுதவறன்று.

சோவியத் சார்புக் கட்சி அதற்கு மாறுன கொள்கையுடையதாகும். எனினும் இது கேரளத்திலும், மேற்கு வங்காளத்திலும் சீனச் சார்புக் கட்சியுடன் கைகோத்துக் கொண்டிருக்கிறது. கேரளத்திலும், மேற்கு வங்காளத்திலும் சீனச்சார்புக் கட்சியுடன் சேர்ந்து அரசாங்கமும் அமைக்கப் போகிறது.

ஆனுல் தமிழ் நாட்டில் இக் கட்சி எதிர் நீச்சு நீந்துகிறது. அதன் பலனையும் இத்தேர்தலில் அனுபவித்து விட்டது. இரண்டே இரண்டு ஸ்தானங்கள்தான் அதற்குக் கிடைத்தன. வேறு சொற்களில் கூறின் எதிர் நீச்சு நீந்த வேண்டிய ஒரு கட்டாய நிலை[யை இக்] கட்சிக்கு உருவாக்கி[யது] சீனச்சார்புக் கட்சிதான்.

சீனச்சார்புக் கட்சியின் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி தமிழ் நாட்டிலே அரசியற் தந்திரோபாயங்களிலே தலைசிறந்த ஒரு கைதேர்ந்த தந்திரசாலி.

அவரின் உபாயங்களின் விளைவாக சோவியத் சார்புக் கட்சி கூட்டணியிற் சேர விடாமல் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டது. அவரது உபாயங்களுக்குச் சோவியத் சார்புக் கட்சியும் பலியாகி விட்டது.

சோவியத்சார்புக்கட்சியைத் தடுத்தது மட்டுமல்ல கூட்டணியினுல் பெருமளவு அனுகூலங்களையும் சீனச்சார்புக் கட்சி பெற்று விட்டது.

இக்கட்சிக்கு தமிழ்நாட்டில் 11 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. ஆகையால் தமிழ் மக்களில் ஒருகணிசமான தொகையினர் 'இந்தியாதான் சீனுவைத் தாக்கியது —இந்தியாதான் ஆக்கிரமிப்பாளன்' என்ற அதன் கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்டனர் என்று திரு. இராமமூர்த்தி மேடையேறி இனி முழங்கலாம்.

ஆனுல் தமிழகத்தில் சீனச் சார்புக் கட்சி 11 ஸ்தானங்கள் பெற்றது தி. மு. க. வின் வாக்குகளைக் கொண்டுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இல்லையேல் அக் கட்சிக்கு தமிழ் நாட்டில் 2 ஸ்தா[னங்கள்] [...] கிடைத்திருக்கும்.

ஆகவே சீனச் சார்புக் கட்சி பெற்ற 11 ஸ்தானங்கள் தி. மு. க. வெற்றியேயன்றி அக் கட்சியின் வெற்றியன்று.

தீவிரமிக்க, இடதுசாரி மனப்போக்குள்ள இளைஞர்களும், வாலிபர்களும், குழுமி நிற்கும் தி. மு. க. அணியை விட்டுப்பிரிந்து நின்றது சோவியத்சார்புக்கட்சி செய்த தவறுகும். அதனுல் அக்கட்சி தனிப்படுத்தப்பட்டு விட்டது.

இரண்டோர் ஆசனங்களைக் கைப்பற்றுவது அல்ல பிரச்சினை ஒரு பெரிய இடதுசாரி இயக்கத்துடன் இணைந்து நிற்பதுதான் பிரச்சினை. இதில் பெருந்தவறு இழைத்து விட்டது சோவியத் சார்புக்கட்சி.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை. அது காங்கிரசுக்கு எதிரான கட்சி யாதலின் கூட்டணியிற் சேர்ந்து கொள்வதே நன்று. அப்படிச் செய்தால் வருங்காலத்தில் ஒரு வலுவான கட்சியாக அது வளருவதற்கு இடமுண்டு. அத்துடன் சீனச் சார்புக் கட்சியின் தவறுன பிரசாரத்தை, ஓரளவு தடுத்து நிறுத்துவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். அது மேலும் எதிர் நீச்சு நீந்துவதற்கு முயற்சி செய்து தன்னை ஓர் ஏகாந்த நிலைக்குத் தள்ளிக் கொள்ளாதென்றே எதிர் பார்க்கப் படுகிறது.

இத்தேர்தலில் சீனச் சார்புக் கட்சிக்கு நாடெங்கினும் கிடைத்துள்ள வெற்றி நாட்டின் பாதுகாப்புக்கு நல்லதன்று — தமிழ் நாட்டுக்கும் நல்லதன்று. தி. மு. க. தலைமை இதில் சற்று கவனமாக இருத்தல் அவசியமாகும்.

## கொழும்பிலிருந்து...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)


தெரிவிக்கப்பட்டது. முதலாவது:-துருக்கி, ஈரான் எல்லையிலிருந்து வியட்நாம் தலைநகரான சைகோனுக்கு 6000 மைல் நீளமுள்ள பாதை போடுவது. இரண்டாவது: ஈராக்கிலிருந்து ஜாவாவின் கிழக்கு எல்லையைத் தொடும் படியாக, 7,700 மைல் நீளமுள்ளது.

சர்வதேசிய ரூேட் பெடரேஷன், ஆசியாவில் சாலைகள் அமைக்கும் திட்டங்களை துரிதப்படுத்துவதையும் மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை உயர்த்திக்கொள்ளக் கூடிய முறையில் வீதிப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதையும் தனது தொண்டாகக் கொண்டது.

ஆசியக் கண்டம் முழுவதையும் தொடர்புபடுத்தக் கூடிய ஒரு சாலை, யென்றுலும், 1970-ம் ஆண்டுபோக்குவரத்துக்குத் திறந்து விடப்பட வேண்டும்என்று 'ஈ. கபே'யின் போக்கு வரத்துத் தொடர்புகள் கமிட்டி தனது கூட்டத்தில் முடிவு செய்திருப்பதாக 'வேர்ல்ட் ஹை வேய்ஸ்' என்ற சஞ்சிகை சமீபத்தில் செய்தியொன்று வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வா ழ் க !



புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். சென்னை பெரிய ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையிலிருந்துகொண்டே பரங்கிமலைத் தொகுதியில் போட்டியிட்டு 27,000க்கு அதிகப்படியான வாக்குகளினால் மாபெரும் வெற்றியீட்டி, தாம் 'மக்கள் திலகமே'தான் என்பதை நிரூபித்துவிட்டார். வெற்றிவாகை சூடியுள்ள மக்கள் திலகத்தையும் வெற்றியைத் தேடிகொடுத்த பரங்கிமலை வாக்காளர்களையும் சுதந்திரன் கலைப்பூஞ்சோலை வாசகர்கள்சார்பில் வாழ்த்துகிறோம்.

# மக்கள் திலகம் எம். ஜி. ஆர். எழுதும்

# 'பழைய நினைவுகள்'

## (2)

ப்படியோ, நானே அந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்தேன். ஒரு சில காட்சிகளும் ' எடுக்கப்பட்டன.

அப்படியிருந்தும் எனது கதாநாயக நிலை 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பார்களே, அது போலத்தான் இருந்தது.

புதிதாக யாராவது ஒருவர், பாகவதர் அவர்களைப் போல முடிவைத்து ஸ்டுடியோவில் நடமாடுவார். அவ்வளவுதான். நான் இருக்கும் இடத்துக்கு சேதிவரும்.

'உங்களுக்குப் பதிலாக யாரோ ஒருவர் வந்திருக்கிறார். டெஸ்ட் எடுக்கப்போகிறார்கள். பாகவதரைப்போல இருக்கிறார்' என்பார்கள்.

அதைக் கேட்டதும் எனது ஐந்தரை அடி உயரஉருவம், மூன்றடியாகக் குறைந்துவிட்டதோ என்று கூறுமளவுக்கு குறுகிவிடுவேன்.

கடைசியாக அந்த நடிகர் வேறு யாருடைய சிபாரிசிலேயோ வந்து சிபார்சு செய்தவர்களை திருப்திப் படுத்துவதற்காக டெஸ்ட் எடுத்து அனுப்பப்பட்டார் என்று தெரியவரும்.

என்னிடமிருந்து ஒருபெருமூச்சு!

மனதிலிருந்து ஒரு பாரத்தை இறக்கிய நிம்மதி!

மற்றொருநாள் இன்னும் ஒரு சேதி அபாய ஒலியோடு வரும்.

'யாரோ ஒரு பாடகராம். பாகவதரைப்போலவே பாடுகிறாராம். குரலும் அப்படியேதானும். நாடக மேடையில் நல்ல அனுபவம் பெற்றவராம். அவரைப் பாடவைத்துப் பாட்டை ஒலிப்பதிவு செய்கிறார்கள். அந்தப் பாடல் நீங்கள் நடிக்கிற கதாநாயகன் பாத்திரம் பாடவேண்டிய பாடல்.'

மீண்டும் அதே நிலைமை!
அதே குழப்பம்!
அதே கலக்கம்!
அதே குளறுபடி!
நாலுபேரைக் காண்பதற்கு வெட்கம்!

ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல் எம். எம். மாரியப்பா அவர்களால் பாடப்பட்டது என்றும், நான் படத்தில் வாயசைத்து நடிப்பதற்காகவே, அவரைத் தருவித்து எனக்குரிய அந்தப் பாடலை அவரைக்கொண்டு பாடவைத்து ஒலிப்பதிவு செய்தார்கள் என்றும் உண்மை தெரியவந்தது.

இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் என் நண்பர்கள் எனக்கு எச்சரிக்கை செய்தார்கள்.

'உன்னால் ஒன்றும் முடியாது என்றோ உன்னால் ஒன்றைச் செய்யமுடியவில்லையென்றோ ஒரு நிலைமை ஏற்படுகிற வரையில் நீ எதுவும் செய்துவிடக் கூடாது. எச்சரிக்கையாகநடந்துகொள்' என்று அறிவுரைகள் கூறினார்கள்.

மேலேயிருந்து குதிக்கவேண்டுமா? அவர்கள் சொல்வதற்குள் குதித்துவிட்டிருப்பேன்.

கத்திச்சண்டையா? கையிலே, காலிலே, முகத்திலே காயங்களா? கவலையில்லை. ஒரு சண்டைக் காட்சியே நடந்திருக்கும்.

வழுக்கும் பாறைகளிலே தாண்டி ஓடவேண்டுமா? முடித்து விட்டிருப்பேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருநாள் ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

என்னையும் என்னுடைய நண்பர்களாக நடித்த, நம்பியார், எம். எஸ். எஸ். பாக்கியம், இருவரையும் ஒரு தனியறையிலே சிறையிட்டிருக்கின்ற காட்சியது!

அவர்கள் இருவரும் உறங்கிக் கொண்டிருக்கும்நேரம். கதாநாயகனுக்கு வாழ்க்கையிலே வெறுப்பு ஏற்படுகிறது. தற்கொலை செய்து கொள்ள முடிவெடுக்கிறான்.

அந்த அறையில் ஒரு தூக்கு மேடை அவனுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ளக் காத்திருக்கிறது.

ஆனால் கதாநாயகன் தூக்கிட்டுக் கொள்ளும் பொழுது தூக்குக் கயிற்றைக் கட்டியுள்ள உத்திரம் கதாநாயகனின் பாரத்தைத் தாங்கமுடியாமல் உடைந்து அவனைக் கீழே வீழ்த்திவிடுகிறது. கீழே உள்ள அறைக்குள்விழும் கதாநாயகனுக்கு அங்கிருந்துதப்ப வழிகிடைக்கிறது. மூவரும் தப்பிவிடுகிறார்கள். இதுதான் கதை.

—தொடரும்.

# பாலமுரளீ கிருஷ்ணவின் இன்னிசை விருந்து

24-2-67 வெள்ளிக்கிழமை மாலை, 5-30 மணியளவில் வெள்ள[illegible]த்தை சரசுவதி மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்பியிருந்தது. வான மழை பொழிந்தும், கான மழையில் நீந்த இரசிகர்கள் ஆசை வெள்ளத்தில் அலைமோதிஅமைதியிழந்துவிடுவார்களோ என அஞ்சும்போது, 6-45 அளவில் மக்களது பலமான கரகோஷ வரவேற்பிற் கிடையில், தென் இந்திய சங்கீத மேதை ஸ்ரீ பால முரளி கிருஷ்ணா அவர்களின் அந்தரங்கக் காரியதரிசி செல்வி குமாரி அபயம் தொடர மண்டபத்தை வந்தடைந்தார்.

7 மணியளவில் இசை விருந்து ஆரம்பமாகியது. தியாகராஜ சுவாமிகளை குலகுரு மூர்த்தியாகக் கொண்ட ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடத் தொடங்கியதும் சபையோர் தம்மை மறந்து இசையின் மந்திரத்தால் கட்டுண்டதுபோல் மயங்கி இருந்தனர். இசை நிகழ்ச்சி தொடங்குமுன்பே, இரசிகப் பெருமக்களுக்கு விருப்பமான பாடல்கள் எதுவோ, அதையெல்லாம் துண்டுகளில் எழுதி அனுப்பினால், அவை பாடப்படும் என்ற அறிவித்தலின் உதவியால், துண்டுகளில் விருப்பத்தைத் தெரிவித்த மக்கள் இசை நிகழ்ச்சியை ஆவலுடன் கேட்டு மகிழ்ந்தனர்.

9 மணியளவில் 15 நிமிட இடைவேளையைத் தொடர்ந்து, கச்சேரியின் முக்கிய அம்சமான இராகம், தானம், பல்லவி இடம் பெற்றது. காலம் கடக்குமோ என்ற சந்தேகத்தில் நேர[illegible]தைக் குறைத்து, பாடகரே பல்லவியைச் சுருக்கிக்கொண்டார்.

ஒவ்வொரு பாடலின் முடிவிலும் சந்தோஷமாகக் கரகோஷம் செய்து மகிழ்ந்து கொண்டிருந்த மக்களது உள்ளம், மெல்லிசைப் பாடல்களைக் கேட்கத் தொடங்கியதும் ஆர்வத்தின் உச்ச நிலையை அடைந்தது. இரசிகர்களது விருப்பத்தைப் பூரணமகா நிறைவேற்றி வைத்து, கேட்ட பாடல்கள் அத்தனையையும் பாடி, மேலும் தொடரும் என ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, மங்களம் பாடி, 10-30 மணியளவில், இசை நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

இரசிகர்களது பூரண திருப்தியைப் பெற்று, எல்லோரது விருப்பத்தையும் நிறைவு செய்து, மக்களைத் தொடங்கிய நேரம் முதல் முடிவுவரை அமைதியுடன் இரசிக்கச் செய்த ஒரே இசை நிகழ்ச்சி ஸ்ரீ பால முரளீ கிருஷ்ணாவுடையதுதான் என்று இரசிகர்கள் மத்தியிற் பேசிக்கொண்டனர்.



உலகெலாம் படைத்துக் காத்து இரட்சிக்கும் முருகனின் சக்தியாக—தெய்வயானையாக தோன்றும விஜயாவை விரைவில் என்டர்டெயின் மெண்ட்ஸ் திரைகளில் காட்சி தரவிருக்கும் ஏ. எல். எஸ். புரடக்ஷன்ஸ் வண்ணப்படமான 'கந்தன் கருணையில்' கண்டு மகிழலாம்.

திரை விமர்சனம்:

# 'தாயின் மடியில்'

ஒரு பெண்ணின் கற்பைச் சூறையாடும் ஒரு கயவன்—அக் கயவனின் அண்ணனே தன்னைக் கெடுத்ததாக நினைக்கும் பெண்—தாய்க்கு நேர்ந்த அவமானத்தை அறிந்து துடிக்கும் மகன்—இவர்களை வைத்துப் பின்னப்பட்ட கதைதான் இப்பொழுது சினிமாஸ் திரைகளில் காட்சிதரும் அன்னை பிலிம்சாரின் 'தாயின் மடியில்.'

புரட்சி நடிகர்தான் கதாநாயகன். அவருக்கு இதில் புதிய வேஷம். ஜொக்கியாக வருகிறார். சரோஜாதேவி அவரதுஜோடி தன்னைப்பெற்ற யார் என்று தாயை அறியாது அவர் துடிக்கும்போது துயர நடிப்பிலும் தான் சளைத்தவரல்ல என்பதைக் காட்டி விடுகிறார் மக்கள் திலகம்.

இதில் தள்ளுவண்டியில் இருந்துகொண்டே புதிய முறையில் சண்டை வேறு போடுகிறார்.

சரோஜாதேவியிடம் வழமையான கொஞ்சல் மொழிகளும் குறும்புத்தனங்களும் காணப்படுகின்றன.

எம். ஆர். ராதாதான் வில்லன். அவருக்குத் துணையாக நம்பியார். கதாநாயகன் எம். ஜி. ஆரைக் கொலைசெய்ய பலமுறை திட்டங்கள் போடுகிறார்ராதா. ஆனால் ஏமாற்றம்தான். எம். ஜி. ஆரைக் கொலை செய்ய எம். ஆர். ராதா திட்டம்போடும் கட்டம் வரும் போதெல்லாம் நம் மனம் எங்கெல்லாமோசென்று எதையெல்லாமோ எண்ணுகிறது.

சிரிப்புக்கு, நாகேஷ் மனோரமா இருக்கிறார்கள். மனோரமாவுக்கு நாகேஷ் குதிரையோட்டம் கற்றுக்கொடுத்து நம்மை குபீர் சிரிப்பில் ஆழ்த்துகிறார்.

எம். ஜி. ஆர். ரசிகர்களுக்கு இப்படம் ஒரு சிறந்த விருந்து.

—மகேஸ்.



# "தமிழ் மேல் ஆணை"

ஈழத்தின் முன்னணி ஆடல் ஆசிரியர்களில் ஒருவரும் சிறந்த நாடக நடிகருமான கலைஞர் வேல் ஆனந்தன் 'மதுரை கே. சி. ரங்கநாதன் எம். ஏ. எழுதிய 'ஜீவ பூமி' என்ற நாவலை, ஏராளமான செலவில் நாடகமாகத் தயாரிக்கிறார்.

இந்த நாடகத்தை திரு ஏ. எஸ். மணி டைரக்ட் செய்ய திரு. த. நடராஜன் இசை அமைக்கிறார்.

இந்த நாடகம், எதிர் வரும் 24-3-67 ம் நாள் மக்கள்மன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தி[illegible] அவர்கள் முன்னிலையில் [illegible] சண்முகா படமா[illegible] மேடையேற்றப்பட விருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவாணன் பதில்கள்

கே. கோணமலை,
சாவகச்சேரி.

கே: நமது நடிப்புலக ஜனதிபதி கலைக்குரிசில் கணேசனுடன் ஜெயலலிதா ஜோடி சேர்ந்து நடிக்காததற்கு காரணம் என்ன?



ப: தயாரிப்பாளர் எவரும் ஜோடி சேர்க்காததால்.

கே: நடித்தால் எப்படியிருக்கும்?

ப: தந்தையும் மகளும் போல இருக்கும்!

ஃ

செல்ற்றன் குருஸ்,
கொழும்பு-13.

கே: இலங்கைத் தமிழ் பத்திரிகைகளில் வரும் திரைப்பட விமர்சனங்கள் எல்லாம், 'படம் நன்றாயிருக்கிறது. யாவரும் பார்க்கலாம்' என்றுதான் கூறுகின்றனவே தவிர, குற்றங் குறைகளைச் செப்புவதில்லையே! இது ஏன்?

ப: ஏன் இந்தியப்பத்திரிகைகள்மட்டும் என்னவாம்? இரண்டொரு பத்திரிகைகளை தவிர மற்றவை எல்லாம் அப்படித்தானே எழுதுகின்றன. நீங்கள் கவனிக்கவில்லையா?

ஃ

[illegible]னபாலசிங்கம்,
[illegible]ட்டான்.

கே: சந்திரலேகாவில் எம். ஜி. ராமச்சந்திரன் நடித்துள்ளாரா?

ப: இல்லை.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: சிவாஜிகணேசனால்ஏற்று நடிக்க முடியாத பாத்திரம்ஏதாவது உண்டா?

ப: உண்டு. குழந்தைபாத்திரம்!

ஃ

ஐ. துரைஐயா,
திருகோணமலை.

கே: கலைத்தாயின் தலைமகன் எம். ஜி. ஆர். சுகப்பட்டு எத்தனை நாட்களுக்குப் பின் படங்களில் நடிப்பார்?

ப: நல்ல வேளை, வினுடிக் கணக்கில் கேட்காமல் விட்டீரே!

ஃ

பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு.

கே: ''மக்கள்திலகம்'' என்ற பட்டத்தை எம். ஜி. ஆருக்கு வழங்கியது 'கல்கண்டு' ஆசிரியரா? அல்லது 'கலை' சினிமா இதழின் ஆசிரியரா?

ப: கல்கண்டு ஆசிரியரால் எம். ஜி. ஆருக்கு வழங்கப்பட்டதுதான் 'மக்கள் திலகம்' என்ற பட்டம். யார் வழங்கினாலென்ன, புரட்சி நடிகருக்கு பொருத்தமான பட்டமல்லவா!

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னார்.

கே: தேவிகாவின் திருமணம் எப்பொழுது?

ப: 'வெகு தூரத்திலில்லை' என்று சமீபத்தில் கலைப்பூஞ்சோலைக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தாரே, நீர் பார்க்கவில்லையா?

கே: கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியின் இடத்தைப் பிடிக்கக்கூடிய நடிகை யார்?

ப: ஏற்கனவே ஜெயலலிதா பிடித்துக்கொண்டு விட்டாரே!

ஃ

ஏ. டீ. எம். நுஃமான்
எஹலியகொட.

கே: மக்கள்திலகம் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அதிகம்புகழ் வாங்கிக் கொடுத்த 3 படங்கள் எவை?

ப: நாடோடி மன்னன், எங்கவீட்டுப்பிள்ளை, பெற்றால்தான்பிள்ளையா?

ஃ

எஸ். விநாயகமூர்த்தி,
சந்திவெளி.

கே: சிவாஜி கணேசனுக்குப் பிள்ளைகள் உண்டா?



ப: அள்ள அள்ளக் குறையாத நடிப்புச் செல்வத்தைப் பெற்ற நடிகர் திலகத்திடம் மக்கட் செல்வத்துக்கும் குறையில்லை நண்பரே!

ஃ

எஸ். நாகராஜா,
நாவற்குழி.

கே: யான் மக்கள் திலகம் எம். ஜி. ஆரைப் பார்க்கவிரும்புகிறேன். தற்போதைய சூழ்நிலையில் நிச்சயமாகச் சென்று பார்க்கலாமா?

ப: கடிதமூலம் அறிவித்துவிட்டுச்சென்றால் நிச்சயமாகப் பார்க்கமுடியும். தம்மைப் பார்க்கவரும் இலங்கை ரசிகரை மக்கள் திலகம் ஒருபோதும் ஏமாற்றமாட்டார்.

ஞா. சந்திரசேகரம்,
ஏறாவூர்.

கே: ஏ. பி. நாகராஜன் படத்தில் எம். ஜி. ஆர். நடிப்பாரா?

ப: ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டால் நடிப்பார்'

ஃ

மதிவதனி,
மட்டுநகர்

கே: இலட்சிய நடிகை விஜயகுமாரி எத்தனை படங்களில் நடித்து வருகிறார்?



ப: கவர்ச்சி என்ற போர்வையில் ஆடைக் குறைப்பு செய்து அங்கம் முழுவதையும் காட்ட புது முகங்களும், அதை ரசிக்க ரசிகர்களும் தயாராக இருக்கும் நேரத்தில் பண்புக்கேடாக நடிக்கமாட்டேன் என்று கூறும் விஜியை எந்தத் தயாரிப்பாளர் கவனிக்கிறார்? எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் படம் தவிர, பவானி, ஏ. எல். எஸ்ஸின் 'பெண் என்றால் பெண்' ஆகிய இரு படங்களில் நடித்து வருகிறார் விஜி.

ஃ

பாலா அன்பரசி
வேலணை-4

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆரும் நடிகர் எம். [illegible]ர். ஆரும் மீண்டும் சினிமாவில் இணைவார்களா?

ப: ஏன், அவர்கள் இருவரும் இனிமேலும் இணைந்து நடிக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறீர்களா?

ஃ


என். யோகராஜா
விரமு[illegible]

கே: தற்பொழுது நடிகைகள் கே. ஆர். விஜயா ஜெயலலிதா இருவரும் எத்தனையெத்தனை படங்களில் நடித்து வருகின்றனர்?

ப: விஜயா 30 படங்களிலும், ஜெயலலிதா சுமார் 25 படங்களிலும் நடித்து வருகின்றனர்.

> திரைவாணன்,
> சுதந்திரன் கலைப்பூஞ்சோலை
> த. பெ. இல. 1183.
> கொழும்பு.

## வாழ்க!



தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவராக விளங்கும் கன்னடத்து பைங்கிளி சரோஜாதேவி பெங்களூரைச் சேர்ந்த என்ஜினியரான ஸ்ரீ அர்சன்என்பவரை இம்மாதம் 1-ந் தேதி திருமணம் செய்துகொண்டார். இல்லறம் தொடங்கப் போகும் சரோஜாதேவியை சுதந்திரன் கலைப்பூஞ்சோலை வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.



'கந்தன் கருணையில்' வீரபாகு தேவராகத் தோன்றும் நடிகர் திலகம் பத்மஸ்ரீ கணேசனை, இங்கே பார்க்கிறீர்கள். [illegible] ஏ. பி. நாகராஜனின் பக்திரசம் சொட்டும் தெள்ளு [illegible] ங்களை தனக்கே உரிய பாணியில் பேசி மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகிறார் இப் படத்தில்.

# தேவிகாவின் ஆசைகள் என்ன?

## அவரே சொல்கிறார்

'ஹலோ, நான் தேவிகா பேசறேன், — இப்படித்தான் நான் என் நண்பர்களிடம் போன் பேச்சைத் தொடங்குவேன். ஷூட்டிங் இருக்கும் நாட்களாக இருநதால், பேச்சு ஓரிரண்டு நிமிடங்களுக்கு மேல் நீடிக்காது. ஷூட்டங் இல்லாத நாட்களாக இருநதால் போதும்! பேச்சு நிமிடக்கணக்கில் நின்றுவிடாது, மணிக்கணக்கில் தொடரும்!

ஒரு சமயம் ஸ்டூடியோ ஒன்றிலருந்து ஒரு தயாரிப்பாளர் என்னிடம் அவசரமாக போனில் பேச விரும்பி 'டயல்' செய்தார்' எவ்வளவு நேரம் 'போன்' செய்தும் அவரால் பேச முடியவில்லை. 'போன்' என்கேஜ்ஆக இருந்தது. உடனே அவர் காரை எடுத்துக் கொண்டு கோடம்பாக்கத்திலிருந்து அண்ணாமலை புரததில்ருக்கும் என வீட்டுக்கு வந்து விட்டார். அப்பொழுதும் தொடர்ந்து நான் 'போனில்' பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு அவர் மூர்ச்சை போட்டு விழுந்துவிடாமல் இருந்தது ஆச்சரியம் தான்;

'போனில்' நண்பர்களிடம் [illegible] பிடித்தமான பொழுது போக்கோ, அதே போல வீட்டை அலங்கரிப்பதும்



எனக்குப் பிடித்தமானது. ஓய்வு நாட்களில் வீட்டை சுத்தம் செய்யும் வேலையை நேரடியாக கவனிப்பேன். புதிய மோஸ்தரில் ஜோடனை செய்வதிலும் எனக்கு அதிக ஆவலுண்டு. நான் பூந்தொட்டிகளை வைத்திருக்கும் இடங்களிலிருந்து, ஒரு அங்குலம் நகர்த்தப்பட்டாலும் கடுங் கோபம் வந்துவிடும் எனக்கு.

துப்பறியும் நாவல்களைப் படிப்பது மட்டும் எனக்குப் பிடித்தமான பொழுது போக்கல்ல. பத்திரிகைகளில் வரும் தொடர் நாவல்களை ஒன்றாக சேர்த்து கத்தரித்து ஒன்றாக 'பைண்ட்' செய்து கதை படிப்பதில் அதை விடப் பிரியம் அதிகம்.

பத்திரிகைகளில் வரும் விகடத்துணுக்குகள் என்றால் எனக்கு 'அல்வா' போன்றவைகள். சில சமயம் அவைகளைப் படித்துவிட்டு வாய்விட்டு உரக்கச் சிரிப்பேன். என் சிரிப்பைக் கேட்டுவிட்டு ஏதோஎன்னமோ என்று என் சகோதரிகள் என் அறைக்கு ஓடிவருவார்கள். அவர்களுக்கும் அவ்விகடத்துணுக்கைப் படித்துக்காட்டி அவர்களையும் சிரிக்க வைப்பேன்.

எனக்கு மிகவும் பிடித்தமான வர்ணம் கடல் நீலம். நான் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும் இந்தக் கலரில் புடவையாவது ஜாக்கெட் ஆவது அணிவேன்.

எனக்கு சோதிடம் பார்ப்பதில் அதிக நம்பிக்கை இல்லாவிட்டாலும் பெரிய காரியங்களைச் செய்யும் போது நேரம், காலம், பார்ப்பதுண்டு-சனிக்கிழமைதோறும் விரதமிருப்பதுமுண்டு.

எனக்கு பொதுவாக கூட்டம் என்றாலே பயம் அதிகம். அதனால் தான் கூட்டங்களிலோ விழாக்களிலோ நான் அதிகம் கலந்து கொள்வது கிடையாது.

வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்கு செல்வதை நான் அதிகம் விரும்புகிறேன். காரணம் பல புது இடங்களைக் காணும் வாய்ப்புக்கள் அப்பொழுது கிடைக்கிறது. ஆனல் அங்கேயும் படபபிடிபபு நடைபெறும் பெழுது கூட்டம்கூடினல் பயம் வந்துவிடும்.

கவலைகளை மறந்து எப்பொழுதும் வாய்விட்டுச் சிரித்து வாழவேண்டும். இது தான் என்னுடைய குறிக்கோள்.

ஒருவருக்கும் தீங்கு நினைக்கக் கூடாது. பிறருக்கு நம்மால் முடிந்த நன்மைகளைச் செய்யவேண்டும். இவைகளும் என்னுடைய குறிக்கோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ ஜீ. கோஷ்டியினர் தடுமாற்றம் தேசிய அரசில் இருப்பதையும் மறந்துவிட்டார்கள்

பிரச்சினைகளை இரண்டுவிதமாக அணுகலாம். ஒன்று பிரச்சினைக்குள்ளிருந்து பிரச்சினையை நோக்குவது. மற்றது, பிரச்சினைக்கு வெளியிலிருந்து பிரச்சினையை அணுகுவது. தமிழ்பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இன்று தமிழ்ப் பிரதிநிதிகள் எங்ஙனம் நோக்கவேண்டும்?

முன்னைய நாட்களைப் போலன்றி கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் தமிழ்ப் பிரதிநிதிகளின் அரசியல் நிலையில் ஒரு புரட்சிகரமான திருப்பம் ஏற் புரட்சிகரமான திருப்பம் ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. ஈழத் தமிழர் வரலாற்றில் ஒரு புதுமையாக சகல தமிழ் எம். பி. களும் ஒரு அரசாங்கத்தில் அங்கத்துவம்வகிக்கிறார்கள். முன்னைய காலங்களில் இந்நிலை இருக்கவில்லை. ஆகவே தமிழர்சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அனைத்தையும் தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் உள்ளிருந்தே அணுக வேண்டும்.

### புதுமையான போக்கு

துரதிர்ஷ்டவசமாக இந்நிலை இன்று நடைமுறையில் இல்லை. தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ் மக்கள் பிரச்சினைகளை உள்ளிருந்து அணுகும் பொழுது, தமிழரசுக்கட்சியைச் சாராத பிரதிநிதிகள் இப் பிரச்சினைகளை வெளியிலிருந்து நோக்குகிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவர் கோஷ்டியினரும் தேசிய அரசாங்கம் தோன்றிய சில நாட்களிலிருந்து தமிழ்மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ம[illegible]ல்ல தேசிய அரசாங்க[illegible] சம்பந்தப்பட்டவற்றையும்கூட வெளியிலிருந்தே அணுகிவருகிறார்கள்.

பிரச்சினைகளை வெளியிலிருந்து அணுகும் திரு. ஜீ. ஜீ. கோஷ்டியினரின் இந்த மனப்பான்மை பாராளுமன்றத்திற்கு வெளியில்மட்டுமே நிலவுகிறது. பாராளுமன்றத்திற்குள் இந் நிலையில்லை. ஜீ. ஜீ. கோஷ்டியினரின் இந்த விசித்திரமான நிலைக்குக் காரணம் என்ன?

தமிழ்மொழிச் சட்டம்பற்றியும், அதன் அமுல் பற்றியும் பேசும்பொழுது அவற்றில் தமக்குச் சிறிதும் சம்பந்தமில்லாதது போன்ற மன நிலையில் இவர்கள் பேசுவது மிகவும் வேடிக்கையாக அமைந்திருக்கிறது. தமது பேச்சு திருப்பித் தம்மையே தாக்குகிறது என்பதை ஏனோ புரிந்து கொள்ளாது ஒதுங்கியமனப்பான்மையில் இவற்றை விமர்சிக்கிறார்கள்.

### இலங்கை இந்திய மசோதா

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கை—இந்திய உடன்படிக்கை அமுல் சட்டம் பற்றியும் ஜீ. ஜீ. கோஷ்டியினர் இவ்வாறே கருத்து வெளியிட்டுவருகிறார்கள். இம் மசோதாமீது திரு. ஜீ. ஜீ. பேசியதையும், அதனை ஆதரித்து ஜீ. ஜீ. யும் அவரது சிட்டப்பிள்ளைகள் இருவரும் வாக்களித்ததையும் யாரும் மறந்துவிடவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சியினர் ஐந்தேகால் லட்சம்பேரை நாடுகடத்த அவரது சிட்டப்பிள்ளை இருவரும் வாக்களித்ததையும் மறந்து 'தமிழரசுக்கட்சியினர் ஐந்தேகால் லட்சம் வரைநாடுகடத்த துணைபோய் விட்டார்கள்' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டிருக் கிறார் திரு. ஜீ. ஜீ.

ஐந்தேகால் லட்சம்பேரை நாடுகடத்த தமிழரசார் துணைபோயிருக்கிறார்கள் என்றால் அவர்களும் (ஜீ. ஜீ. கோஷ்டியினரும்) துணைபோயிருக்கிறார்கள்என்றுதானே பொருள்.

### ஏன் வாக்களித்தார்?

இலங்கையில் நடப்பது சர்வாதிகார ஆட்சியா? அப்படியென்றால் சர்வாதிகார முறையில் ஜீ. ஜீ. யையும் தமிழ்ரசார் பணிய வைத்து வாக்களிக்கச் செய்துவிட்டார்கள் என்று கூறலாம். நடப்பது நல்லஜனநாயக ஆட்சி. எனவே விருப்பம்போல் எதையும் செய்யலாம். அப்படியெனில், ஜீ. ஜீ. மொழியில் ஐந்தேகால்லட்சம் பேரை நாடுகடத்தும் அனியாயச் சட்டத்துக்கு ஏன் ஜீ. ஜீ கோஷ்டியினர் வாக்களித்தார்கள்? இதற்கு திரு. ஜீ. ஜீ. யும் அவர் கோஷ்டியினரும் விளக்கம் கொடுப்பார்களா?

### பரிகாரம் காணும் முயற்சி

இப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தி திரு. ஜீ. ஜீ. தனது பழைய துரோகத்திற்கு பரிகாரம் தேடப்பார்க்கிறார். இந்தியர்—பாகிஸ்தானியர் பிரசாவுரிமைச் சட்டம் இலங்கை—இந்திய உடன்படிக்கை அமுல் சட்டத்திலும் பார்க்க சிறந்தது என்றும் இப்பொழுது ஜீ. ஜீ. வாதிடத் தொடங்கி இருக்கிறார்.

இந்தியர்—பாகிஸ்தானியர் பிரசா உரிமைச் சட்டம் ஐந்துவுலட்சம் பேருக்கு பிரசாவுரிமை பெற்றுக் கொடுக்க இசதி உடையது என்றும், இலங்கை—இந்திய உடன்படிக்கை அமுல் சட்டம் ஐந்தேகால் லட்சம்பேரைநாடுகடத்த வசதி உடையது என்பதும் ஜீ ஜீ.யின் தற்போதைய வாதமாகத் தெரிகிறது. இது உண்மையெனில் இந்திய—பாகிஸ்தானியர் பிரசாவுரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு இருபது ஆண்டுகளாகிறது. இருபது ஆண்டுகளில் எத்தனை பேருக்கு பிரசாவுரிமைகிடைத்தது?

### வாக்குரிமையை பறித்தார் ஜீ. ஜீ.

பிரசாவுரிமை உடையவர்களையும் நாடற்றவர்களாக்கியது இந்தியர்—பாகிஸ்தானியர் பிரசாவுரிமைச் சட்டம். இதனை மக்கள் மறந்துவிடவில்லை. மேலும் பிரசாவுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து வந்த வாக்குரிமைச் சட்டம் தமிழர்களில் சரி அரைபங்கு விகிதத்தினரை முடமாக்கியது. மலைநாட்டிலிருந்து 1947ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட எட்டு பிரதிநிதிகள் 1952ல் தெரிவுசெய்யப்படவில்லை. இன்றைய தொகுதி நிர்ணய அடிப்படையில் மலைநாடு 15 தமிழ்ப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருக்க முடியும். இதற்கு துணை நின்றதை ஜீ. ஜீ. மறந்துவிட்டாரா? ஒரு சமயம் பேரனாகி விட்ட ஜீ. ஜீ. வயது முதிர்ச்சியினால் மறந்திருக்கலாம்.

இந்தியர் — பாகிஸ்தானியர் பிரசாவுரிமைச் சட்டம் மலைநாட்டு மக்களின் குடியுரிமையையும், வாக்குரிமைச்சட்டம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவப் பலத்தையும் குறைத்தது. இப்போதைய இந்திய—இலங்கை உடன்படிக்கை மசோதா இழந்த இவ்வுரிமைகளைப்பெற வழிசமைக்கிறது. இதனை ஜீ. ஜீ. உணர்ந்து கொள்ளவேண்டும்.

இதே போன்று ஒவ்வொரு பிரச்சினையிலும் ஜீ. ஜீ. யும் அவர் கோஷ்டியினரும் வெளியிலிருந்து விமர்சிக்கிறார்கள். பாராளுமன்றத்துக்கு[illegible]னறதும் யு. என். பி. த[illegible]ளாகிவிடுகிறார்கள். இந்த[illegible]க்கு நாடகத்தை உடன் நிறுத்த வேண்டும். அல்லது ஜீ. ஜீ. கோஷ்டியினர் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டும். இதில் எதைச் செய்யப் போகிறார் திரு. ஜீ. ஜீ.

— பூ

## தி. மு. க. வின்...

1. காங்கிரஸ் நிலப்பிரபுக்களினதும், தொழில் அதிபர்களினதும் பெரும் பணமூட்டைகளினதும், மேல்தட்டிலுள்ள நடுத்தர வகுப்பு மக்களினதும் உரிமைகளைம், சுரண்டலையும் பாதுகாக்கும் ஸ்தாபனமாக மாறியதால், தொழிலாளர்கள், விவசாயிகள், கீழ்த்தட்டிலுள்ள நடுத்தர வகுப்பு மக்கள் ஆகியோரின் உரிமைகளைக் காக்கும் ஸ்தாபனமாக மாற வேண்டிய ஒருநிர்ப்பந்த நிலை தி. மு. க. வுக்கு ஏற்பட்டது. சுருங்கக் கூறின், பணமூட்டைகளின் பால் அனுதாபம் காட்டிய காங்கிரஸ். தி. மு. க. வைப் பிடித்து ஏழை மக்களின் பால் தள்ளிவிட்டது. இதனால் அது இடது பக்கம் உந்தப்பட்டு விட்டது.

2. தி. மு. க. வின் உறுப்பினர்களிலும், ஆதரவாளர்களிலும் பெரும்பாலோர் இளைஞர்களாவார். துடிதுடிப்பும், தீவிரத் தன்மையும் மிகுந்த இவர்கள் கலை, கலாச்சாரம், மொழி ஆகியவற்றில் அமித பற்றும் சோஷலிஸத்தில் ஆர்வமும் கொண்டவர்களாவர். இது இடதுசாரி மனப்பான்மை கழகத்துள் வளர்ந்து வருவதற்கு ஏதுவாயிற்று.

3. கட்சித் தலைமையே சோஷலிஸத்துக்குசாதகமான கொள்கையையே ஆரம்பம் முதல் கொண்டிருக்கிறது. பிராமணீய எதிர்ப்பு போன்ற கொள்கைகளைக் கைவிடும்போது சோஷலிஸக் கருத்துக்கள் தலைமையில் வலுவடையத் தொடங்கின.—வலுவடைகின்றன.

### இடதுசாரிக் கட்சியா?

தி. மு. க. வை ஓர் இடதுசாரிக் கட்சி என்று கூறலாமெனினும், அதனை முழுக்க முழுக்க ஒரு சோஷலிஸ்ட் கட்சி என்று கூறுவது சரியாகாது. ஏனெனில் சோஷலிஸத்தை எதிர்க்கும்—இடதுசாரிக் கொள்கைகளை வெறுக்கும் மக்களும் தி. மு. க. வை ஆதரிக்கின்றனர்—இத் தேர்தலில் ஆதரித்தனர்.

ஆதலின் தி. மு. க. வை 'ஒரு நடுவாந்தரக் கட்சி' யென்று கூறுவது தவறாகாது. நடுவாந்தரக் கட்சி யொன்று தான் இடது, வலது, நடுவாந்தரம் ஆகிய மூன்று பகுதி மக்களின் ஆதரவையும் பெற முடியும்.

இதில் மற்றொரு சிக்கலும் இருக்கிறது நடுவாந்தரக் கட்சிகளில் சில. இடது பக்கம் சாயும். — சில வலது பக்கம் சாயும்—எப்பக்கமும்சாயாமல் இருக்க ஒரு நடுவாந்தரக் கட்சியால் முடியாது. தி. மு. க. வை இடது பக்கம் சாய்ந்து கொண்டிருக்கும் ஏராளமான சோஷலிஸக் கருத்துக்களை தன்னகத்தே கொண்ட நடுவாந்தரக் கட்சி என்று கூறுவதே சரியாகும்.

### வேரூன்றி விட்...

தங்களின் சோஷலிஸக் கருத்துக்களுக்கு ராஜாஜியைத் திருப்ப முடியுமென்று அண்ணா கூறியுள்ளார். இதிலிருந்து எந்த அளவுக்கு சோஷலிஸக் கொள்கை தி. மு. க. வில் வேரூன்றியுள்ளதென்பது தெளிவாகிறது.

தமிழகத்திலே தி. மு. க. சோஷலிஸப் பாதையிலே மிக வேகமாக வளர்ந்து வரும் ஓர் இயக்கம். அதன் வளர்ச்சி வேகத்தை தடுத்து, நிறுத்தவோ, அதனை வலது பக்கம் [illegible] திண்ணம்.

## மலையக...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், உடையணியவும், உறங்கவும் பிரஜாவுரிமை வேண்டியதல்ல, ஆனால் விவசாயப் படையில் சேர்ந்து உணவு உற்பத்திக்காக உழைக்க மாத்திரம் பிரஜாவுரிமைவேண்டுமா?

'மலையக இளைஞர் கடின உழைப்பாளிகள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவர்களைப் பயன் படுத்திக் கொள்வது அரசாங்கத்தின் கடமையாகும். அதனால் விரைவில் உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற முடியும். இந்த முயற்சியில்' பிரஜாவுரிமைப் பிரச்சினையோ வேறு எந்தப் பிரச்சினையோ குறுக்கிடக் கூடாது. இதற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டியது மலையகத் தொழிற் சங்கங்களின் கடமையாகும்.'

## எங்கே....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தைச் செய்துவிட்டு வந்ததாகவே ஓர் உணர்வு. முத்து முத்தாக எழுதிய இனிய கடிதங்கள் ஒன்றைவிட்டுஒருநாள் பறந்து வந்தாலும், எந்தக் கிளுகிளுப்பையும் உண்டாக்கவில்லை. பொதுவாக நான் உண்டு, என் வேலை உண்டு என்றுமாறுதல் எதுவும்இன்றி இருந்து கொண்டேன். என் தங்கை என் மனைவியின் வழக்குரைக்கு புறக்டராக மாறிப் பல கடிதங்கள் எழுதினாள். திரும்பிச் சென்ற பதில் ஏதும் இல்லை.

ஒருநாள் என் மனைவிக்குச் சுகமில்லையென்று தந்தியொன்று வந்தது. கடமைக்காகவே அங்கு சென்றேன். அன்று அடுத்தாற்போல் இரு விடுமுறை நாட்கள். எனது கடையில் எதுவித அறிவித்தலும் கொடுக்கமுடியவில்லை. வீட்டுக்குச் சென்றதும் உண்மைபுரிந்தது. எனதுபதில் ஏதும் இல்லாமை காரணமாய்த் தந்தி வந்ததாம். அதனால் எனக்குச் சற்றுக் கோபம் வரத்தான் செய்தது. பேதையாய்ப் பொம்மையாய் ஏக்கத்துடன் நின்ற மனையாளின் தோற்றத்தின் முன் வைராக்கிய சந்நியாசமெல்லாம் நிலைகுலைந்துவிட்டது. சென்ற மறுநாளே திரும்புமெண்ணத்துடன் சென்றவன் ஒருவாரம் கூடுதலாகவே நின்றுவிட்டேன்.

ஒருநாள் எனது மனையாளின் தாய் தன் மருமகனுகிய என் உத்தியோகம், சம்பளம் ஆகியவற்றைப்பற்றி அடுத்த வீட்டுக் கிழவிக்குச் சற்றுத் தாராளமாகவே அளந்து கொட்டிக்கொண்டிருந்தது மறைமுகமாகவே என்னைக் கேலிசெய்வதாகவே பட்டது. அப்போதெல்லாம் எனக்கு நினைவுக்கு வந்தது கி. மு சங்க வாசிகசாலையின் தோற்றம் தான்.

மறுநாள் மனையாள் விடை கொடுக்கப் பிரிய மனமின்றிப் புறப்பட்டேன். கடைக்குள் சென்று எனது உத்தியோக பூர்வமான அறையுள் புகுந்தேன். அங்கே எனது மேசையில் புதிய ஒருவர் மும்முரமாக வேலைசெய்து கொண்டிருந்தார். புரிவதற்குச் சற்று நேரம் சென்றது. 'கணக்கைப் பார்த்து அனுப்பிவிடவும்' என்ற முதலாளியின் குரல் என் காதில் விழுமுன், நானே வெளியில் வந்தேன்.

ஜன நெரிசல் உள்ள இரண்டாம் குறுக்குத்தெரு எல்லா மழிந்த வனாந்தரமாகத் தோன்றியது.

### உதயசூரியனின் புதிய நிர்வாகிகள்

சென்ற 9-2-67-ல் திரு. வி. க. நினைவுப் பள்ளியில் திரு. முத்தழகன் தலைமையில் வெள்ளவத்தை உதயசூரியன் நாடக மன்றத்தின் புதிய நிர்வாகி தெரிவுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர்:- ஆ. யா. தேவதாசன், செயலாளர்: என்னெம்பி, துணைச் செயலாளர்: ஆ. கா. வேலன், விளம்பரச் செயலாளர்: எஸ். சேரம்பிள்ளை, பொருளாளர்: பி. எஸ். இளங்கோ. அமைப்பாளர்: பயிற்சி: என். முத்தையா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நூல் நிலையங்கள்

த. பத்மநாதன்

உலகில் மனித சக்திக்கு கல்வி என்னும் சக்தி அவசியமாகும். இந்த பரந்த அகிலத்தையே நோக்கினால், உலக ஏணியின் முதற்படியில் நிற்பது கல்வியாகும். இது யாவரும் அறிந்த உண்மை. இதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

நாம் எல்லோரும் பள்ளிக்கூடம் செல்லுகிறோம் ஏன் தெரியுமா? அனேக மாணுக்கர்களின் கருத்து இதுதான். நம் பள்ளிக் கூடத்தில் படித்து வேலை தேட வேண்டும் என்பது. ஆனால் இதை யாரும் ஏற்றுக்கொள்வீர்களா? இல்லை! நம்முடைய அறிவை விரிவுபடுத்தவே அங்கு செல்லுகிறோமே தவிர வேலை தேட அல்ல. இதை ஒவ்வொரு மாணுக்கர்களும் தங்கள் மனதில் பதித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

மாணவ, மாணவிகள் பள்ளிக்கூடத்தில் இருந்து பள்ளிக்கூட பாடத்தையே படிக்கிறார்கள். ஆனால் பொது விஷயம் தெரியாமல் அனேக மாணவ, மாணவிகள் திண்டாடக் கூடும். இந்த திண்டாட்டத்தை பூண்டோடு அழிக்கவே நமக்கு பள்ளிக்கூட நூல் நிலையம் உதவுகிறது.

நூல் நிலையம், அது எப்படிப்பட்டது? அங்கே இருப்பது என்ன? என்று சில மாணவர்கள் அலட்சியம் பண்ணக் கூடும். நூல் நிலையம் வாசிக்கும் இடம். நூல் நிலையங்களில் பல்வேறு பத்திரிகைகளும், சிறு மாணவர்களுக்காக சிறு, சிறு கதை புத்தகமும், விஞ்ஞானம் கலை ஆகிய சம்பந்தப்பட்ட நூல்களும், நகைச்சுவை ஊட்டும் புத்தகங்களும் இருக்கும் இடம் தான் நூல் நிலையமாகும்.

இப்படியான அறிவுப் புத்தகங்களை நன்கு படித்து அறிவை பெறுவது எளிதாகிறது. 'இறைக்கிற ஊற்று தான் சுரக்கும்' இதைப் போலவே நூல்களை படித்து அறிவை பெருக்கிக்கொண்டே இருக்கவேண்டும்.

நூல் நிலையங்களில் பொதுவாக இரண்டு முக்கிய விதிகள் உண்டு. ஒன்று நல்ல அறிவு வளர்ச்சிக்கென புத்தகங்களை நூல் நிலையங்களில் வைத்திருத்தல். மற்றது ஆபாசமான புத்தகங்களை நூல் நிலையங்களில் இருந்து அறவே ஒழித்தல்.

பாடசாலையிலுள்ள நூல் நிலையத்தால் ஏற்படும் நன்மைகள் அளப்பரியது. ஆகவே பாடசாலை நூல் நிலையத்தை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முன் வரவேண்டும்.

## கோபம்

கோபம் தாமச குணத்தின் அடையாளம். கோபத்தில் மனிதனுக்குப் பகுத்தறிவு போய்விடுகிறது. அனுமார் இலங்கையைக் கொளுத்தினார். ஆனால் சீதாதேவி இருக்குமிடத்தையும் அந்த நெருப்பு எரித்துவிடுமே என்ற எண்ணம் அவருக்கு அப்போது இராமற் போயிற்று.

ஸ்ரீ இராமகிருஷ்ணர்

## குருவும் சிஷ்யனும்

உள்ளத்தினுள்ளே அருள் உணர்வை யார் ஊட்ட வல்லவர் ஆகின்றாரோ அவரே குரு ஆகத் தகுதியுடையவர். எந்தச்சாதகன் ஒருவனுடைய உள்ளத்தில் அந்த அருள் உணர்வை அவர் கிளப்பிவிடுகின்றாரோ, அந்தச் சாதகனுக்குச் சிஷ்யன் என்று பெயர்.

—சுவாமி விவேகானந்தர்

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை இல்லாதவனுடைய வாழ்க்கை,

விநோபா குட்டிக்கதைகள்-8

# இதுவன்றோ கல்வி!

இரண்டாம் உலகப் பெரும் போர் நடந்து கொண்டிருந்தது. அப்போது நடந்த சம்பவம். ஜெர்மனியின் தளபதி ரோமேல் எகிப்து வந்தவுடன் இந்தியாமீது படையெடுக்க வேண்டுமென்று நினைத்தான். ஆனால் இதற்கு டாங்கிகள் தேவையாக இருந்தது. அவன் ஹிட்லரிடம் டாங்கிகள் அனுப்பும்படி கேட்டான். ஹிட்லர் தனது இராணுவ அதிகாரிகளைக் கூட்டி, இதைப் பற்றி விவாதித்தார். இதில் கலந்து கொள்ள ரோமேலும் அழைக்கப்பட்டிருந்தார்.

முடிவில் இவ்வளவு டாங்கிகளை அந்தப் போர் முனைக்குத் தர முடியாது என முடிவாயிற்று. இதன் மூலம் ஹிட்லர் பெரிய தவறு செய்து விட்டார், என உலக சரித்திரம் எழுதுபவர்கள்எழுதுவார்கள். ரோமேல் அவருடைய முதல் தரமான சேனாதிபதி. அவன் எகிப்து வரை வந்துவிட்டான். இந்தியா வரையிலும் அவனால் முன்னேற முடியும். இவ்வாறு நடந்திருந்தால் போரின் வடிவமே மாறியிருக்கும்.

நாள் தோறும் சண்டை நடைபெறும். டாங்கிகள் பழுதடையும். அவைகளை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டும். மாலையில் அவன் வேலை செய்வான். பகலில் அவன் போர் புரிவான். ஆனால் அவனுக்கு வெற்றி கிட்டவில்லை. கொஞ்சம்கொஞ்சமாக அவன் மிகுந்த திறமையோடு பின் வாங்கினான்.

அந்த சமயம் ஒரு பத்திரிகை நிருபர் ரோமேலை சந்திக்கப் போனார். அவர் சேனாதிபதியின் அலுவலகத்திற்குச் சென்றார். ஆனால் சேனாதிபதி அங்கு இல்லை. அவன் டாங்கிகளை பழுது பார்த்துக் கொண்டிருந்தான். பெரிய தளபதி, ஆனால் தானே பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். இந்த வேலையிலும் அவன் நிபுணன்.

இதுவன்றோ கல்வி!



# காந்திஜி செய்த தவறுகள்

இன்று மக்களால் புகழப்படும் மகாத்மா காந்தி, இந்தியாவின் சுதந்திரத்துக்காக 'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கிய காந்திஜீ — சிறு வயதில் பல தவறுகள் செய்தார். ஆனால் அவை பிழை என்று அறிந்ததும் திருத்திவிட்டார். அவைகளிற் சில கீழே தரப்படுகின்றன.

காந்திஜி பாடசாலையிற் படிக்கும் போது அவரின் நண்பரொருவரின் தீரச் செயல்கள் இவரை மயக்கின. நண்பர் நீண்ட தூரம் களைக்காமல் ஓடும் பொழுதும், அதிக உயரம் பாயும் போதும் காந்தி பிரமித்துப் போவார். ஒரு நாள் காந்தி தம் நண்பரிடம தானும் பல சாலியாக இருக்க விரும்புவதாகவும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் வினவினார். நண்பர் தான் இறைச்சி உண்பதனாலேயே இப்படித் திடகாத்திரமாக இருப்பதாகக் கூறினார். இதைக்கேட்ட காந்தி தானும் பெற்றோருக்குத் தெரியாமல் மாமிசம் உண்ண விரும்பினார். மறுநாள் இருவரும் ஒரு ஆற்றோரமாக ஆட்டிறைச்சியையும், ரொட்டியையும் உண்டனர். ஆனால் அன்றிரவு காந்தி பல பயங்கரக் கனவுகளைக் கண்டார். ஆடு ஒன்று தனது வயிற்றுள் இருந்து 'மே! மே' என்று கத்துவது போலவும், பெரிய கொம்புள்ள ஆடு ஒன்று தன்னை முட்ட வருவது போலவும் பல கனவுகள் கண்டார். இதனால் அன்று முதல் ஊன் உண்ணுவதை நிறுத்தி விட்டார்.

காந்தியும், அவரது உறவினர் ஒருவரும் புகைபிடிக்க ஆசை கொண்டனர். ஆனால் இவரிடம் பணம் கிடையாது. எனவே இவர்களின் சிறியதந்தையால் விட்டெறியப்பட்ட சிகரெட் துண்டுகளை எடுத்துப் புகைக்க ஆரம்பித்தனர். இது இவர்களுக்குஅதிக இன்பத்தை அளிக்காததால் இவர் பணியாட்களின் 'பாக்கட்'டிலிருந்து செப்புக் காசுகளைத் திருட ஆரம்பித்தார். இத்தீய செயல்கள் இறுதியில் இருவரைத் தற்கொலை செய்யுமளவிற்கு அழைத்து வந்து விட்டது. இதனால் சிகரெட் பிடிக்கும் எண்ணமும், அதற்காக பணியாட்களின் செப்புக் காசுகளைத் திருடும் எண்ணமும் இவரிடம் அறவே ஒழிந்து விட்டது.

ஒரு நாள் காந்தி தன் தமையனின் தங்கக் காப்பிலிருந்து ஒரு சிறிய துண்டை வெட்டி எடுத்து விட்டார். ஆனால் இதை அவரால் தாங்க முடியாது போய் விட்டது. இதனால் இனி ஒருக்காலும் திருடுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு, இதைத்தன் தந்தையிடம் கூறி மன்னிப்புக் கேட்டு விடுவது என்று எண்ணினார். ஆனால் அவருக்கு அவ்வளவு துணிவு வரவில்லை. உடனே ஒரு துண்டுக் கடதாசியை எடுத்து ஒரு கடிதம் எழுதினார். அதில் தான் செய்தது குற்றமென்றும் அதற்குத் தகுந்த தண்டனை தரும்படியும் கூறியிருந்தார். அதை வாசித்த தந்தையார் மகிழ்ச்சிப் பெருவகையால் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

— ஆ. ப. சந்திரநாதன்

# மாணவர் அரங்கு

## ஓட்டை போடு

தேர்தல் அதிகாரி: ''சுத்தியல், உளி இவற்றையெல்லாம் வெளியே வைத்து விட்டு உள்ளே போய் ஓட்டை(ப்) போடு!

கிராமவாசி: ''என்னங்க நீங்க, இந்தச் சாமான்கள் இல்லாமே எப்படிங்க ஓட்டைபோட முடியும்?

—அனுப்பியவர்:-
தஞ்சை ரமணி,
தஞ்சாவூர்

காலால் நடப்பதற்கு மாறாக தலையால் நடப்பதை ஒக்கும்.

—எமர்சன்

## பெரியவரா? நல்லவரா?

பெரியவர் நல்லவர் என்ற இரண்டு வார்த்தைகளும் ஒரே பொருள் உடையன என்பதை நான் இதுவரை கேட்டதில்லை. ஒருவர் பெரியவர் என்பதைக் கொண்டு நல்லவர் என்று கூறிவிட முடியாது.

—காந்தியடிகள்

தொகுப்பு:—
வி. கே. மூர்த்தி
மட்டுநகர்.

# விந்தகர் அடுத்த வாரம்



ஆசிரியர்:- நம்முடன் நெருங்கிப்பழகும் பிராணிகளின் பெயர்களை எழுதச் சொன்னால் புழுவையும் ஏன் எழுதியிருக்கிறாய்?

மாணவன்:- நமக்குக் கிடைக்கிற பணிசுக்குள்ளே இருந்து கொண்டு நம்மவாயோடு ஒவ்வொரு நாளும் நெருங்கிப் பழகுவது அது தானே சார்!

இளமதி.
எட்டியாந்தோட்டை,

# மூளைக்கு வேலை

என்னிடம் இரண்டு பாத்திரங்கள் இருக்கின்றன. ஒன்றில் ஒருபடிபால் இருக்கிறது. மற்றதில் ஒருபடி தண்ணீர் இருக்கிறது.

பால் பாத்திரத்திலிருந்து கால்படி பாலை எடுத்து தண்ணீர்ப்பாத்திரத்தில் ஊற்றுகிறேன். பிறகு தண்ணீர்ப் பாத்திரத்தில் உள்ள பாலும் நீருமான கலவையிலிருந்து கால்படி எடுத்து பால்பாத்திரத்தில் ஊற்றுகிறேன்.

முதலில், பால் பாத்திரத்திலிருந்து ஓரளவு பால் தண்ணீர்ப்பாத்திரத்துக்குப் போயிருக்கிறது. பிறகு ஓரளவு பாலும் தண்ணீரும், தண்ணீர்ப்பாத்திரத்திலிருந்து பால் பாத்திரத்துக்குப் போயிருக்கின்றன.

கேள்வியென்னவென்றால் எந்தப் பாத்திரத்திலிருந்து எது அதிகமாக மறுபாத்திரத்துக்கு மாறியிருக்கிறது? பால் பாத்திரத்திலிருந்தபாலா? தண்ணீர்ப் பாத்திரத்திலிருந்த தண்ணீரா? சொல்லுங்கள் பார்க்கலாம். விடை அடுத்த வாரம்!

கந்தரோடை.

# நான் யார்...?

நான் தலை நகரை டில்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு மாற்றினேன்; மங்கோலியருக்குப் பணம் கொடுத்து அவர்களின் படையெடுப்பை நீக்க முயன்றேன்; செம்பு நாணயங்களை வெளியிட்டேன். நான் யார்...?

★

வாதாபி கொண்டேன்; மாமல்லன் எனப் படுவேன். நான் யார்...?

★

வங்கம் கொண்டேன்; நர்மதையில் வீழ்ச்சியடைந்தேன். நான் யார்...?

★

நிழல் சாயாக் கோபுரம் கட்டினேன்; என் மகனும் சிறந்த வீரன். நான் யார்...?

★

எனது குரு அரிஸ்டாடில்; உலகம் முழுவதும் ஆள விரும்பினேன்; ஆனால் என் எண்ணம் முற்றுப்பெறவில்லை. நான் யார்...?

★

அறுவரோடு வந்தேன்; ஆனால் சீனத்திற்குத் தனித்துத் திரும்பினேன். நான் யார்...?

நாட்டை முன்னேற்ற விரும்பினேன்; முன்னேற்றினேன். அடிமைகளின் விடுதலைக்காகப் பாடுபட்டேன்; முடிவில் மூன்று ரவை (குண்டு) களுக்கு இரையானேன். நான் யார்...?

★

கலிங்கம் வென்றேன்; அன்பெனும் அம்பால் துளைக்கப்பட்டேன்; மதம் மாறி அம்மதத்தைப் பரப்பினேன். நான் யார்...?

★

என்னை மிளகுக்காக வியாபாரிகள் ஆண்டனர்; முடிவில் பலாத்காரத்தால் மீட்கப்பட்டேன். நான் யார்...?

★

பர்மாவில் பிறந்தேன்; ஆசிரியராக இருந்தேன்; மரியாதை என்பதுஎன் பெயர். நான் யார்...?

## விடைகள்

1. முகமது துக்ளக்;
2. நரசிம்மவர்மர்;
3. ஹர்ஷவர்த்தனர்;
4. இராஜ இராஜ சோழர்.
5. அலெக்ஸாண்டர்;
6. பாகியான்.
7. காந்திஜி;
8. அசோகர்.
9. கோவா.
10. யுதாண்ட்.

தொகுத்தவர்:-
கரவெட்டி. சா. அன்ரன் ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காட்சி தருகிறது!

கெயிட்டி (கொழும்பு) ராஜா (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்)

★ எஸ். எஸ். ஆர். ★ விஜயகுமாரி ★ விஜயலட்சுமி ★ அசோகன் ★ ஏ. ஏ. கே. தேவர் நடிக்கும்




# கைதியின் காதலி

## 9-ந் திகதி வியாழன் முதல்

செல்லமகால் (கொழும்பு) வின்சர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்) நீகல் (கண்டி) குமரன் (மன்னார்)

முத்துராமன், விஜயகுமாரி, காஞ்சனா, ஏ. வி. எம். ராஜன் நாகேஷ், எம். வி. இராசம்மா நடிக்கும்



# கொடி மலர்

---

## இப்பொழுது காட்சி தருகிறது!


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

நவா (கம்பனித்தெரு) விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) மோடேன் (பண்டாரவளை)

விஜிதா (அட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி)

திவோனி (நுாரளை)



அன்னை பிலிம்ஸ்

மக்கள் திலகம்

எம். ஜி. ஆர்.

பி சரோஜாதேவி

எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா, பண்டரிபாய், நடிக்கும்

# தாயின் மடியில்

---

## புகழ்மிகுந்த 5-வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராஜேஸ்வரா (மட்டுநகர்) சென்ட்ரல் (பருத்தித்துறை)

★ நாகேஸ்வரராவ் ★ சாவித்திரி நடித்த

# தேவதாஸ்



விரைவில் சிலோன் எண்டடெயின்மன்ட்ஸ் திரைகளில்! எதிர்பாருங்கள்!

● பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் ● நடிகையர் திலகம் சாவித்திரி

★ ஜெமினி கணேசன் ★ பாலாஜி ★ முத்துராமன் ★ அசோகன் ★ நாகேஷ் ★ ஆர். சகாதேவன் சிவகுமார் கே. பி. சுந்தரம்மாள் கே. ஆர். விஜயா ஜெயலலிதா மனோரமா மற்றும் பலர் நடித்த

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# கந்தன் கருணை

(ஈஸ்ட்மன் கலர்)

திரைக்கதை — வசனம்

டைரெக்ஷன்

ஏ. பி. நாகராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ. இலக்கத்தில் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.